# உதயன்


27

www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 039 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 20 வெள்ளிக்கிழமை (04/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


### பிரதம நீதியரசரைக் குற்றவாளியாக்கி

# தண்டிக்கும் அதிகாரம் ஏதும் தெரிவுக்குழுவுக்கு இல்லை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஜனவரி 4

பிரதம நீதியரசரைக் குற்றவாளி என அறிவித்து அவரைத் தண்டிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இல்லை என்ற உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானத்தை நேற்று அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரதம நீதியரசரின் 'ரிட்' மனுவை எதிர்வரும் 15ஆம் திகதிவரை ஒத்திவைத்தது.

தமக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை அமுலாக்கத்திற்கு இடைக்காலத் தடையுத்தரவைக் கோரி பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த 'ரிட்' மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீஸ்கந்தராஜா, அனில் குணரத்ன, டபிள்யூ. சலாம் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 78 (ஏ) பிரிவுக்கமைய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டபூர்வமானதா என மேன்முறையீட்டு

பார்க்க பக்கம் 4

## நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு மதிக்கவேண்டும்

### லண்டன் சட்டத்தரணிகள் குழு அறிக்கை

லண்டன், ஜன.4

இலங்கை பிரதம நீதியரசரின் மனு மீதான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இலங்கை அரசு மதிக்கும் என்றும், ஏற்றுக்கொள்ளுமென்றும் நாம் நம்புகிறோம் என லண்டன் வேல்ஸ் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் குழு அதன் அறிக்கையில் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரத்தினதும் சட்ட நிரூபணம் செய்யும் கிளைகளினதும் குறுக்கீடுகள் இன்றி, நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும். அதேவேளை, நேர்மையான நீதி நிர்வாகத்துக்கும், மனித உரிமைகள் ஊக்குவிப்புக்கும், பாதுகாப்புக்கும் பூர்வாங்க உத்தரவாதமும் தேவை என லண்டன்

பார்க்க பக்கம் 4

## நாடாளுமன்றமே முதன்மையானது

### அமைச்சர் கெஹலிய கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 4

நாட்டில் அரசியல் சாசனத்தை நினைத்த மாத்திரத்தில் ஒரே இரவில் மாற்றவோ அல்லது திருத்தவோ முடியாது.

முன்னாள் சபாநாயகர் காலஞ்சென்ற அநுராபண்டார நாயக்காவும் இன்றைய சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் வழங்கி உள்ள தீர்ப்புகளின்படி நாடாளுமன்றமே முதன்மையுடையது என்பதற்கு மாற்றுக் கருத்துகள் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

நேற்று ஊடகத்துறை

பார்க்க பக்கம் 25



வன்புணர்வின் பின்னர் சிறுமி கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வேலணை பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகத்துக்கு அருகே மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் மதகுருமார், மகளிர் அமைப்புகள், அரச அதிகாரிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (த-5-50)

## கல்வியில் இராணுவத் தலையீடு சர்வதேசத்திடம் முறையிட முடிவு

கொழும்பு, ஜன.4

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பாடசாலை மாணவர்களுக்குச் சிங்களமொழியைக் கற்பிப்பதற்கு இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த விவகாரம் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகளில் கூட கல்வி நடவடிக்கையில் இராணுவம் தலையீடுகளை மேற்கொள்ளாது. அப்படியிருக்கையில், ஜனநாயக ஆட்சிதான் இங்கு நடைபெறுகின்றது என மார்தட்டிக்கொள்ளும் இலங்கை அரசு, கல்வியிலும் இராணுவத்தைப் புகுத்துவது ஏன் என்றும் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

வடக்கில், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கு இரண்டாம் மொழியான சிங்களத்தைக் கற்பிப்

பார்க்க பக்கம் 4

## குளத்தில் நீராடிய மாணவன் நீரில் மூழ்கிச் சாவு

வவுனியா,ஜன 04

வவுனியாவிலுள்ள குளமொன்றில் தனது நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்த மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வவுனியா, திருநாவற்குளத்தைச் சேர்ந்த வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய பிரபாகரன் சஜீபன் (வயது-16) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் தனது வீட்டுக்கு அண்மையிலுள்ள வவுனியா கரையானகுளத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தனது நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட பதில் நீதிவான் அன்ரன் புனிதநாயகம் முன்னிலையில் மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-400)

## வழங்கிய வெள்ள நிவாரணத்தை திருப்பிக் கையளித்த குடும்பங்கள்

### போதுமானதாக இல்லாமையே காரணம்

மன்னார்,ஜன.04

வழங்கப்பட்ட வெள்ள நிவாரணம் வெறும் கண்துடைப்பே. 250 குடும்பங்களுக்கு வெறும் 25 கிலோ பருப்பு மட்டுமா வழங்குவது என்று கேட்டு, அரசு வழங்கிய வெள்ள நிவாரணத்தை அரசிடமே திருப்பி ஒப்படைத்தனர். மன்னார் குஞ்சுக்குளம் கிராம மக்கள் .

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கினால் குஞ்சுக்குளம் கிராமமே நீரில் மூழ்கி வெளித்

பார்க்க பக்கம் 4

## வடக்கு, கிழக்கில் காற்றுடன் மழை

யாழ்ப்பாணம், ஜன.4

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழையும், இடி முழக்கமும் அடுத்து வரும் 12 மணிநேரத்துக்கு காணப்படும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை

பார்க்க பக்கம் 4

## வீதிப் புனரமைப்பு பணியாளர் மினிபஸ் மோதியதில் சாவு

### புத்தூர்ச் சந்தியில் சம்பவம்

தென்மராட்சி, ஜன.4

ஏ-9 வீதியில் ஒன்றையொன்று முந்திச்செல்வதற்காக வேகமாக வந்த மினிபஸ் வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெற்ற பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதிப் புனரமைப்பை மேற்பார்வை செய்துகொண்டிருந்தவர் மீது மோதியதில் அவர் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலை புத்தூர்ச் சந்திக்கு

பார்க்க பக்கம் 4

## மாணவர் விடுவிக்கப்படுவர்; எப்போது என்பது தெரியாது

### கையை விரிக்கிறார் உயர்கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜன.4

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் விடுவிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்று கூற முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று வியாழக்கிழமை உயர்கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடு

பார்க்க பக்கம் 4

## பொதுநலவாய உச்சிமாநாட்டில் பிரிட்டன் பங்கேற்பது சந்தேகம்

லண்டன்,ஜன 04

இலங்கையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் உச்சி மாநாட்டில், பங்கேற்பதா என்பது குறித்து பிரிட்டன் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி கருத்து வெளியிட்டுள்ள அவர்-

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதாக இருந்தால், பிரிட்டன் எத்தகைய மட்டத்தில் பிரதிநிதிகளை அனுப்பும் என்பதை இப்போதே கூற முடியாது.ஏனைய பொதுநலவாய நாடுகளைப் போன்றே இலங்கையையும் பிரிட்டன் அவதானிக்கும்-

மனித உரிமைகள், நல்லாட்சி போன்ற பொதுநலவாயத்தின் பண்புகளை இலங்கை

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை மாணவரை உடனடியாக விடுவியுங்கள்

## பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு,ஜன 04

பயங்கரவாதப் புலனாய்வு பிரிவின் தடுப்பிலுள்ள யாழ்.பல்கலைகழக மாணவர்கள் நால்வரையும் அதிகாரம் வாய்ந்தோர் விடுவிப்பதன் மூலம் சர்வதேச சமுதாயத்துக்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டைச் சுமத்த இடமில்லாமல் செய்யமுடியும். என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்தது.

இந்த மாணவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கவும் இல்லை. அவர்கள் முன்னர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கவும் இல்லை. எனவே, இவர்களை விடுதலை செய்து பல்கலைகழகங்களை இயங்க வழிசெய்யவேண்டும். என்று அந்த சம்மேளனத்தின் பேச்சாளர் டாக்டர் மஹிந்த மெண்டிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு இலங்கையை கேலிக்கூத்தாக்கி விடக்கூடாது. அரசு மக்களின் உரிமைகளை மீறுகின்றது எனச் சர்வதேச சமூகம் குற்றஞ்சுமத்துவதற்கு இடமளிக்கக்கூடாது.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள நிலைமையினால் யாழ்ப்பாண மக்களும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பயப்பீதியில் உள்ளனர்.

இவர்கள் கெடுபிடிக்கு முகம்கொடுத்துகொண்டிருக்கின்றனர். எழுந்தமானமாகக் கைதுகள் இடம்பெறும்போது அங்கு வழமை நிலைமை இருக்கமுடியாது.

நவம்பரில் மோதல் ஏற்பட்டதிலிருந்து பல்கலைக்கழக நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் பல்கலைகழக மாணவர்கள் பலரை விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதுவரை 50 பேர் வரையில் யாழ்ப்பாணத்தில் கைதாகியுள்ளனர். அவர்களின் குடும்பத்தினர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்-என்றார். (த)

> அரசு இலங்கையை கேலிக்கூத்தாக்கி விடக்கூடாது. அரசு மக்களின் உரிமைகளை மீறுகின்றது எனச் சர்வதேச சமூகம் குற்றஞ்சுமத்துவதற்கு இடமளிக்கக்கூடாது.

## மருத்துவர் ஜெயக்குமாரின் வீட்டுக்குப் பொலிஸ் காவல்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் மருத்துவ நிபுணர் ஜெயக்குமாரை அச்சுறுத்தும் விதமாக அவரது வீட்டின் முன்னால் இரு மர்ம நபர்கள் நடமாடியதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து மருத்துவ நிபுணரின் வீட்டுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி இரவு 9.30 மணியளவில் மருத்துவரின் வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குத் தயாராகிக்கொண்டிருந்தனர். அப்போது அவரது வீட்டின் முன் வாசல் பகுதியில் இருவர் உரையாடும் சத்தம் கேட்டுள்ளது.

இந்தச் சத்தத்தைக் கேட்டதும் மருத்துவரின் வீட்டிலுள்ளவர்கள் மின்குமிழை ஒளிரச் செய்து பின்னர் கதவைத் திறந்து வெளியே சென்றுள்ளனர். இதன்போது குறித்த மர்ம நபர்கள் அங்கிருந்து ஓடித்தப்பியுள்ளனர்.

குறித்த இரு மர்ப நபர்களும் வீட்டின் வெளியே நின்று இதுதான் அந்த டாக்டரின் வீடு என்று பேசிக்கொண்டதாக புற்றுநோய் மருத்துவ நிபுணர் என். ஜெயக்குமாரின் வீட்டுக்கு அருகில் வசிப்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து புற்றுநோய் மருத்துவ நிபுணரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ நிபுணரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து அவரது வீட்டுப் பகுதியில் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டள்ளதுடன் அவரது வீட்டுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5-4)

## கடல் ஆமை பிடித்தவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.4

கொழும்புத்துறைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடல் ஆமை பிடித்த ஒருவர் நேற்று ஒருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டார். என கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி தெரிவித் தார்.



இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:

பிடிக்கப்பட்ட கடல் ஆமையுடன் கொழும்புத் துறைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீரியல்வளத்துறைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபர் காக்கை தீவைச் சேர்ந்தவர். பூநகரி கடற்பரப்பில் கலங்கண்டி வலையில் ஆமை சிக்கிய நிலையில் அதனைப் பிடித்ததாக சந்தேகநபர் கூறினார்.

இவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது இந்த வழக்கினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த நீதிமன்றம் கடல் ஆமையை ஆழ்கடலில் விடுமாறும் உத்தரவிட்டது.

15 கிலோ எடை கொண்ட இந்தக் கடல் ஆமை மண்டைதீவுக் கடலில் திணைக்கள உத்தியோகத்தர்களால் விடப்பட்டது-என்றார். (த-13)

## பட்டாசு வெடித்ததில்'3 வயதுச் சிறுமி சாவு

புத்தளம் பகுதியில் பட்டாசு வெடித்து மூன்று வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். கடந்த 25ஆம் திகதி முக்குக்குவாவ வெவ பகுதியில் வீட்டு முற்றத்தில் கிடந்த பட்டாசு ஒன்றை எடுத்துச் சிறுமி வாயினால் கடித்துள்ளார்.இதன்போது அந்தப் பட்டாசு வெடித்ததால் வாயில் படுகாயம் ஏற்பட்டு சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுமி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார். (த)

## கடத்தப்படும் சிறுவரைப் பாதுகாக்கத் திட்டம்

ஆட்கடத்தலுக்கு ஆளாகித் தவிக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கென புதிய மத்திய நிலையத்தை அமைக்க சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்த நிலையம் அமைக்கப்பட்ட பின், ஆட்கடத்தலுக்கு உள்ளாகி அகப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் சிறை மற்றும் தடுப்புக் காவலில் இருக்க வேண்டிய நிலை ஏற்படாது.

ஆட்கடத்தலுக்கு உள்ளாகும் பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஏற்பாட்டுக்கும் இந்தத் திட்டம் வலுச் சேர்க்கவுள்ளது. அத்துடன் குறித்த நிலையம் அமைக்கப்படும் இடத்தைப் பாதுகாப்பு கருதி வெளியிடாதிருக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. (த)

## அமைச்சர் வீரவன்சவின் கோரிக்கை

பதில் பிரதம நீதியரசர் ஒருவரை உடனடியாக நியமிக்கும்படி ஆளும் மக்கள் சுதந்திரக் முன்னணியின் முக்கிய பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே அக்கட்சியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றப் பிரேரணை கொண்டுவந்து அவரை பதவிநீக்கும் வரை, பதில் பிரதம நீதியரசரொருவரை ஜனாதிபதி நியமிக்கமுடியும். அதற்கான சட்டவரையறையும் இருக்கின்றது.

உலகில் இன்று நீதிமன்றங்களைவிட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்திற்கே அதிக அதிகாரங்கள் உள்ளன. இலங்கையின் தற்போதைய நாடாளுமன்றம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சாட்சியாளராகச் செல்வதற்கே பிரதம நீதியரசர் முயற்சிக்கின்றார்.

அதேவேளை, சம்பந்தன் போன்றோர் கிளிநொச்சியில் நாடாளுமன்றத்தை உருவாக்க நினைத்தனர். எனவே, அவர்களுக்கு நாடாளு மன்றத்தின் அதிகாரம் குறித்து கரிசனை கிடையாது. மேலும், தம்மால் ஆட்சியமைக்க முடியாது என்பது ஜே.வி.பிக்குத் தெரியும். இலங்கையில் நீதி, சட்டம் ஒழுங்கில் சில தனிநபர்களது விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக நீதித்துறை செயல்படுகின்றது.

இந்த நாட்டில் நடைபெற்ற கொடூர போரை வென்றெடுத்த பாதுகாப்புப் படையினர்களுக்குக் களங்கம் ஏற்படுத்தி அதற்காக ஒரு சர்வதேச விசாரணையை மேற்கொள்ளவே இந்த நாட்டிலுள்ள சிலர் முயற்சிக்கின்றனர். அவர்களின் வலையில் பிரதம நீதியரசரும் விழுந்துள்ளார்.

செலிங்கோ கிரடிட் கார்ட் வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த ஷிராணி திலக்கவர்தனவை அதிலிருந்து நீக்கி அந்த வழக்கு விசாரணையை ஷிராணி பண்டாரநாயக்க மேற்கொண்டார். இதனால் செலிங்கோவில் வைப்பிலிட்ட 900 பேருக்கு இன்னும் நீதிகிடைக்க வில்லை. மாறாக பிரதம நீதியரசர் செலிங்கா வீடமைப் புத் திட்டத்தில் வீடொன்றைப் பெற்றுள்ளார்.

அவருடைய கணவர் தேசிய சேமிப்பு வங்கியில் நிதிமோசடி செய்தபோது நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஜே.வி.பியினருமே பிரதம நீதியரசரின் பதவியை நீக்கி அவரது கணவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோஷமிட்டனர். அவர்கள் தான் இன்று பிரதம நீதியரசருக்கு ஆதரவாக பேசுகின்றனர்.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்குப் பின்னால் பாக்கிய சோதி சரவணமுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சுமந்திரன், சம்பந்தன் மற்றும் வெலியமுன ஜே.வி.பி. அநுரகுமார திசாநாயக்க போன்றோர் நிற்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## 2014 ஆம் ஆண்டில் ஐ.தே.கவின் ஆட்சி அமையும்

2014 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி இலங்கையில் ஏற்படுத்தப்படும். அதற்காக ரோமில் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து சிறிகொத்தா செல்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று இத்தாலியில் வைத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், நீதித்துறை சுயாதீனத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தாலிக்கு பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்புமுன் ரோமிலுள்ள ஐ.தே.கட்சி ஆதரவாளர்களை நேற்றுச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இவ்வருடம் நாம் பல முக்கியமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இதன்படி வருடத்தின் முதல் ஆறுமாத காலத்தில் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் எமது கட்சியின் கிளைக் காரியாலயங்கள் மற்றும் நிறைவேற்றுக் குழுக்கள் ஆகியவற்றை நிறுவுவதுடன், தற்போது நிறுவப்பட்டுள்ள நிறைவேற்றுக் குழுக்களை மீள உயிர்ப்பிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளோம். இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருந்தாலும், அது சுதாரண விடயமல்ல.

மக்களைத் துன்பத்துக்குள்ளாக்கும் - அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச்சுமைக்கு எதிராகவும், நீதித்துறை, சுயாதீனம் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாடு முழுவதும் பெரும் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

இந்தப் போராட்டங்கள் களுத்துறையில் ஆரம்பிக்கப்படும். இதற்கு ஏனைய அனைத்து எதிர்க்கட்சிகளினதும் ஒத்துழைப்பையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

2014ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை இலங்கையில் நிலைநிறுத்த எம்மால் முடியும். இதற்காக இவ்வருட ஆரம்பத்தில் ரோமில் வேலைத்திட்டங்களை ஆரம்பித்து சிறிகொத்தாவுக்குச் செல்வேன் - என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (த-சி)

## மாநகரசபை கட்டடத்துக்கு 650 மில்லியன் ரூபா தேவை

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி மாநகர சபையிடம் இல்லை.புதிய கட்டடம் அமைக்க ரூபா 650 மில்லியன் ரூபா தேவை என யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

அரசின் நிதியில் இருந்தே மாநகர சபையின் புதிய கட்டடத்தை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான நிதியை அரசு வழங்கவுள்ளது எனக் குறிப்பிட்ட முதல்வர் இந்த ஆண்டில் புதிய கட்டடத்துக்கான ஆரம்ப வேலைகள் இடம்பெறும் எனவும் கூறினார். (த-7)

## சிறுமியின் கொலை தொடர்பில் இதுவரை எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், ஜன.04

மண்டைதீவில் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட 4 வயதுச் சிறுமியின் உயிரிழப்புத் தொடர்பில் இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம். ஜெப்றி தெரிவித்தார்.

மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி 4 வயதுச் சிறுமியொருவர் வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். குறித்த சிறுமியின் சடலம் அவரது வீட்டுக்கு அருகிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் போது சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் மேலதிக பரிசோதனைகளுக்காக சிறுமியின் உடல் இழையம் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தது.

மக்களிடையே பெரும் அதிர்ச்சியை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருந்தது. குறித்த சிறுமியின் சாவுக்கு நீதி வேண்டி மண்டைதீவில் நேற்றுப் போராட்டமும் நடத்தப்பட்டிருந்தது.

சிறுமியின் கொலை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லையென்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு அபிவிருத்திக்கு ரூ.20 மில்லியன்

## சபைத் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.4

*பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும் கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு இந்த வருட அபிவிருத்தித் திட்டங்களுக்கென 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப.சீவரத்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.*

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பனை ஆராய்ச்சி நிறுவனம் இந்தவருடம் ஆரம்பகட்ட ஆராய்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. அவற்றுக்கான முன் ஏற்பாடுகள் கடந்த வருடம் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பகுப்பாய்வு ஆய்வு கூடம், உணவும் தொழில் நுட்பத்துறை சார்ந்த ஆய்வு கூடம், நுண்ணியிரியல் ஆய்வு கூடம் ஆகிய மூன்று பிரதான ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வருடம் பனை வளம்சார் கைத்தொழிலுக்கு உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய ஆராய்ச்சிகள் இந்த திட்டத்தில் இணைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

பனைசார் உற்பத்திகளின் தரம், அவற்றின் பாவனைக் காலங்களை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிக்குரிய தரத்துக்கு உயர்த்துதல், பனை ஓலையில் இருந்து உருவாக்கப்படும் பொருள்கள் பழுதடையாமல் நீண்டகாலம் பேணிப் பாதுகாப்பதற்கான ஆராய்ச்சிகள், பனையிலிருந்து பெறப்படும் பதநீர் மற்றும் கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் ஆராய்ச்சி, பனை நாற்றுக்கள் மற்றும் விதைகளின் முளைதிறனை அதிகரிக்கும் ஆராய்ச்சி, பனை வளம் சார்ந்த உற்பத்திகள் பற்றிய புள்ளி விவரவியல் சார்ந்த ஆராய்ச்சி, பனங்களித் இருந்து பெறக்கூடிய அத்தியாவசிய பொருள்களை உருவாக்கலும் அதை பிரயோகப் படுத்தலும் சம்மந்தமான ஆராய்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அவற்றுடன் பனைவளம் சார்ந்த உற்பத்திகளான போத்தல் கள், பனங்கட்டி, பனங்களி, பனஞ்சாராயம், பனம்பானம், ஆகியவற்றுக்குரிய பகுப்பாய்வு அறிக்கைகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதோடு ஆலோசனைகளையும் பனை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கி வருகிறது.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் மீள் அபிவிருத்தி மேற்கொள்வதற்காக கட்டட புனர்நிர்மாணத்துக்காக இலங்கை அரசால் 21 மில்லியன் ரூபாவும், ஆய்வு கூட உபகரணங்கள், தளபாடங்கள் இரசாயனப் பொருள்கள் மற்றும் அவசியப் பொருள்களுக்காக இந்திய அரசால் 70 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டது என்று அவர் மேலும் கூறினார்.

இந்த ஆராய்ச்சி நிலையமானது கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-13)

## வீட்டுத்திட்டக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2009 இற்குப் பின்னர் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு முதலாம்கட்ட வீட்டுத்திட்டக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று பிரதேச செயலர் க.முரளீதரன் தெரிவித்துள்ளார். (ம-100)

## வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைப் பகுதியில் வெங்காயச் செய்கை திடீரென பெய்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு, நாவலடி, கம்பர்மலை ஆகிய பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயச் செய்கையே இவ்வாறு மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இந்தப் பாதிப்பை அந்தப் பிரதேச விவசாய போதனாசிரியர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் நஷ்டத்தை எதிர்கொண்ட வெங்காயச் செய்கையாளரின் விவரங்களையும் கோரியுள்ளார். (ம-50)

## பனந்தோப்புக்களில் பனை மர வளர்ப்பு

வடமராட்சி, ஜன.4

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மாமுனை, குடத்தனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பனந்தோப்புக்களில் பனை மரங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

மாமுனையில் 32 ஏக்கரிலும் குடத்தனையில் 10 ஏக்கரிலும் நடப்பட்டுள்ள பனை விதைகள், பனை மரங்களாக வளர்ச்சியடைந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இந்தப் பனந்தோப்புகளுக்கு பாதுகாப்பாக முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மாமுனை பனந்தோப்புக்குள் ஊடு பயிராக மரமுந்திரிகை காணப்படுகிறது. தற்போது அறுவடையாகும் மரமுந்திரிகை, மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் கே. துரைரத்தினம், இலங்கை பனை அபிவிருத்திச் சபை உருவாக முன்னரேயே மாமுனையில் 500 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து பனம் விதைகளை நட்டு வைத்து பனந்தோப்பை ஆரம்பித்து வைத்திருந்தார்.

அத்துடன் இந்தப் பனந்தோப்புக்குள் மரமுந்திரிகையை ஊடு பயிராக பயிரிடவும் திட்டமிட்டிருந்தார்.

இலங்கை பனை அபிவிருத்திச் சபை உருவானதும் மாமுனை பனந்தோப்பை பொறுப்பேற்றது.

குடத்தனை பனந்தோப்பு இலங்கை பனை அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## குளிரால் இறக்கும் கால்நடைகள்

கடற்கரையை அண்டிய தீவகப் பிரதேசங்களில் குளிர்தாங்க முடியாமல் கட்டாக்காலி மாடுகள் இறந்து வருகின்றன.

வேலணை-புங்குடுதீவு பிரதேசத்துக்குட்பட்ட கட்டாக்காலி மாடுகளே குளிர்தாங்க முடியாமல் இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை தீவகப் பிரதேசத்தில் கன்றுக் குட்டிகள் உட்பட 13 மாடுகள் குறுங்காலங்களில் இறந்துள்ளன.

குளிர்தாங்க முடியாமல் நோய் வாய்ப்பட்டு இறக்கும் மாடுகளை வேலணை பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் உரிய முறையில் அகற்றி வருகின்றனர்.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் கடும் குளிர் காரணமாகவும் பின்னர் வறட்சி காரணமாகவும் 21 மாடுகள் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## 2012 புதிய வாக்காளர் பட்டியல் பார்வைக்கு

2012 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியலை யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்திலும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் பார்வையிட முடியும் என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் இந்த மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.

**2012 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் இந்த மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.**

இதன் பிரகாரம் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் 21 ஆயிரத்து 521 பேரும், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் 45 ஆயிரத்து 189 பேரும், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் 61 ஆயிரத்து 184 பேரும், மானிப்பாய் தேர்தல் தொகுதியில் 51 ஆயிரத்து 704 பேரும் கோப்பாய் தேர்தல் தொகுதியில் 53 ஆயிரத்து 615 பேரும்,-

உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் 37 ஆயிரத்து 922 பேரும், பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் 35 ஆயிரத்து 51 பேரும், சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் 49 ஆயிரத்து 475 பேரும், நல்லூர் தேர்தல் தொகுதியில் 42 ஆயிரத்து 461 பேரும், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் 28 ஆயிரத்து 581 பேரும், கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் 68 ஆயிரத்து 589 பேருமாக 4 இலட்சத்து 95 ஆயிரத்து 292 வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் வைக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலிலும் மாவட்ட செயலக தேர்தல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்காளர் பெயர்ப்பட்டியலிலும் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## மண்டைதீவு ஆதன பதிவு வேலைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.4

மண்டைதீவு உப அலுவலக ஆதன பதிவு வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி தைப்பொங்கலுக்குப் பின்னர் மண்டைதீவு உப அலுவலகத்தில் ஆதன பதிவுகள் மீண்டும் இடம்பெறும்.

இவ்வாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா கூறியுள்ளார்.

தற்போது எமது சபையில் கணிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் இரு வாரத்தில் முடிவடையும்.

இதன் பின்னர் மண்டைதீவு ஆதன பதிவு வேலைகள் இடம்பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவுபெறும்.

அதன் பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்கள பிரதம விலை மதிப்பீட்டாளர் கு.ஜெகநாதனின் ஆலோசனைக்கு இணங்க இரண்டாம் கட்டப் பணிகள் இடம்பெறும் என்று அவர் மேலும் கூறினார். (ம-50)

## நல்லூர் ஆலயச் சூழலில் இடம்மாறுகிறது காவலரண்

யாழ்ப்பாணம் ஜன -4

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் திடீரென முளைத்த இராணுவக் காவலரணை உடனடியாக அந்த இடத்தில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை காலையில் இந்தக் காவலரண் கோயில் வீதியிலுள்ள பால் சாலைக்குச் சமீபமாக நகர்த்தப்பட்டது. யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்கவுடன் முதல்வர் தொடர்பு கொண்டதை அடுத்து தற்போது இந்தக் காவலரண் இடம் மாறுகின்றது என்று கூறப்பட்டது. எனினும் நல்லூர் ஆலயச் சூழலில் காவலரண் அமைவதையிட்டு பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (ம-7)

## இடைநிறுத்தப்பட்ட வீதிகளது திருத்தப் பணிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளின் புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த வாரத்தில் பெய்த மழையாலும் மற்றும் பணியாளர்களுக்கான வருட இறுதி விடுமுறையாலும் வீதிகளின் புனரமைப்பு பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது இந்த வீதிகளின் புனரமைப்பு மற்றும் அகலிப்பு பணிகள் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி போன்ற பிரதான வீதிகளின் புனரமைப்பு அகலிப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். நகரில் சத்திரச் சந்தியில் இருந்து செல்லும் கே.கே.எஸ். வீதியின் அகலிப்புப் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

இந்த நிலையில் இந்த வீதியூடாக போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**ஜெயந்திவிழா**

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 160ஆவது ஜெயந்தி விழா மாலை 4 மணிக்கு உரும்பிராய் இராம கிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும் வலி. கிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி ஜானகி கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம-13)

**ஒளிவிழா**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் முற்பகல் 10 மணிக்கு ஒளிவிழா நிகழ்வும், மாணவர்களுக்கான அறக்கொடை அன்பளிப்பும் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் தலைவர் இ.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற உள்ளன. (ம-13)

# அராலி - சங்கானை வீதி திருத்தப்படுவது எப்போது?

யாழ்ப்பாணம், ஜன.4

கடந்த 5 வருடங்களாக கோரிக்கைகள் விடப்பட்டு வருகின்ற போதும் அராலி-சங்கானை வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை என்று வலி. மேற்குப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உட்பட்டது அராலி - சங்கானை பிரதான வீதியாகும்.

இந்த வீதி அராலி உப தபால் அலுவலகத்தில் இருந்து ஆரம்பித்து செட்டியார் மடம் ஊடாக சங்கானையைச் சென்றடைகின்றது.

எனினும் அராலி முதல் செட்டியார்மடம் வரையான இந்த வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு படுமோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

இந்தஆண்டிலாவது குறித்த வீதிக்கு வீதி அபிவிருத்தி திணைக்களம் கூடிய முக்கியத்துவம் கொடுத்து புனரமைப்புச் செய்ய வேண்டும் என வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கூறியுள்ளார். (ம-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
களை விரைவில் ஆரம்பிக்குமாறு உயர்கல்வி அமைச்சர் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதானால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனப் பல்கலைக்கழக சமுகத்தினர் உயர்கல்வி அமைச்சரிடம் கூறினார்கள்.

இதற்குப் பதிலளித்த உயர்கல்வி அமைச்சர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்று கூறமுடியாது - என்று குறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக கல்விச் செயற்பாடுகளை மீண்டும் விரைவாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் அமைச்சர் பல்கலைச் சமூகத்திடம் தெரிவித்தார் என்று சந்திப்பில் கலந்து கொண்ட ஒருவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-4)

## கல்வியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பதற்கு இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குறித்த பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் சீருடையுடன் கற்பித்தல் நடவடிக்கைக்குச் சென்றுள்ளனர். அத்துடன், மாகாணக் கல்வி வலயம் இதற்கான அனுமதியை தமக்கு வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்தத் திடீர் நடவடிக்கையால் மாணவர்களும், பெற்றோரும் அதிருப்தியடைந்துள்ளனர். இந்நிலையில், சிங்களமொழியைக் கற்பிப்பதற்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச் சந்திரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பூர்வீக மண்ணிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டுமென நாம் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தோம். தற்போது இப்பிரதேசத்தில் கல்வி நடவடிக்கையிலும் இராணுவம் மூக்கை நுழைத்துள்ளது.

பாடசாலைக்குள் நுழைவதற்கான அதிகாரம் இராணுவத்தினருக்குக் கிடையாது. அப்படியிருக்கையில், கல்வி கற்பிப்பதற்கு ஏன் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும்? கல்வி கற்பிப்பவர்களுக்குத் தகுதி இருக்கவேண்டும்.

அவர்களுக்கு விசேட பயிற்சியளித்திருக்க வேண்டும். இதற்கென பல விதிமுறைகள் உள்ளன. இவற்றையெல்லாம் பின்பற்றாமல் திடீரென பாடசாலைக்குள் இராணுவம் நுழைவதை ஆக்கிரமிப்பு என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் படிப்பிக்கவேண்டுமாயின், அரசு தகுதியுள்ள அதிகாரிகளை நியமிக்கவேண்டும். அதை விடுத்து இராணுவத்தைப் புகுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக தமிழர் இராணுவத்தில் இருந்திருந்தால் அவர்கள் தென்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று தமிழ்மொழியை கற்பிப்பதற்கான அனுமதியை அரசு வழங்கியிருக்குமா அல்லது அதற்கு அமைச்சர்கள்தான் இடமளித்திருப்பார்களா? வடக்கில் இராணுவத் தளபதிகூட இன்று சட்டம் பேசுகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் அவர்களுக்கு விளங்காதா?

இராணுவ ஆட்சி நடைபெறும் 'மியன்மார்' போன்ற நாடுகளில்கூட பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு இராணுவத்தினர் நிமியக்கப்பட்டுள்ளனர் என எவ்வித தகவலும் இல்லை. ஆனால், ஜனநாயக ஆட்சி நிலவுகின்றது என ஆட்சியாளர்களால் மார்தட்டிக்கொள்ளப்படும் இலங்கையில், இவ்வாறெல்லாம் நடைபெறுகின்றது. இராணுவத்தின் இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்பதுடன், இந்த விடயத்தை சர்வதேசத்தின் கவனத்துக்கும் கொண்டுசெல்வோம்.

வடக்கில் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வாக இருந்தால் என்ன, மரணமாக இருந்தால் என்ன அனைத்து விடயங்களிலும் இராணுவத்தின் தலையீடு உள்ளது - என்றார்.

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மதியம் விடுக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கிழக்கு கடலிலிருந்து வீசும் கடும் காற்று காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வானம் மப்பும் மந்தாரமாகவும் காணப்படும்.

அத்துடன் சில வேளைகளில் இடியுடன் கூடிய மழையும் கடும் காற்றும் வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் தென் கிழக்கு கடலில் கடல் கொந்தளிப்பாக இருப்பதுடன் கடும் காற்று வீசும் என்றும் கூறப்பட்டுள்ளது. (த-5)

## வீதிபுனரமைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அருகில் இடம்பெற்றது.மினிபஸ் சில்லு ஏறியதால் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட இவர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனின்றி மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாத்தறையைச் சேர்ந்த நிஹாஸ் (வயது -38) என்ற வேலை மேற்பார்வையாளரே இவ்வாறு மரணமானவராவார்.

வாகனச் சில்லு உடம்பில் ஏறியதால் நெஞ்சு எலும்புகள் உடைந்து அதிகளவு இரத்தம் வெளியேறியதால் மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வாகனச் சாரதியை கொடிகாமம் பொலிஸார் கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். (த-9)

## நீதிமன்றத்தின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வேல்ஸ் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் குழு மீள வலியுறுத்தியுள்ளது.

பாரதூரமான ஒழுங்கீனங்கள் இன்றி, நீதிபதிகளைப் பதவிகளிலிருந்து நீக்கமுடியாது. பதவி நீக்கத்துக்கான முடிவும் நீதித்துறை முடிவாகவே இருக்கவேண்டும். சுயாதீனமான பாரபட்சமற்ற விசாரணையின் மூலமாகவே இம்முடிவும் எட்டப்படவேண்டும். அதேவேளை, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு நேர்மையான விசாரணைக்கே உட்படுத்தப் படவேண்டும் என்றும் மேற்படி சட்டத்தரணிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொண்ட விசாரணை மீது நாம் கூடிய கவனம் செலுத்துகின்றோம் எனக் குறிப்பிட்டுள்ள இக்குழுவினர், மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

★ நாடாளுமன்றத் தெரிவுக்குழு நீதித்துறையின் பங்களிப்புக்கு மாறாக அரசியல்வாதிகளையே உள்ளடக்கியுள்ளது. இதில் அரசைச் சேர்ந்தோரே பெரும்பான்மையினராக உள்ளனர். பிரதம நீதியரசரின் முடிவுகள் அரச விவகாரங்களைப் பாதிக்கின்றன என்ற கருத்து தலையெடுத்த சமயத்தில் இக்குழு நிறுவப்பட்டுள்ளது.

★ இந்த விசாரணை பகிரங்கமாக நடத்தப்படவில்லை. அதேவேளை, சுயாதீனமான சர்வதேச அவதானிகளும் அனுமதிக்கப்படவில்லை.

★ நேர்மையான விசாரணைக்குரிய அடிப்படைக் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. இவை உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன. அவகாசம் அளிக்கப்பட்டால் வெளியிடப்பட்ட சாட்சியம், போதிய கால அவகாசமில்லாத ஏற்பாடு, சாட்சிய பரிசீலனைக்கான உரிமை முழுமையாக வழங்கப்படாமை ஆகிய குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன.

★ பிரதம நீதியரசரின் கருத்துகளையோ, நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களின் கருத்துகளையோ செவிமடுக்க இத்தெரிவுக்குழு தவறியுள்ளது. அத்துடன், 24 மணி நேரத்துக்குள் பிரதம நீதியரசரை குற்றவாளியாகக் கண்டு அறிக்கை விடுத்துள்ளது.

இந்த அபிப்பிராய பேதங்களுக்குத் தீர்வு காணப்படும்வரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையின்படி செயற்பட வேண்டாமென்றும் நீதித்துறையின் சுயாதீனத்தை மதிக்குமாறும் நாம் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கண்டுபிடிப்புகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து, பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார் என்பதையும் நாம் அறிவோம். -இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மதிக்கப்படும் என்றும், கைக்கொள்ளப்படுமென்றும் நாம் நம்புகின்றோம். இவ்வாறு லண்டன் வேல்ஸ் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## வழங்கிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தொடர்பற்றுக் காணப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தில் மன்னார் குஞ்சுக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு நிர்கதியாகியிருந்தன.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பொது மக்கள் அறிவித்த போது மடு உதவி அரச அதிபர் ஊடாக மன்னார் மேலதிக அரச அதிபரினால் ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால் சுமார் 250 குடும்பங்கள் உள்ள கிராமத்துக்கு 750 கிலோ அரிசி ,25 கிலோ பருப்பு ,50 ரின் மீன், 50 கிலோ நெத்தலி ,45 கிலோ உருளைக்கிழங்கு ,30 கிலோ வெங்காயம், 40 பக்கட் உப்பு, மற்றும் அத்தியவசிய பொருள்கள் அடங்கிய 30 பொதிகள் மாத்திரமே அனுப்பிவைக்கப்பட்டன.

இந்தப் பொருள்களை எத்தனை குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வெறும் அரசியல் இலாபங்களுக்காகவும் கண்துடைப்புக்காகவும் இப்பொருள்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த மக்கள் அனைத்துப் பொருள்களையும் சிறிய வாகனத்தில் கொண்டு சென்று மன்னார் மாவட்ட செயலகத்தில் கையளித்ததோடு அரச அதிபர் சரத் ரவீந்திரவிடம் மனுவொன்றையும் கையளித்தனர். (த-16-12)

## தண்டிக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நீதிமன்றத்தால் உயர்நீதிமன்றத்திடம் கோரப்பட்டிருந்த விளக்கத்திற்கு உயர்நீதிமன்றம் வழங்கியிருந்த சட்டவியாக்கியானத்தையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

அதில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளையை சட்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, அந்த நிலையியற் கட்டளையின் 78 (ஏ) பிரிவுக்கமைய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்ட அதிகாரம் கொண்டதல்ல என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன், உயர்நீதிமன்றத்தின் சட்ட வியாக்கியானத்தில் உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை சட்ட அதிகாரம் கொண்ட நிறுவனமே விசாரிக்கவேண்டும். இல்லையேல், அது நீதியரசரின் உரிமை மற்றும் நீதிமன்ற கட்டமைப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்தது.

இந்த அடிப்படையில் பிரதம நீதியரசரொருவரைக் குற்றவாளியாக அறிவித்து அவரைத் தண்டிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கில்லை என்பது தற்போது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

''ஒரு நீதியரசரின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவறான நடத்தை அல்லது தகுதியின்மை சம்பந்தமாகவும் அது தொடர்பான சகல விடயங்கள் தொடர்பாகவும் விசாரிப்பதற்கு ஒரு மன்றினை நிறுவுதல், குற்றச்சாட்டுக்களை நிரூபித்தல், நிரூபண முறை, நிரூபணம் செய்வதற்கான பொறுப்பு, நிரூபணத்தின் தரம் முதலியவை அரசியல் சாசனத்தின் 107(3)ஆம் சரத்திற்கமைய சட்டத்தினால் ஏற்பாடு செய்வது கட்டாயமான தேவை'' என்ற அரசியல் சாசன வியாக்கியானத்தை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் காமினி அமரதுங்க, க.ஸ்ரீபவன், பிரியசாத் டெப் ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம், முன்னதாக வழங்கியிருந்தது. இதனையே மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்து உறுதிப்படுத்தியது.

**சபாநாயகரின் அறிவிப்பு**

எனவே, உயர்நீதிமன்றத்தின் மேற்படி சட்டவியாக்கியானத்துக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றில் பதிலளிப்பார் என்றும், நாடாளுமன்ற அனுமதியின்றி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராக எம்.பிக்கள் இருவருக்கு எதிராக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிப்பார் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, தெரிவுக்குழு விசாரணை அறிக்கைக்கு இடைக்கால தடையுத்தரவு கோரி பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முன்னர், கடந்த மாதம் 21ஆம் திகதி மேற்படி 'றிட்' மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த சபாநாயகர், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த 11 உறுப்பினர்கள் ஆகியோரை ஜனவரி மாதம் 3 ஆம் திகதி (நேற்று) நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு அறிவித்தல் விடுத்தது.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை அரச தரப்பினரும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. உறுப்பினர்களும் நிராகரித்தனர். நாடாளுமன்றை வெளி நிறுவனங்களால் சவாலுக்குட்படுத்த முடியாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவற்றின் உறுப்பினர்கள் நீதிமன்றின் அறிவிப்பை ஏற்று மன்றில் ஆஜராகினர்.

ஜே.வி.பியின் சார்பில் தெரிவுக்குழுவில் இடம்பெற்ற விஜித்த ஹேரத் எம்.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதில் இடம்பெற்ற சம்பந்தனுக்குப் பதிலாக அவரது சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜரானார். சம்பந்தன் வைத்திய சிகிச்சைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

**அரசியல் பிரமுகர்கள் படையெடுப்பு**

அதேவேளை, பிரதம நீதியரசர் தாக்கல் செய்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசியல் பிரமுகர்கள் பலர் அங்கு சென்றிருந்தனர். முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன், நவசிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர, ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் ஸ்ரீமால் அப்புஆராச்சி ஆகியோர் நீதிமன்றம் சென்றிருந்தனர்.

**ஐ.தே.க. எம்.பிக்களும் விஜயம்**

மேன்முறையீட்டு நீதிமன்ற அறிவிப்பை ஐ.தே.க. ஏற்காதபோதிலும் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, அஜித் பெரேரா, தயாசிறி ஜயசேகர, பாலித ரங்கே பண்டார ஆகியோர் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனக்கு மட்டுமே கட்டுப்படும் கடப்பாட்டைக் கொண்டது எனவும், அதன் செயற்பாடுகளில் எந்தவொரு வெளி நிறுவனமும் தலையீடு செய்யமுடியாது என்றும் சபாநாயகர் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், தெரிவுக்குழு சட்ட வலுவற்றது என அறிவித்து நீதியரசரைக் குற்றவாளியாக அறிவிக்கும் ஆணை அதற்கில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளமை, சட்டவாக்கத்துக்கும், நீதித்துறைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகார மோதலை மேலும் வலுவடையச் செய்யும் என நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**சட்டத்தரணிகள் ஆட்சேபம்**

இதேவேளை, நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம் கனகஈஸ்வரன் உட்பட்ட பல சட்டத்தரணிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியல்சாசனப்படி நியமிக்கப்பட்ட ஒரு மன்று அல்லவென வாதாடி அதற்கு நீண்ட விளக்கங்களையும் முன்வைத்தனர்.

''ஒரு நீதியரசரைப் பதவிநீக்கம் செய்வதற்கு அரசியற்சாசனப்படி நியமித்த ஒரு மன்று மட்டும் விசாரித்து ஒரு முடிவை வழங்கலாம். நாடாளுமன்றம் அப்படியான ஒரு மன்றை நிறுவும் சட்டத்தை இதுவரை நிறைவேற்றவில்லை. அப்படியான மன்றை நிறுவி விசாரணை சம்பந்தமான ஒரு சட்டத்தை நிறைவேற்றும்வரை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை முயற்சி சட்டத்துக்கு ஒவ்வாதது'' எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

''நாடாளுமன்றத்துக்கு அப்படியான குற்றப்பிரேரணையை விசாரணை செய்யும் அதிகாரம் இல்லை. நாடாளுமன்றம் ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அதற்கான ஒரு மன்றை நிறுவி நாடாளுமன்றத்துக்கு வெளியே இருக்கக்கூடிய அப்படியான ஒரு மன்றால் விசாரணை நடத்தப்பட்டிருக்கவேண்டும்'' என்ற வாதமும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொதுநலவாய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
எவ்வாறு மதிக்கிறது என்பதை பிரிட்டன் கண்காணிக்கும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இலங்கையின் மனித உரிமைகள் நிலையைக் கருத்தில் கொண்டு பொதுநலவாய உச்சிமாநாட்டை புறக்கணிக்குமாறு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுக்கு அந்நாட்டு நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழு ஆலோசனை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# முஸ்லிம் மக்கள் மீது திரும்புகிறது பேரினவாதத்தின் குரூரப் பார்வை

நாடு சுதந்திரம் அடைந்ததையடுத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பெரும்பான்மைச் சிங்கள அரசியல்வாதிகள், தாம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும், தமக்குக் கிட்டிய அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவை ஈட்டிக்கொள்வதற்கான சிறந்த, பொருத்தமான, இலகு மார்க்கமாக, சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதச் சிந்தனையை வளர்ப்பதை தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

அத்தகைய பேரினவாதச் சிந்தனையைச் சிங்கள மக்கள் மக்கள் மத்தியில் தூண்டிவிட்டு அதில் குளிர்காயும் எத்தனத்தில், சிங்கள மக்கள் ஆளப்பிறந்தவர்கள்; சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்கள் அவர்களால் ஆளப்பட வேண்டியவர்கள் என்ற வாய்ப்பாட்டைச் சிங்கள மக்களது மனங்களில் பதியவைத்து, இனங்களுக்கிடையேயான குரோதங்களை வளரச்செய்து, அதனூடாக மாறிமாறி அரசியல் சதுரங்கத்தில் ஈடுபட்டு வந்தமை வரலாறு.

அந்த வகையில் இனங்களுக்கு இடையேயான பாகுபாடுகளைப் பொறுத்துக்கொள்ள இயலாது சாத்வீக வழியில் போராடிய தமிழினத் தலைவர்களது முயற்சிகள் தோற்றுப்போக, ஆயுத வழியில் போராடிய தமிழ் இளைஞர்களது மூன்றுதசாப்த காலப் போராட்டமும் சிங்கள பேரினவாத ஆட்சித் தரப்பினரால் அடக்கி ஒடுக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டது.

சிங்களத் தலைவர்களால் சிங்கள இனத்தவர் மத்தியில் விதைக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு முற்றிப்போய் விட்ட பேரினவாதச் சிந்தனை இன்னமும் தனது பயங்கர வெறியாட்டத்திலிருந்து ஓய்ந்து விடவில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கோரப் பார்வை இன்று இந்நாட்டின் முஸ்லிம் இனத்தவர் மீது திரும்பியுள்ளது என்பதை அண்மைக் காலமாக முஸ்லிம் இனத்தவர் மீது பேரினவாதத் தரப்புகள் மேற்கொண்டுவரும் ஒடுக்குமுறை சார்ந்த செயற்பாடுகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

இப்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் அவர்களின் வழிபாட்டு ஸ்தலங்களுக்கு எதிராகவும் சமீப காலங்களில் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. ஒரு சிறிய குழுவினரே இவற்றைத் திட்டமிட்டுச் செய்துவருகின்றனர் என அரச தரப்புக் கூறினாலும், இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புதிது புதிதாக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் இறுதியாக இடம்பெற்றிருப்பவை ஹலால் சான்றிதழ் மற்றும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக் குற்றச்சாட்டுகள்.

முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குவதற்கென்றே ஒரு கும்பல் அரச உயர்மட்டத்தின் ஆசியுடன் திட்டமிட்டுச் செயலாற்றுவது தெரிகிறது. அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களின் கண்டனங்கள் பயனளிக்கவில்லை. பள்ளிவாசல்களில் 'அதான் தொழுகை' அறிவிப்புக்கு கட்டுப்பாடு வந்தபோது முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதனை எதிர்த்திருந்தால் இன்றைய மோசமான நிலைமையைத் தடுத்திருக்கலாம் என்பது இப்போது அவர்களுக்குப் புரிந்திருக்கிறது.

1956இல் சிங்களம் மட்டும் சட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வெளிப்படையான தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் 2009இல் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கானோரின் கொலையுடன் முடிவுக்கு வந்தது. ஆயினும் அவர்களுக்குரிய, அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவதில் பதவியில் உள்ள அரசு மனதார்ந்த விருப்பமின்றி ஏய்க்காட்டும் தந்திரங்களை கையாண்டு வருகிறது.

இப்போது முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கலவரமொன்றை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன என்று கொள்ளுமளவுக்கு நிலைமைகள் பூதாகரமாகி வருகின்றன. இந்த ஆபத்துக் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார். நாட்டின் வர்த்தகத்துறையில் முஸ்லிம்களின் செல்வாக்கு, சிங்கள மக்களை விடவும் முஸ்லிம்களின் குடிப்பரம்பல் விகிதாசாரம் அதிகரிப்பு, தலைநகர் கொழும்பில் முஸ்லிம்களின் பெரும்பான்மைப் பலம் இவை பேரினவாதிகளின் கண்களை உறுத்துவது தெரிகிறது. இத்தகைய நிலையில் மற்றொரு 1915க்கு நாடு இட்டுச்செல்லப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

1915 வெசாக் பௌர்ணமி தினத்தில் கம்பளையில் கலவரம் ஏற்படுவதற்கு முஸ்லிம்களின் வர்த்தகம் மீதான எரிச்சல்தான் பிரதான காரணம். பள்ளிவாசல் வீதியால் வெசாக் ஊர்வலம் வருவதை கம்பளை முஸ்லிம் வர்த்தகர்கள் ஆட்சேபித்தனர். அதன்போது ஆரம்பித்த கலவரம் பின்பு மேல்மாகாணத்துக்கும் பரவியது. இக்கலவரத்தில் சிங்களக் காடையர்களினால் சுமார் 80 பள்ளிவாசல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் கடைகள் சூறையாடப்பட்டன. நூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லிம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அப்பொழுது நாட்டின் தலைமைப் பதவியில் இருந்த பிரிட்டிஷ் கவர்னர் சேர். ரொபர்ட் சார்ள்மஸ் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்து கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டு கலவரத்தை அடக்கினார். டி.எஸ்.சேனநாயக்க, டி.ஆர். விஜேவர்த்தன உட்பட்ட சுமார் 80 முன்னணி சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் இடம்பெற்று தற்பொழுது 95 வருடங்கள் கழிந்து விட்டன. பேரினவாதத்தின் பார்வை மீண்டும் முஸ்லிம் மக்கள் பக்கம் திரும்பியுள்ளது. தமிழ் மக்களைப் போலவே முஸ்லிம் மக்களையும் நசுக்குவதற்கு மிகவும் திட்டமிட்டுக் காரியங்கள் அரங்கேறி வருகின்றன. இனியாவது அரசு தலையிட்டு இதற்கு முடிவுகாண வேண்டும்.

தற்போதைய இந்த நெருக்கடியில் தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக கடந்த காலங்களில் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. கிழக்கு மாகாணத் தேர்தலிலும் அம் முயற்சி உரிய பயனளிக்கவில்லை. சிறுபான்மை இனங்கள் தமக்குள் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலமே பேரினவாத அச்சுறுத்தலில் இருந்து தம்மைக் காத்துக்கொள்ள இயலும். முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதற்காக முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய மாமனிதர் அஷ்ரப் இந்த உண்மையை உணர்ந்து நெருக்கடி காலங்களில் தமிழர் தரப்புடன் இணைந்து செயற்பட்டு வந்தார். அத்தகைய உறவு, சிறுபான்மை இனங்களுக்கு இடையேயான ஒன்றித்த உறவு மீண்டும் தொடரவேண்டும்.

# மதுவரித் திணைக்கள உத்தியோகத்தருக்கு மூன்று வருடங்களின் பின்னர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.4

வடமாகாண மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் 3 வருடங்களின் பின்னர் இடமாற்றப்பட்டுள்ளார்கள். கடந்த முதலாம் திகதி தொடக்கம் சுழற்சி முறையிலான இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள அத்தியட்சகராகக் கடமையாற்றிய என்.சோதிநாதன் திருகோணமலை மதுவரித் திணைக்கள அத்தியட்சகராகவும், பருத்தித்துறை மதுவரித் திணைக்கள அத்தியட்சகராக கடமையாற்றிய கே.தர்மசீலன் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள அத்தியட்சகராகவும், திருகோணமலை மதுவரித் திணைக்கள அத்தியட்சகராகக் கடமையாற்றிய எஸ்.மதன் மோகன் பருத்தித்துறை மதுவரித்திணைக்கள அத்தியட்சகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய என்.கிருபாகரன் சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகவும்சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ரி.நந்தகுமார் மன்னார் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகவும், மன்னார் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ஆர்.எஸ்.ராஜிர கிளிநொச்சி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகவும், கிளிநொச்சி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ்.செந்தூர்ச்செல்வன் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள சார்ஜன்டாக கடமையாற்றிய எஸ்.யாதவன் மல்லாகம் மதுவரித் திணைக்கள சார்ஜன்டாகவும் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள சார்ஜன்டாக கடமையாற்றிய என்.லோகலிங்கன் கிளிநொச்சி மதுவரித் திணைக்கள சார்ஜன்டாகவும் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள காவலராகக் கடமையாற்றிய எஸ்.பத்மகுமார் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள காவலராகவும் மல்லாகம் மதுவரித் திணைக்கள சார்ஜன்ட் மேஜராகக் கடமையாற்றிய பி.அற்புதகுமார் யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள சார்ஜன்ட் மேஜராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ம-14)

# குறிகாட்டுவான் படகுச் சேவை கட்டணம் அனுமதியின்றி அதிகரிப்பு

## அரச பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.4

நயினாதீவு-குறிகாட்டுவான் படகுச் சேவைக்கான கட்டணம் வேலணை பிரதேச சபையின் அனுமதியின்றி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்படுவது தினமும் பயணிக்கும் நயினாதீவு பிரதேச அரச அலுவலர்களும், அதிகாரிகளுமே என்று பாதிக்கப்பட்ட அரச அலுவலர் கருத்துத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குறிகாட்டுவான்-நயினாதீவு படகுச் சேவை 1.7 கடல் மைல் பிரதேசத்தைக் கொண்டது.

இதில் பிரத்தியேகமாக நயினாதீவைச் சேர்ந்த அரச அலுவலர்கள் ஒருவழிப் படகுக் கட்டணமாக 20 ரூபா மட்டுமே செலுத்த வேண்டும் என்று உள்ளது.

ஏனைய வெளியூர் பயணிகளுக்கு ஒருவழிக் கொடுப்பனவு 30 ரூபா ஆகும்.

எனினும் நயினாதீவு பிரதேச அரச அலுவலர்களுக்கான கொடுப்பனவை 10 ரூபாவால் அதிகரித்து பெறுவதற்கு படகு உரிமையாளர்கள் முன்னிற்கின்றனர்.

இதற்கான அனுமதியை வேலணை பிரதேச சபையோ, அரச அதிபரோ இதுவரை வழங்கவில்லை.

எனவே அனுமதியற்ற கொடுப்பனவை பெற்றுக்கொள்ளக் கூடாது என்று நயினாதீவு அரச அலுவலர்கள் கூறுகின்றனர். (ம-41)

# உள்ளக இடமாற்ற பட்டியல் தயார்

நவாலி,ஜன.4

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்களின் உள்ளக இடமாற்றப் பட்டியல் தயார் நிலையில் உள்ளது.

இந்தப் பிரிவின் முகாமைத்துவப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்கள் யாழ். செயலகத்தில் இருந்து வருகை தரும் உயரதிகாரிகளின் மேலதிக பரிசோதனையின் பின்னர் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று பிரதேச செயலர் க.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

(ம-100)

# தகவல் தொடர்பாடல், ஆங்கிலக் கற்கை நெறி விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

யாழ்ப்பாணம்,ஜன.4

தகவல் தொடர்பாடல் மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான உத்தரவை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சருக்கு வழங்கியுள்ளார்.

அத்துடன் பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் மேற்படி கற்கைகளை உயர்ந்த நிலையில் வழங்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை முடித்து தொழில் தேடும் மாணவர்களுக்கும், தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொது அமைப்புக்கள், நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி திட்டங்கள் அந்தந்தப் பிரதேச செயலக விதாதா வள நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதேநேரம் உயர்ந்த பட்ச நன்மைகளை வழங்காத விதாதா வள நிலையங்களின் விவரமும் மாவட்ட செயலாளர் ஊடாக திரட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# டெங்குக்குச் சமனான காய்ச்சல் பரவுகிறது

## அவதானமாக இருக்க அறிவுறுத்து

**குருதிச் சிறு துணிக்கைகள் குறைவடைதல், உணவில் விருப்பமின்மை மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகளை இது தோற்றுவிக்கும்**

அண்மையில் பெய்த மழையை அடுத்து டெங்குக் காய்ச்சலுக்குச் சமனான காய்ச்சல் ஒன்று பரவி வருவதாக சிறுவர் நோயியல் நிபுணரான மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் காய்ச்சல் நிலையானது டெங்குக் காச்சலின் போது ஏற்படும் நோய் அறிகுறிகளைக் காட்டி நிற்பதோடு சில தினங்களுக்குத் தொடரும் காய்ச்சலோடு குருதிச் சிறு துணிக்கைகள் குறைவடைதல், உணவில் விருப்பமின்மை மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகளை இது தோற்றுவிக்கும்.

சில சந்தர்ப்பங்களில் ஈரல் அமைந்துள்ள பகுதியிலும் நோவைக் காட்டும் நிலைப்பாடு ஒன்று தீவிரமடையக் கூடும். அத்துடன் அத்தகைய நோய் அறிகுறிகள் தென்படுமானால் உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காய்ச்சல் நிலை டெங்கு நோய்க்குச் சமனான நோய் அறிகுறிகளைக் காட்டி நிற்கும். இதனால் தேவையற்ற பீதியை வரவழைத்துக் கொள்ள வேண்டியது இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ம-22)

# அபிவிருத்திக்கு நிதி

வலி-வடக்கு, ஜன. 4

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இளைஞர் அபிவிருத்தி செயல் திட்டத்துக்கு 2012 ஆம் ஆண்டுபன்முகப்படுத்திய வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது பன்முகப்படுத்திய வரவு - செலவுத்திட்ட நிதியின் கீழ் 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

இளைஞர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் திறன்கள், ஆற்றல்களை வளர்க்கும் முகமாகவும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது பன்முகப்படுத்திய நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

அம்பாள் கடற்றொழிலாளர் சங்க கட்டடத்தின் எல்லை மதில்களை நிர்மாணிப்பதற்காக விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ம-86)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிரந்தர வீட்டுத்திட்டத்தின் கீழ் முழுமை பெற்ற நிலையில்

# குடியிருப்பாளரற்ற வீடுகளை கையகப்படுத்தத் தீர்மானம்

## துணுக்காய் பிரதேச செயலகம் அறிவிப்பு



முல்லைத்தீவு, ஜன.4

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் நிரந்த வீட்டுத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்குள் தமது வீடுகளில் குடியிருக்க வேண்டும். அவ்வாறு குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகள் துணுக்காய் பிரதேச செயலக பிரிவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன்.

கடந்த வருடத்துக்கான இறுதி செயற்றிட்டக் கூட்டம் கடந்த 31 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:-

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச அமைப்புக்களும் இந்தியாவும் நிரந்தர வீட்டுத் திட்ட உதவிகளைச் செய்து வருகின்றன.

இந்த நிலையில் மீளக் குடியேறிய மக்களுக்கு முதலாம், இரண்டாம் கட்டமாக வீடுகள் பகிரப்பட்டு அவை கட்டி முழுமைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாறு கட்டி முடிக் கப்பட்ட பல வீடுகள் ஆள்களற்று வெறுமையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு குடியிருப்பாளர்கள் அற்ற வீடுகள் எமது செயலகத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அடையாளப் படுத்தப்பட்ட வீடுகளில் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் குடியிருப்பாளர்கள் குடியமர வேண்டும்.

தவறும் பட்சத்தில் வீடுகளும், காணிகளும் பிரதேச செயலகத்தில் கீழ் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் வீட்டு வசதிகள் இன்றி பலர் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வரும் நிலையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் பயன்பாடின்றி உள்ளன. வீட்டு உரிமையாளர்கள் வேறு இடங்களிலும் வெளிமாவட்டங்களிலும் தங்கியுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்தி முழுநேர குடியிருப் பாளர்களாக இல்லாதவர்களது வீடுகளை கையகப்படுத்தி அவசரமாக வீடு தேவையானவர்களுக்கு வழங்குவதே எமது நோக்கம் என்றார்-அவர். (ஐ-18)

# முரசுமோட்டையில் 84 வீடுகள் தேவை

கிளிநொச்சி, ஜன.4

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டை கிரா மத்தில் 84 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை என கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

கண்டாவளை பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டைக் கிராமத்தில் தற்போது 284 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் குடும்பங்களில் 34 குடும்பங்களுக்கு கடந்த வருடத்தில் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

யு.என். கபிராற் நிறுவனத்தினால் 20 வரையிலான வீடுகள் புனரமைப்பு செய்யப்பட்டன. இந்த நிலையில் தற்போது 84 குடும் பங்களுக்கு உடனடியாக வீடுகள் தேவையாக உள்ளதாக கிராம அலுவலர் தெரிவித்தார். (ஐ-6)

### செட்டிகுளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# புலம்பெயர்ந்து வாழும் மக்களால் உணவுப் பொதிகள் விநியோகம்



வவுனியா, ஜன.4

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் உதவிகள் வழங்கப்பட்டன.

துட்டுவாகை மற்றும் நீலியா மோட்டை பிரிவுகளில் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களே இந்த உதவிகளைப் பெற்றுள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி துட்டுவாகைப் பகுதியில் உள்ள சுமார் 200 குடும்பங்களுக்கு கொக்குவிலைச் சேர்ந்த வளர்மதி முன்னேற்றக் கழக நண்பரும் நோர்வே நாட்டில் வசிப்பவருமான சுரேஸ் சிவானந்தன் என்பவர் உலருணவுப் பொதிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் நா. கமலதாசன், சமூக நல சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், கிராமசேவை உத்தியோகத்தர் திருமதி சந்திரா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு செட்டிகுளம் பிரதேச செயலர் உரையாற்றுகையில்-

தினமும் கூலித் தொழிலையே நம்பி வாழும் இந்த மக்கள் தற்போது வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

இவர்களுக்கு இந்த வகை உதவிகள் ஆதரவாக அமையும் எனக் குறிப்பிட்டார். (க-400)

# துரவிக்குளம் வீதியை புனரமைத்துத் தாருங்கள்

வவுனியா, ஜன.4

வவுனியா துரவிக்குளம் வீதியை அவசரமாகப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பல வருடங்களாக இந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது.

இருந்தாலும் மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்த வீதி பயன்பாட்டில் முழுமையாகத் திருத்தப்படாமையால் தாம் பல்வேறு வகையிலும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கோமரசன்குளம், வேப்பங்குளம், கல்நாட்டிய குளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வவுனியா நகர்ப் பகுதிக்குச் செல்வதற்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

உமாமகேஸ்வரன் வீதி, அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் தடைப்பட்ட வேளையும் மக்கள் இந்த வீதியூடாகவே பயணம் செய்கிறார்கள்.

வீதி விளக்குகளும் பொருத்தப்படாது உள்ளன. அதேசமயம் வீதியில் பெரும் குன்றும் குழிகளும் உள்ளன. இதனால் இரவு வேளைகளில் விபத்துகளும் இடம் பெறுகின்றன.

எனவே இந்த வீதியை புனரமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கவனம் செலுத்தி வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ-421)

# பாதுகாப்பற்ற மின்விநியோகம் இளைஞன் உயிரைக் குடித்தது

கிளிநொச்சி, ஜன.4

முல்லைத்தீவு இரணைப்பாலையில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் முல்லைத்தீவு, கள்ளப்பாட்டைச் சேர்ந்த செல்வநாயகம் றொபேட் (வயது-24) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு இரணைப் பாலைப் பகுதியில் தனியார் ஒருவர் மின்பிறப்பாக்கி மூலம் மின்விநியோகம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த மின்இணைப்புக் கம்பிகள் பாதுகாப்பற்ற முறையில் ஆள் நடமாட்டத்துக்கு ஆபத்தாக அமைக் கப்பட்டுள்ளன.

**குறித்த இளைஞர் தவறுதலாக மின் கம்பியில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.**

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி இரணைப் பாலை தேவாலய பின் வீதியில் உள்ள உறவினர் வீடொன்றுக்கு குறித்த இளைஞர் சென்றுள்ளார்.

அதன்போது குறித்த இளைஞர் தவறுதலாக மின் கம்பியில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

மயக்கமுற்ற நிலையில் புதுக்குடியிருப்பு கைவேலி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் இடைவழியில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை புதுக் குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டனர்.

பாதுகாப்பற்ற முறையில் மின்விநியோகம் மேற்கொண்டுவந்த நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ-6)



அண்மையில் பெய்த கடும்[illegible] வவுனியா செட்டிகுளம் மகா வித்தியா[illegible] வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர நேரில் சென்று பார்வையிட்டார். (ஐ-12)

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானியம் வழங்க கடற்றொழிலாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.04

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் 32 கடற்றொழிலாளர்கள் தமக்கு எரிபொருள் மானியம் கிடைப்பதில்லை என்றும் அதனைப் பெற்றுத்தாருங்கள் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலக தரிசனம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட படகுகளுக்கே குறித்த எரிபொருள் மானியம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 508 கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங் கப்படவுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் அறிவித்துள்ளது.

**உலக தரிசனம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட படகுகளுக்கே குறித்த எரிபொருள் மானியம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.**

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்படி ஏனைய எல்லா கடற்றொழில் சமாசங்கள் ஊடாக இந்த நடவடிக்கை விஸ்தரிக்கப்படும் எனவும் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-6)

## வெள்ளை நிற உடையணிய மாநகர சபையில் வரவேற்பு

கொழும்புத்துறை.ஜன. 04

யாழ். மாநகர சபையின் கூட்டத் தொடர்களில் பங்குபற்றும் உறுப்பினர்கள் சபையின் கௌரவத்தைக் கருத்திற்கொண்டு வெள்ளைநிற உடையணிந்து வரவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதாந்தக் கூட்டத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவால் முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்தை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அதன்போது கருத்து வெளியிட்ட மாநகரசபை உறுப்பினர் அ.சொர்னே ஸியஸ்:-

''பழைய மாநகர சபைக் கட்டடத்தில் மாநகர சபைக் கூட்டங்கள் நடைபெற்ற காலங்களில் முதல்வருக்கான இருக்கை விசேட விதமாக உயரமான வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

அவ்வாறான முறையில் சிறப்பு ஆசனம் முதல் வருக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்''.- எனக் கேட்டுக் கொண்டார்.

**முதல்வருக்கான ஆசனத்தை விசேடமான முறையில் அமைக்கவும் தீர்மானம்**

அதனை அடுத்து கட்சி பேதமின்றி முதல்வர் பதவிக்கு உரிய மதிப்பை அளிக்கும் பாரம்பரிய முறையை அடுத்த கூட்டத்தின் போது ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி ஆண்கள் வெள்ளை நிறத்திலான வேட்டி, நீளக்காற்சட்டை சேட்டும், பெண்கள் வெள்ளைச் சேலையும் அணிந்து கூட்டத்துக்குச் சமுகமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-135)



யாழ்.பிரதான வீதியின் தண்ணீர்த்தாங்கிக்கு அருகில் உள்ள அடப்பன் ஒழுங்கையில் குப்பைகள், கழிவுகள் போன்றன ஒழுங்கை முழுவதும் போடப்பட்டுள்ளன.

இந்த ஒழுங்கையில் பெரியதொரு குப்பைத்தொட்டி இருந்தும் அதன் வெளியே குப்பைகள் வீசப்பட்டு உள்ளன. இவற்றை அங்குள்ள கால்நடைகள், பறவைகள் போன்றன அந்தப் பிரதேசம் முழுவதும் உள்ள வீடுகள், கிணறுகள் போன்றவற்றுக்கு கொண்டு சென்று போட்டு விடுகின்றன. இதனால் அந்தப் பிரதேசம் முழுவதும் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இந்தப் பிரதேசத்தில் உள்ள குழந்தைகள் நோய்த் தொற்றுக்கும் ஆளாகின்றனர். இந்தப் பகுதியில் மகப் பேற்று வைத்தியசாலையும் உள்ளது. எனவே இதனை உரியவர்கள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

## உற்பத்தியாளரிடம் பனம் பொருளை கொள்வனவு செய்யத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன. 04

பனை அபிவிருத்திச் சபை பனம் பொருள் உற்பத்தியாளர்களிடம் இருந்து உற் பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

தற்போது பனங்கிழங்கின் சீசன் ஆரம்பமாகியுள்ளது.

அதை அடுத்து உற்பத்தியாளர்களிடம் இருந்து ஒடியல், ஒடியல் மா, பனங் கிழங்கு போன்ற பொருள்களை சபை கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து பின்னர் பொதி செய்து கற்பகம் விற்பனை நிலையங்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபையில் போதிய ஆளணி வசதி இன்மையால் இந்தமுறை உற்பத்தியாளர்களிடம் இருந்தே பனம் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# மீள்குடியமர்ந்தோருக்கு வீட்டுத்திட்ட கடனாக 19 மில்லியன் ரூபாநிதி

### வீடமைப்பு அதிகாரசபை கடந்த வருடம் வழங்கியது

யாழ்ப்பாணம்,ஜன. 4

மீள்குடியமர்ந்தவர்களுக்கான வீட்டுத் திட்ட கடன்தொகையாக கடந்த வருடம் 19 மில்லியன் ரூபாவை வீடமைப்பு அதிகாரசபை வழங்கியுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் 8 பிரதேச செயலர் பிரிவுகளின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டது.

புதிய வீட்டுக் கடன் 62 பேருக்கு வழங்கப்பட்டது.

**புதிய வீட்டுக் கடன் 62 பேருக்கு வழங்கப்பட்டது. இதற்காக 12.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தரம் உயர்த்தல் கடன் 34 பேருக்கு வழங்கப்பட்டது. இதற்காக 6.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.**

இதற்காக 12.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தரம் உயர்த்தல் கடன் 34 பேருக்கு வழங்கப்பட்டது. இதற்காக 6.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 2 பேருக்கும், திருத்த வேலைகளுக்காக 3 பேருக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 3 பேருக்கும், திருத்த வேலைகளுக்காக ஒருவருக்கும்-

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 6 பேருக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 2 பேருக்கும் திருத்த வேலைகளுக்காக 30 பேருக்கும்,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 7 பேருக்கும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக ஒருவருக்கும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 2 பேருக்கும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீடமைப்பதற்காக 11 பேருக்கும் வழங்கப்பட்டன.

அதேவேளை மீள்குடியேற்ற அமைச்சால் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மானிய அடிப்படையில் வீட்டுத்திட்டக் கடனாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் 96 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு கடன் தொகையாக 2 இலட் சம் ரூபா வழங்கப்பட்டது. -எனத் தெரிவித்தார். (ம-13)

## முருங்கைக் காயின் விலை ஆயிரம் ரூபாவை எட்டியது

யாழ்ப்பாணம்,ஜன. 04

குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை ஆயிரம் ரூபாவை எட்டியது. திடீரென இந்த விலை அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சந்தைகளுக்கு முருங்கைச் செய்கையாளரால் கொண்டு வரப்படும் முருங்கைக்காய் வியாபாரிகளால் போட்டிபோட்டு கொள்வனவு செய்யப்படுகிறது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் குடாநாட்டில் முருங்கைக்காய் அமோக விளைச்சல் பெற்றிருந்தது.

இந்தக் காலப் பகுதிகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாகவே இந்த விளைச்சல் அதிகரித்துக் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-17)

## மீன்களின் வருகை குடாக்கடலில் குறைந்தது

யாழ்ப்பாணம்,ஜன. 4

யாழ். குடாக்கடலில் மீன்களின் வருகை மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது என்று வடமாகண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

வழமையாகவே நவம்பர் டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கடலுணவுகள் வலைகளில் சிக்குவது மிகக் குறைவாகவே காணப்படும்.

இதற்கு முக்கிய காரணம் காலநிலையில் ஏற்படும் மாறுபாடேயாகும்.

தொடர்ந்து ஜனவரி மாத நடுப்பகுதிக்குப் பின்னர் கூடுதலான கடலுணவுகள் சிக்கும். என்றாலும் தீவகக் கடற்பரப்பில் கூடுதலான மீன்கள் பிடிக்கப்பட்டு இங்கே கொண்டு வரப்படுவதால் தான் கடலுணவுகளின் விலையில் ஒரு சீரான தன்மை காணப்படுகின்றது.

இதன் காரணமாகத் தென் பகுதிக்கான கடலுணவுகளின் ஏற்றுமதியும் குறைவடைந்துள்ளது.

ஜனவரி மாதத்துக்குப் பின்னர் அதன் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன என்றார். (ம-17)


## நவீன வடிவமைப்பில் உடுத்துறையில் நினைவுத் தூபி

வடமராட்சி,ஜன.4

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்ட ஆயிரத்து 38 பேரை அடக்கம் செய்த உடுத்துறை சுனாமி நினைவிடத்தில் நவீன வடிவமைப்புடன் கூடிய பிரமாண்டமான பொது நினைவுத் தூபி ஒன்றை அமைக்கப் பொது அமைப்புகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

காவு கொள்ளப்பட்ட ஆயிரத்து 38 பேரது பெயர்களையும் உள்ளடக்கி ஆழிப்பேரலையின் கோரத்தை எடுத்தியம்பும் வண்ணம் இந்த பொதுத் தூபி அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, காவு கொள்ளப்பட்டவர்களை அடக்கம் செய்த உடுத்துறை சுனாமி நினைவிடத்தில் சுமார் 400 பேரின் நினைவாக அவர்களது உறவுகளால் கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன. (ம-8)



அரியாலை அம்பாள் வீதியில் தூர்ந்து போய் இருக்கும் கேணியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று அந்தப் [illegible] தெரிவிக்கின்றனர்.

கால் நடைகளின் தண்ணீர்த் [illegible] இந்தப் பழமை வாய்ந்த கேணி தற்போது பாவனையின்றிக் குப்பைகள் நிரம்பிக் காணப்படுகின்றது (ம-17)

## சுன்னாகம் கூட்டுறவுச் சங்க பணிகள் யாவும் முடக்கம்

வலி. வடக்கு , ஜன 4

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று நான்காவது நாளாகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையால் சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் முடங்கிப் போயின. பெற்றோல் நிலையம் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் பாதிப்படைந்தே காணப்படுகின்றன. சங்கம் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் நிலையில் சங்கத்தில் பல விற்பனைக் கிளைகள் மூடப்பட்டும் உள்ளன.


குறிப்பிட்ட சங்கத்தில் 150 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் கடந்த காலத்தில் கடமையாற்றிய போதிலும் தற்போது 40 ஊழியர்கள் வரையிலேயே கடமையாற்றும் நிலை உள்ளது.

ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படாமை, சங்கக் கிளைகளில் போதிய அளவு பொருள்கள் இல்லாமை, சம்பள உயர்வு வழங்கப்படாமை போன்ற கோரிக்கைகளை முன் வைத்து போராட்டம் இடம்பெற்று வருகிறது. இதனால் கிராமப்புறங்களைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை உடனடியாகத் தீர்க்கப்படக் கூடியது அல்ல என்று சங்க உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் பிரச்சினையை திசை திருப்புகிறார் மத்திய அமைச்சர்

## அ.தி.மு.க. கண்டனம்



சென்னை, ஜன.4

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படும் பிரச்சினையைத் திசை திருப்பும் வகையில் மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியிருப்பதற்கு புதுச்சேரி மாநில அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அன்பழகன் இது குறித்து செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

தி.மு.க. துணையுடன் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசானது காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத மாநிலங்களை மாற்றந்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதை அ.தி.மு.க. உட்பட மாநிலங்களை ஆளும் எதிர்க் கட்சிகள் கண்டித்து வருகின்றன.

குறிப்பாக தமிழர் நலன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மத்திய அரசு துரோகம் செய்வதுடன் எதிர் நடவடிக்கையையும் எடுத்து வருகிறது. தமிழகத்துக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளையும் மத்திய அரசு தர மறுக்கிறது. இந்த நிலையில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர்.

### பிரதமர் அலுவலகத்தின் தபால்காரன் நாராயணசாமி

இதை மத்திய அரசு தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் இதை திசை திருப்பும் நோக்கத்துடன் பிரதமர் அலுவலக தபால்காரன் மத்திய அமைச்சர் நாராயணசாமி பொய்யான தகவல்களைக் கூறியுள்ளார்.


கச்சதீவை மத்திய அரசு என்று தாரை வார்த்ததோ, அன்று முதல் தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இலங்கை கடற்படை தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்வதுடன் மீன்பிடி கலங்களையும் அழித்து வருகிறது. தமிழக மீனவர் விவகாரம் சர்வதேச பிரச்சினை.

இதில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பலமுறை வலியுறுத்தி கடிதம் எழுதி யுள்ளார். தமிழக சட்ட சபையில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளார். அ.தி.மு.க. சார்பில் பல கட்ட போராட்டமும் நடைபெற்றுள்ளது.

எனினும் அந்த பிரச்சினையை தமிழக, இலங்கை மீனவர்களிடையே விசாரணை நடத்தினால் தீர்ந்துவிடும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியிருப்பது நகைச்சுவையாகவும், வேடிக்கையாகவும் உள்ளது.

மத்திய அமைச்சரவையில் நாராயணசாமி ஒரு நகைச்சுவையாளனாகத் திகழ்கிறார். இதை பல பத்திரிகைகளும், இணையத் தளங்களும் சுட்டிக்காட்டி வருகின்றன. என்றார். (வ)

## முதன் முறையாக தமிழகத்தில் நடமாடும் மக்கள் நீதிமன்றம்



இந்தியாவிலேயே முதன் முறையாக நடமாடும் மக்கள் நீதிமன்றம் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில் லட்சக்கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றில் காசோலை மோசடி, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் பெற்ற கடன் மிகுதியைத் திரும்பப்பெறல் உள்ளிட்ட சிறு வழக்குகள் அதிகமாகக் குவிந்துள்ளன. இந்த வழக்குகளை தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையம் நடத்தும் லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றங்கள் தீர்த்து வைக்கின்றன.


இதுபோன்ற வழக்கு களை மக்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று தீர்த்து வைக்கும் புதிய திட்டத்தை சட்டப் பணிகள் ஆணையக் குழு செயற் படுத்தியுள்ளது. இதற்காக நடமாடும் நீதிமன்றம் அமைக் கப்பட்டுள்ளது. குழுவின் ஒப்புதலுடன் 18 லட்சத்து 31 ஆயிரம் செலவில் நீதி மன்ற வசதிகள் அடங்கிய நடமாடும் நீதி மன்ற சிறப்பு பஸ் வடிவமைக்கப்பட் டுள்ளது.

மேற்படி நடமாடும் நீதி மன்றம் தமிழகத்தின் பல் வேறு இடங்களுக்கும் சென்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் வழக்குகளை தீர்த்து வைக்கும். ஒவ்வொரு இடத்திலும் மேற்படி நடமாடும் நீதிமன்றம் எப்போது செல்லும் என்று முறைப்படி அறி விக்கப்படும்.

இதன் ஆரம்பவிழா நேற்று முன்தினம் தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் நடைபெற்றது. தலைமை நீதிபதி (பொறுப்பு) எலிபி தர்மாராவ் நடமாடும் "நீதி மன்றத்தை ஆரம்பித்து வைத்தார்.

## புற்றுநோயை கண்டறியும் கருவி குர்கான் மருத்துவமனையில்

### தலாய்லாமா திறந்து வைத்தார்



டில்லி, ஜன.4

புற்றுநோய்ப் பாதிப்பைக் கண்டறியும் நவீன கருவியை குர்கான் மருத்துவமனையில் திபெத் புத்த மத தலைவர் தலாய்லாமா திறந்து வைத்தார்.

டில்லிக்கு அருகில் உள்ள தொழில் நகரமான குர்கானில் உள்ள மெடன்டா மெடாசிடி மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர் இதுகுறித்துக் கூறியதாவது:-

மெடன்டா மெடாசிடி மருத்துவமனையில் உடலில் ஏற்படும் எல்லா வகையான நோய்களையும் கண்டறியும் நவீன கருவி பொருத்தப்பட்டுள்ளது. அந்தக் கருவியை திபெத் புத்தமதத் தலைவர் தலாய்லாமா திறந்து வைத்தார். அந்தக் கருவியின் மூலம் புற்று நோய், நீரிழிவு, சிறுநீரகத்தில் ஏற்படும் கல், இரத்த நாளங்களில் ஏற்படும் இரத்தக் கசிவு போன்ற மோசமான நோய்களை எளிதில் கண்டு பிடித்து விடலாம். இதனால், நோய்களை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான சிகிச்சையளிக்க முடியும் - என்றார்.

## அமைதி பேரணி .....



புதுடில்லியில் பாலியல் வன்புணர்வுக் கொடுமையால் சிகிச்சை பயனின்றி இறந்த மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்றுக் காலை நடைபெற்ற மகிளா சுரக்ஷா சம்மன் அமைதிப் பேரணியில் டில்லி முதல்வர் ஷீலா தீட்சித் கலந்து கொண்டார்.

## சிலிண்டர் வெடித்து 3 பேர் சாவு

### தேநீர் தயாரிப்பில் ஏற்பட்ட விபரீதம்

சென்னை வண்ணாரப் பேட்டையில் நேற்றுக் காலை வீட்டில் தேநீர் தயாரித்த போது எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் தந்தை மகன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 8 பேர் தீக்காயங்களுடன் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வண்ணாரப்பேட்டை போஜராஜன் நகரைச் சேர்ந்தவர் பஷீர் உஷாத், இவர் நேற்றுக் காலை வீட்டில் தேநீர் போடுவதற்காக எரிவாயு அடுப்பை பற்ற வைத்த போது சிலிண்டர் வெடித்தது. இதில் பஷீர் உஷாத் சம்பவ இடத்திலேயே இறந்தார். மேலும் அவரது வீட்டின் சமையலறை சுவர் இடிந்து அருகிலுள்ள வீட்டில் விழுந்தது. இதன்போது அந்த வீட்டில் வசிக்கும் தாய் மற்றும் அவரது மகன் கார்த்திக் ஆகியோரும் உயிரிழந்தனர். (வ)

## ஆந்திரா சாமியாரின் மன்மத லீலைகள் தொலைக்காட்சிகளில்

சுவாமி நித்தியானந்தா போல் ஆந்திராவின் பிரபல சாமியார் மீது பாலியல் முன்றப்பாடு எழுந் துள்ளது.

சர்வதேச தியான மாநாடு என்ற பெயரில், மாநாட்டை நடத்தி, பெண்களைக் கட்டி அணைத்து சில்மிஷம் செய்ததாகச் சாமியார் மீது கூறப்படும் முறைப்பாடு களை விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நிஜாமாபாத் அருகே உள்ள ஹன்சபள்ளி என்ற இடத்தில் பிரமாண்ட பிரமிட் அமைத்து தியான நிலையம் நடத்தி வருகிறார் சுபாஷ் பத்ரி (வயது-65). பிரமிட்டின் உள்ளே அமர்ந்து தியானம் செய்தால் மன அமைதி கிடைக்கும், தீர்க்க தரிசனம் பெறலாம் என்று கூறி தியானம் நடத்துகிறார்.

டிசெம்பர் 21 -31ஆம் திகதிவரை சர்வதேச தியான மாநாட்டை அவர் பிரமிட்டில் கூட்டியிருந்தார். அதில் உலகின் பல நாடுகளில் இருந்து ஏராளமானோர் பங்கேற்றனர். ஆந்திரா மட்டுமன்றி அயல் மாநிலங்களில் இருந்தும் பிரமுகர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மேற்படி மாநாட்டில் பெண்களை கட்டி அணைத்து முத்தம் கொடுப்பதும், அவர்களுடன் 'சில்மிஷம்' செய்வதுமாக, சாமியார் பத்ரி, 'மன்மத' லீலைகளில் ஈடுபட்டிருந்தார்.

அந்த லீலைகளை (காட்சிகளை) இரகசியமாகப் படம் பிடித்த ஒருவர் தெலுங்கு தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு அந்தக் காட்சிகளைக் கொடுத்து ஒளிபரப்பச் செய்து விட்டார். தெலுங்கு அலைவரிசைகளில் பலவற்றிலும் அவை ஒளிபரப்பானது. அதனால் அதிர்ச்சி அடைந்த, மகபூப் நகர் மாவட்ட ஆட்சியாளர் சாமியாரின் செயற்பாடுகள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (வ)

## கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கசிவா? வெள்ளை அறிக்கையை உடன் வெளியிடுக

### பல இலட்சம் மக்களின் உயிர் பிரச்சினை என்கிறார் உதயகுமார்



கூடங்குளம் அணுமின் நிலையக் கசிவு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. உதயகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

புதுச்சேரியில் ஜனவரி முதலாம் திகதி பேசிய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி, கூடங்குளம் அணுமின் நிலையதத்தில் இரு வால்வுகளில் கசிவு ஏற்பட்டதாகவும், அதை இந்திய-ரஷ்ய விஞ்ஞானிகள் சரிசெய்து விட்டதாகவும் கூறியுள்ளார்.

பல இலட்சம் மக்களின் உயிர்ப் பிரச்சினையை உள்ளடக்கிய இந்த விடயத்தில், துளியும் கவலையின்றி கருத்துத் தெரிவித்துள்ள இணை அமைச்சரின் பொறுப்பற்ற பதில் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இதுவரை இயக்கப்படாத அணுஉலையில் எப்படிக் கசிவு ஏற்படும்? கசிவு ஏற்பட்டது உண்மையெனில், உச்ச நீதிமன்றத்தை மதிக்காமல் அணுஉலை இயக்கப்பட்டு விட்டதா என்பதை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். மூன்றாம் தலைமுறைப் பாதுகாப்பானது என்றெல்லாம் அமைச்சர் உட்படப் பலர் கூறிவரும் நிலையில், இப்போதே அணுஉலையில் கசிவு என்றால் நாளை விபரீத விளைவுகள் ஏற்பட்டால் பாதிக்கப்படப் போவது தமிழக மக்கள்தான்.

அணுமின் நிலைய விபத்துகளிலிருந்து எப்படித் தப்பிப்பது என மக்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும் என மாநில அரசை நீதிமன்றங்கள் அறிவுறுத்தியுள்ளன. ஆனால், திருநெல்வேலி மாவட்ட நிர்வாகமோ சம்பிரதாயமாக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி முதியோர், விதவை உதவித் தொகைகள் வழங்குகிறது. இது நீதிமன்றை அவமதிக்கும் செயலாகும். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரிய இராணுவத்தின் தாக்குதலில் காயமடைந்த ஒருவர். சிரியாவில் மருத்துவ வசதிகள் கடும் சிரமத்தின் மத்தியில் செய்யப்படுகின்றன. சிரிய அரசால் விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றுக்கான தடையால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கின்றன.

# சிரிய மோதல்களில் சாவு எண்ணிக்கை 60,000



ஜெனிவா, ஜன. 4

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரில் குறைந்தது 60 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை தெரிவிக்கையில்,

''சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆட்சிக்கு எதிராக எழுந்துள்ள கிளர்ச்சியில், கடந்த நவம்பர் மாதம் வரை 59,648 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரபூர்வ தகவல்கள் கிடைத்துள்ளன.

எதிர்பார்க்காத அளவுக்கு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன. இது உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கிறது. 2011 ஆம் ஆண்டு தொடங்கிய சிரிய உள்நாட்டுப் போரின் போது கொல்லப்பட்டவர்கள் பற்றிய சரியான விவரங்களை ஐ.நாவால் கணிக்க முடியவில்லை.

சிரியாவில் மனித உரிமை அமைப்புகள் அனுமதிக்கப்படாத நிலையில் அங்கு நடந்து வரும் சண்டையின் தன்மையை பற்றியும், கொல்லப்படுபவர்கள் பற்றியும் சரியான விவரங்கள் பற்றியும் எங்களால் தகவல் பெறு முடியவில்லை. சிரியாவில் அமைதி திரும்பிய பின்னரே அங்கு எவ்வளவு பேர் கொல்லப்பட்டனர் என்பதை அறிய விசாரணை தொடங்கமுடியும்.

சிரிய உள்நாட்டுப் போர் ஆரம்பமானதில் இருந்து இதுவரை கிடைத்த தகவல்களை பார்க்கிறபோது அங்கு கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை மாதத் துக்குச் சராசரியாக 1000 பேரிலிருந்து, 5,000 பேராக அதிகரித்து இருக்கிறது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்''- என்று தெரிவித்துள்ளார்.

# தீவுகள் எமக்கே சொந்தம்

## தேவையற்ற பதற்றத்தை உருவாக்காதீர்கள் வியட்நாமை எச்சரிக்கிறது சீனா

பீஜிங், ஜன.4

"தென்சீனக்கடலில் உள்ள ஜிஷா, நன்ஷா தீவுகள் சீனாவுக்குச் சொந்தமானவை. அவற்றை உரிமை கொண்டாடுவது பேராபத்தை ஏற்படுத்தும்'' என்று வியட்நாமுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது சீனா.

இது தொடர்பாக சீன வெளியுறவுத்துறை செய் தித் தொடர்பாளர் ஹுவா சுன்யாங் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''தென் சீனக் கடலில் உள்ள ஜிஷா, நன்ஷா தீவுகள் தொடர்பாக, புத்தாண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்ட வியட்நாமின் புதிய கடல் சட்டம் செயற்படுத்தப்படக் கூடாது. அவ்வாறு செயற்படுத்தினால் அது இருநாடுகளுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்தும்.

அந்த இரு தீவுகளும், சீன அதிகார வரம்புக்கு உட்பட்டவை. தீவுகள் மற்றும் அவை சார்ந்த கடல் பகுதி தொடர்பாக எந்தவொரு நாடும் உரிமை கோரினால் அது சர்வதேச சட்ட விதிகளுக்கு முரணானது. வியட்நாமின் புதிய கடல் சட்டம் கவலையளிப்பதாக உள்ளது''- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவால் ஜிஷா, நன்ஷா என்று அழைக்கப்படும் தீவுகளை, வியட்நாம் பாராசெல் தீவுகள் என அழைக்கிறது. அந்தத் தீவுகள் தமக்குச் சொந்தமானவை என உரிமை கொண்டாடும் வியட்நாம் இது தொடர்பாக கடந்த ஜூன் மாதம் 'வியட்நாமிய கடல் சட்டம்' என்ற புதிய சட்டத்தை உருவாக்கியது.

அதன்படி, அந்த தீவுகள் வியட்நாமின் அதிகார வரம்பு மற்றும் இறையாண்மைக்கு உட்பட்டவை என அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் வரும் கப்பல்கள் உள்ளிட்ட அனைத்தையும் சோதனையிடவும், விதி மீறல்களை விசாரிக்கவும் அதிகாரமளிக்கப்பட்டது. இச்சட்டம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

வியட்நாம் தவிர பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே தென் சீனக் கடலில் உள்ள தீவுகள் தொடர்பாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது.

அண்மையில் சீனா தனது கடவுச் சீட்டில் அச்சிட்டுள்ள வரைபடத்தில் சர்ச்சைக்குரிய தீவுகள் சீன எல்லைக்குட்பட்டவையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு பிலிப்பைன்ஸ் ஆட்சேபம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மாரில் தீவிரவாதிகள் முகாம் மீது வான் தாக்குதல்

யாங்கூன், ஜன.4

மியன்மாரில் கச்சின் தீவிரவாதிகள் மீது இராணுவம் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

மியன்மாரில் இராணுவத்தினருக்கும், கச்சின் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் அண்மைக் காலமாக மோதல்கள் அதிகரித்துள்ளன.

''தீவிரவாதிகள் பிடியிலிருந்து முக்கிய முகாம் ஒன்றை மீட்பதற்காகவே தாக்குதல் நடத்தப்பட்டது. ஹெலிகொப்டர்கள், பயிற்சி ஜெட் விமானங்கள் இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன'' என்று ஜனாதிபதி சியினின் ஆலோசகரான மாங் ஷ்வே தெரிவித்தார்.

# சன நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழப்பு



அங்கோலாவில் சன நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். 120இக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுள் சிறுவர்களும் அடங்குவதாக கூறப்படுகின்றது. புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றின்போதே சனநெரிசல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

70 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். மூச்சுத் திணறல் காரணமாகவே உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

# ரூ.100 கோடி சொத்துகளை நூலகத்துக்கு அளித்த மூதாட்டி

நியூயோர்க், ஜன.4

அமெரிக்காவில் எளிமையாக வாழ்ந்த, மூதாட்டி ஒருவர் 100 கோடி ரூபா சொத்தை, நூலகத்துக்கும், பூங்காவுக்கும் எழுதி வைத்துள்ளார்.

அமெரிக்காவின், நியூயோர்க் பகுதியில் உள்ள, மன்ஹாட்டன் குடியிருப்பில் வசித்தவர் மேரி மெக்கோனல். 88 வயதுடைய இவர் அண்மையில் இறந்துவிட்டார்.

நியூயோர்க்கில் உள்ள நூலகத்துக்கும், பிரதான பூங்காவுக்கும், தபால் மூலம் காசோலை வந்தது. இதை பிரித்து பார்த்த நிர்வாக அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

வழக்கமாக, பூங்காவுக்கும், நூலகத்துக்கும் தனியாக வந்து செல்லும் மேரி, 100 கோடி ரூபா மதிப்புள்ள தனது சொத்துக்களை எழுதிக் கொடுத்துள்ளார். மன்ஹாட்டன் பகுதியில், 1940 ஆம் ஆண்டளவில் குடியேறிய மேரி, இதுவரை, தான் ஒரு செல்வந்தர் என்பதை வெளியே காட்டிக் கொண்டதில்லை. எல்லோருடனும் எளிதாக பழகி, எளிமையாக வாழ்ந்துள்ளார்.

# அமெ. ஆளில்லா விமானம் பாகிஸ்தானில் தாக்குதல்

## சிரேஷ்ட தலைவர் உட்பட 6 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜன.4

பாகிஸ்தானில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் பாகிஸ்தான் கிளர்ச்சியாளர்களின் சிரேஷ்ட தலைவர் முல்லாஹ் நஷீர் கொல்லப்பட்டுள்ளார்.

தெற்கு வஷிரிஸ்தானின் வட - மேற்கு பழங்குடி மாவட்டத்திலேயே நேற்று வியாழக்கிழமை இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு ஏவுகணைத் தாக்குதல்களில் இவருடன் ஏனைய 5 போராளிகளும் உயிரிழந்துள்ளதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நவம்பர் மாதம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலொன்றில் முல்லாஹ் நஷீர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வண்ண, வண்ண ரோஜா மலர் அணிவகுப்பு



கலிபோர்னியா மாகாணத்தின் பஸடெனா பகுதியில் ஆண்டுதோறும் ரோஜா மலர்கள் அணிவகுப்புத் திருவிழா நடைபெறும். இந்த வருடம் நடைபெற்ற 124ஆவது வருடாந்த ரோஜா அணிவகுப்பில் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களுடன் ''வண்டர்புல் இந்தோனேஷியா'' என்ற பெயரில் கலந்து கொண்ட இந்தோனேசிய நாட்டவர்கள்.

# 7 பாக். இராணுவத்தினர் தீவிரவாதிகளால் கடத்தல்

இஸ்லாமாபாத், ஜன. 4

பாகிஸ்தான் இராணுவத்தினர் 7 பேர் தீவிர வாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் 7 பேர் வடமேற்கு பகுதியிலுள்ள கைபூர் பக்துன்காவா பகுதி பன்னுவுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று அவர்களை கடத்தியது. அவர்கள் அனைவரும் ராவல்பிண்டியில் உள்ள தனது சொந்த ஊருக்கு விடுமுறைக்குச் சென்று திரும்பியவர்கள் ஆவர். இதுகுறித்து எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

பெஷாவர் சோதனைச் சாவடியில் பணியிலிருந்த 22 துணைநிலை இராணுவத்தினரை சமீபத்தில் பாகிஸ்தான் தலிபான்கள் கடத்தி கொலை செய்தனர் என்பதும் குறிப்பிட த்தக்கது.

# இளவரசர் ஹரி ஒரு குள்ளநரி

## இப்படிக் கூறுகிறார் தலிபானின் முக்கிய உறுப்பினர் ஒருவர்

காபூல், ஜன.4

"ஹரி ஒரு குள்ளநரி, அவனால் சிங்கம் மற்றும் கழுகுகளை வேட்டையாட இயலாது" இவ்வாறு தெரிவித்துள்ளார் தலிபான் தீவிரவாதியொருவர்.

அண்மையில் ஹரியின் தாக்குதலில் தலிபான் தளபதி ஒருவர் உயிரிழந்தார் என்று பிரிட்டிஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே தலிபான் முக்கிய உறுப்பினரான குல்புதீன் ஹெக்மத்யார் மேற்கண்டவாறு கூறினார்.

''2014ஆம் ஆண்டுக்குள் பிரிட்டிஷ் படையினர் வெளியேற வேண்டும். இல்லையெனில் அவர்கள் மீது புனித போர் நடத்தப்படும். ஹரி ஒரு குள்ளநரி, அவனால் சிங்கம் மற்றும் கழுகுகளை வேட்டையாட முடியாது. ஹரியை தலிபான்கள் தேடி வருகின்றனர். இவன் குடித்துவிட்டு ஒன்றுமறியாத ஆப்கானியரைக் கொன்று வருகிறான்'' என்று தெரிவித்திருக்கிறார் குல்புதீன் ஹெக்மத்யார். இவர் அமெரிக்காவால் தேடப்படும் முக்கிய குற்றவாளி என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் உயர் வருமானப் பிரிவினருக்கு வரிகளை உயர்த்துவது தொடர்பான சட்டம் நிறைவேறுவதற்கு முன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, துணை ஜனாதிபதி ஜோ பிடன் சந்தித்த வேளையில்...

# பாடகரைப் பின்தொடர்ந்தவர் கார் மோதி உயிரிழந்தார்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜன.4

அமெரிக்க பொப் இசை பாடகர் ஜஸ்டின் பீபரை பின் தொடர்ந்து சென்ற புகைப் படப்பிடிப்பாளர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

அமெரிக்க பொப் இசை பாடகர் ஜஸ்டின் பீபர் (வயது 18). இவரது கார் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது புகைப்படம் எடுப்பதற்காக ஒருவர் பின் தொடர்ந்து சென்றார்.

அப்போது பின்னால் வந்த கார் ஏறியதில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து கலிபோர்னியா மாகாண பொலிஸார் கூறியதாவது:-

''பொப் இசை பாடகர் ஜஸ்டின் பீபரின் கார் வேகமாக பயணித்துக் கொண்டிருந்தது. அவருக்கு பின்னே மற்றொரு காரில் ஒருவர் தொடர்ந்து வந்தார். போக்குவரத்து சமிஞ்ஞையில் பீபரின் கார் நின்றபோது, பின் தொடர்ந்தவர் தனது காரில் இருந்து இறங்கி முன்னே சென்று பெராரி காரை படம் பிடித்தார். அதன் பின் தனது காருக்குத் திரும்பினார். ஆனால் எதிர்பாராதவிதமாக மற்றொரு கார் மோதியது.

உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றும், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவித்தனர்.

# மருத்துவமனையில் இருந்து வெளியேறினார் ஹலாரி

நியூயோர்க், ஜன.4

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

மூளைக்கும் மண்டையோட்டுக்கும் இடையில் இரத்த உறை நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஹிலாரி கிளின்டன் நியூயோர்க்கிலுள்ள பிரிஸ்பைடீரியன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

ஹிலாரி கிளின்டனின் தேக ஆரோக்கியத்தில் சிறந்த முன்னேற்றம் காணப்படுவதாகவும் அவர் பூரணமாக குணமடைந்துள்ளார் என்று அவரது மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



ஹிலாரி கிளின்டன் தனது கணவர் பில் கிளின்டனும் தனது மகளுடனும் நேற்று புதன்கிழமை வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

இதேவேளை, ஹிலாரி கிளின்டன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறவில்லையெனவும் அவர் மேலும் வைத்தியப் பரிசோதனைகளுக்காக மற்றுமொரு வைத்தியசாலைக்கு செல்வதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கடைக்குள் மாட்டிக் கொண்ட மூதாட்டி புத்தாண்டைக் கழித்தார் அங்கேயே!

பாரிஸ், ஜன.4

பிரான்ஸில் புத்தாண்டு தினத்தன்று மூதாட்டி ஒருவர் கடைக்குள் சிக்கிக் கொண்டார். வேறு வழியின்றி அன்றைய பொழுதைக் கடைக்குள் கழித்தார் மூதாட்டி.

பிரான்ஸின் ரவுபெய்க்ஸ் நகரைச் சேர்ந்த 73 வயது மூதாட்டி கடை மூடப்படும் நேரத்தில் அங்காடிக்கு சென்றார்.

அப்போது பொருள்களை வாங்கி கொண்டிருக்கையில், கழிப்பறைக்கு சென்று விட்டார். அனைவரும் சென்று விட்டார்கள் என நினைத்த காவலர் கடையை பூட்டி விட்டார்.

திரும்பி வந்த பாட்டி கடை பூட்டியிருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார், பின் எச்சரிக்கை மணியை அழுத்தி பார்த்தும் எந்தவித பதிலும் இல்லாததால் கடைக்குள்ளேயே இருந்து விட்டார்.

மறுநாள் கடையை திறந்த போது, பாட்டி உள்ளே இருப்பதை பார்த்து கடை நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். நடந்த சம்பவத்துக்காக பாட்டியிடம், கடைநிர்வாகம் மன்னிப்பு கேட்டுள்ளது

## புத்தாண்டு தினத்தன்று 7 மில்லியன் யூரோ கொள்ளை

பாரிஸ், ஜன.4

பிரான்ஸில் ஐபோன் விற்பனை நிலையம் ஒன்றில் புத்தாண்டு தினத்தன்று துணிகரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. முகமூடி அணிந்த 4 நபர்கள் 1 மில்லியன் யூரோ மதிப்புள்ள பொருள்களைக் கொள்ளையடித்துள்ளனர். புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக பொலிஸார் பல்வேறு இடங்களுக்கு பாதுகாப்பு பணிக்காக போய் விட்டனர். அந்தச் சந்தர்ப்பத்தைக் கொள்ளையர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

# ஐவரிகோஸ்டில் 3 நாள்கள் துக்கம்

அபிஜான், ஜன.4

சனநெரிசலில் சிக்கி சிறுவர்கள் உள்ளிட்ட 60 பேர் உயிரிழந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஐவரிகோஸ்ட்டில் மூன்று நாள்கள் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உயிரிழப்புக்கள் தொடர்பில் அனுதாபம் வெளியிட்டுள்ள ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி அலசன் ஒட்டாரா, வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தவர்களை பார்வையிட்டுள்ளார்.

ஐவரிகோஸ்ட்டின் அபிஜான் நகரில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது ஏற்பட்ட சனநெரிசலினால் 250இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை சனநெரிசலை சாதகமாகப் பயன்படுத்தி சிலர் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்
சுந்தரம் பரந்தாமன் (SLPS-I)



உடுப்பிட்டி வடக்கு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் ஒலுமடு மாங்குளத்தை வதிவிடமாகவும் யா/ வல்வை சிதம்பராக்கல்லூரியின் பழைய மாணவனுமான திரு.சுந்தரம் பரந்தாமன் கடந்த காலங்களில்
மு/புலுமச்சி நாதகுளம் அ.த.க பாடசாலை,
மு/கற்சிலை மடு அ.த.க பாடசாலை,
மு/மாங்குளம் ம.வி
ஆகிய பாடசாலைகளில் அதிபராகவும், துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் (நிர்வாகம்) கடமையாற்றி எமக்கு பல பெருமை சேர்த்துத்தந்ததுடன், தனது நற்பெயரையும் நிலை நாட்டியதுடன் கடந்த (31.12.2012) திங்கட்கிழமை வவுனியா மேல் நீதிமன்ற நீதிவான் திரு.A.G. அலெக்ஸ்ராசா முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து சமாதான நீதிவானாகப் பதவியை ஏற்றுக் கொண்டார்.)
இவரது பணிகள் மேலும் சிறக்க இறைவனை வேண்டுவதுடன், எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஒலுமடு.
மாங்குளம்.
குடும்பத்தினர்.



ஞானோதயா அக்கடமி
-சாவகச்சேரி - கொடிகாமம் -
[இரு இடங்களிலும்]
A/L - 2015
கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பம்- Jan 06
அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ்,தென்மராட்சி, வடமராட்சி ஆசிரியர்களின் ஒருகிணைந்த சேவையில்.......

கலைப்பிரிவு
தமிழ் - திரு.முகுந்தன்
புவியியல் - திரு.செந்தூரன்
வரலாறு - திரு.விக்கி
அரசியல் விஞ்ஞானம் - திரு.சந்துரு
இந்து நாகரிகம் - திரு.ஜோதிஸ்வரன், திரு.செல்வா
நாடகமும் அரங்கியலும் - திரு. நசித்குமார்
விவசாய விஞ்ஞானம் - திரு.சசிக்குமார்


வர்த்தகப் பிரிவு
வணிகக்கல்வி - திரு.பசில், திரு.பிரவேஷ்கன்னா
பொருளியல் - திரு.சுதாகரன்
கணக்கீடு - திரு.திவம்
பொது ஆங்கிலம் - திரு.நிஷாந்தன்

ஆரம்பம்:-
06.01.2013 (ஞாயிறு) at 9.00AM

குறிப்பு :- சென்ற வருடம் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் எமது நிறுவனத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



மணிவிழா வாழ்த்து



திரு.ந.தங்கவேல்
தமிழ் ஆசான்,
பகுதித்தலைவர்,
யாழ்.இந்துக் கல்லூரி.

இந்துவின் தங்கம்
இந்துவிற்கு வந்தோர் பலர்
இதயத்தில் நிலைத்தவர்கள் சிலர்
சிந்தனையாளன் சீரிய சிந்தையுடையோன்
அன்பிற்குப் பிறப்பிடமானவன் அறிவின் திருவுருவானவன்
பட்டறிவாளர் ஒப்புர ஒழுகுபவன்
வேலணையின் மைந்தன் இந்துவின் ஆசான்
தைத்திங்கள் நான்காம் நாள் மணிவிழா நாயகன்
தங்கவேல் என்னும் நாமத்தோன்
தமிழ்ச்சங்கக் காவலனாய், இந்து மாமன்ற வழிகாட்டியாய்
பகுதித் தலைவனாய், பரீசுத் தின அறிக்கைப் பொறுப்பாளனாய்
விளையாட்டுத்துறைக்கு விவேக வழிகாட்டியாய்
வியத்தகு செய்கை செய்தும் புகழ்விரும்பா பெருந்தகையாய்
விடைபெறும் வித்தகனே!
"குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழி பல்லாண்டு"
பொ.மகேஸ்வரன் ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையின் விளைவே சாதனை

(13)

மனிதர்கள் தங்களின் வாழ்க்கையினை வைத்துத்தான் சாதனைகளைப் பற்றிச் சிந்திக்க முடியும். சாதனைகளுக்கு எல்லை என்பது கிடையாதெனினும், ஒவ்வொருவரும் தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறையில்தான் சாதனை புரிகின்றவர்களாக இருக்க முடியும். அந்தச் சாதனை வரலாற்றில் இடம் பெறத்தக்க சாதனையாக இல்லாமல் போகலாம். அதைப் பற்றி அந்த மனிதன் கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

நீங்கள் நினைத்த காரியத்தை வெற்றிகரமாக முடித்து விட்டால், அது எவ்வளவு சிறிய காரியமாக இருப்பினும், அது உங்களுக்கு மனத் திருப்தியை அளிக்குமானால், அதுவே ஒரு சாதனைதான்.

புகழ்பெற்ற தளபதியாக அலெக்ஸாண்டர் கருதப்படுகிறார். ஆனால் நேரு, அவர் எழுதிய உலக வரலாற்றில் அலெக்ஸாண்டரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது, 'சிறந்த போர் வீரர், ஆனால் தன்னைப் பற்றியே தவறாகக் கணித்துக் கொண்ட மனிதன்' எனக் குறிப்பிடுகின்றார். அப்படியானால் அலெக்ஸாண்டர் புரிந்தது சாதனையா? இல்லையா? என்கிற கேள்வி எழலாம். மற்றவர்கள் செய்வதைவிட அரிய காரியத்தைச் செய்தவன் என்கிற முறையில் அலெக்ஸாண்டர் செய்தது வரலாற்று புகழ்மிக்க சாதனைதான். ஆனால், அவன் அதற்குக் கொடுத்த விலை அவனது சாதனையின் சிறப்பைக் குறைத்து விட்டதாக நேரு அபிப்பிராயப்படுகிறார்.

ஹன்னிபால் என்கிற வரலாற்று புகழ்மிக்க மாவீரன் ஒருவன் இருந்தான். தன்னுடைய காலடி பட்ட இடத்தில் புல் கூட முளைக்கக் கூடாது என்று சபதம் செய்தவன் அவன். அவனுடைய போர்த் தந்திரங்கள் சிறப்புக்குரியவையாகக் கருதப்படுகின்றன. வென்ற நகரங்களை எல்லாம் அழித்து நாசமாக்குவதையே அவன் ஒரு சாதனையாகக் கருதினான்.

வரலாற்றில் குறிக்கத்தக்க சாதனைகளாக அலெக்ஸாண்டர், ஹன்னிபால் செய்தவை இருக்கலாம். வாழ்க்கையில் எல்லா மனிதர்களும் இப்படிப்பட்ட சாதனைகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அளவில்தான் சாதனைகள் புரிய முடியும்.

ஓர் ஏக்கர் நிலத்தில் மற்றவர்களைவிட அதிகமான விளைச்சலைக் காட்டுகிறவனும் ஒரு சாதனையாளனே. ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து, தன் கடினமான உழைப்பினால் அதன் தலைமைப் பதவியை அடைகிறவனும் சாதனையாளனே. சாதனையின் பரிமாணம் இதுதான் என்று வரையறுத்துச் சொல்லுவதற்கு எதுவும் இல்லை.

அதைப் போலவே ஒரு மனிதன் தனது வெவ்வேறு பருவத்தில் அவன் நிகழ்த்துகின்ற சாதனைகளும், வெவ்வேறாக இருக்கலாம். பள்ளியில் படிக்கின்ற காலத்தில் முதல் மார்க் பெறுவது, அந்தப் பருவத்தில் ஒரு சாதனை. பின்னர் போட்டித் தேர்வு எழுதி அதில் வெற்றி பெற்று அவன் நல்ல பதவியைப் பெறுவது அந்தப் பருவத்தில் ஒரு சாதனைதான். பின்னர் அவன் ஆற்றுகின்ற பணியில் மற்றவர்களை விட சிறந்தவனாக விளங்குவது அந்தப் பருவத்தின் சாதனையாக இருக்கலாம்.

ஆக, சாதனை என்பதற்கு எல்லை கட்டப்பட்ட இலக்கணம் வகுப்பது கடினம். ஆனால், சாதனை புரிய வேண்டும் என்கிற துடிப்பு குழந்தைகளிடம் இயற்கையாகவே காணப்படுகின்ற ஒன்றாகும். அதாவது, குழந்தைக்குக் குழந்தை ஆற்றலில் அதிக வேறுபாடு இருப்பதில்லை. அவற்றுக்கு நாம் கொடுக்கின்ற பயிற்சி, அவற்றை நாம் வளர்க்கின்ற முறை, அவை பெறுகின்ற கல்வி, வாழ்கின்ற சூழல் ஆகியவற்றைப் பொறுத்து அவர்களுடைய ஆற்றல்கள் இல்லை. செயற்படுவதில் வேறுபாடு தோன்ற ஆரம்பிக்கிறது.

குழந்தைகளிடம் சாதனை புரிய வேண்டும் என்கிற எண்ணத்தைத் தொடர்ந்து விதைத்துக் கொண்டே இருக்க வேண்டும். குழந்தைகளின் முயற்சிகளுக்கு தேவையற்ற தடைகளை விதிக்கக்கூடாது. அதற்காக கட்டுப்பாடே இல்லாமல் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று அர்த்தமல்ல. கட்டுப்பாடு என்பது வேறு, தடை என்பது வேறு.

திறமையை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்துவது தான் கட்டுப்பாடு என்று அழைக்கப்படுகிறது. நாம் பெரும்பாலும் கட்டுப்பாடு என்கிற பெயரில் குழந்தைகளுக்குத் தடைதான் விதித்துக் கொண்டு இருக்கிறோம். நம்முடைய இஷ்டப்படி குழந்தைகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் நடக்க வேண்டும் என்பது கட்டுப்பாடு ஆகிவிடாது. குழந்தைகளின் சுய முயற்சிகளுக்கு ஊக்கமளித்து, அவை தவறுகின்ற போது சுட்டிக்காட்டி ஒழுங்குபடுத்துவதே உண்மையான கட்டுப்பாடு ஆகும்.

குழந்தைத்தனம் என்று நாம் எதைச் சொல்லுகிறோம்? விவரம் புரியாமல் குழந்தைகள் செய்வதாக நாம் கருதுகின்ற காரியத்தைச் சொல்லுகின்றோம். உண்மையில் குழந்தைகள் விவரம் புரியாமல் செய்கின்றனவா? விவரங்களைப் புரிந்து கொள்ளுவதற்காக குழந்தைகள் காரியங்களைச் செய்கின்றன. அதை நாம் புரிந்து கொள்ள முடியாத போது, குழந்தைத் தனமான காரியம் என்று அதை அலட்சியப்படுத்தி விடுகிறோம்.

ஒரு விளையாட்டுப் பொருளை குழந்தையிடம் கொடுத்துப் பாருங்கள். திருப்பித் திருப்பி அதைப் பார்க்கும். அதனுடைய பாகங்களை இழுத்துப் பார்க்கும். அதை நகர்த்திப் பார்க்கும். மேலே இருந்து கீழே போட்டுப் பார்க்கும். உடனே பெற்றோரும், மற்றோரும், எந்தப் பொருளையும் இவன் ஒழுங்காக வைத்திருக்கமாட்டான் என்று குற்றப்பத்திரிகை வாசித்து விடுவார்கள்.

ஒரு விடயத்தைக் குழந்தை தெரிந்து கொள்ள முயலும் போதே அதை நாம் குற்றவாளி ஆக்கிவிடுகிறோம். அதன் பிறகு உள்ளத்தில் ஒரு கருத்து ஆழமாகப் பதிந்து விடுகின்றது.

பி.சி.கணேசன்

(தொடரும்)

# பலத்தை உணர்ந்து செயற்பட்டால் பலவீனம் செயலற்றுப் போய்விடும்

## கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கருத்து

கெருடாவில், ஜன.4

கல்வி அடைவுமட்டத்தையும், இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் உணர்த்தும் நோக்குடனும், ஊக்குவிக்கும் நோக்குடனும் பரிசளிப்புநாள் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

பரிசில் பெறுபவர்கள் தங்கள் நிலையைத் தொடர்ந்தும் தக்க வைக்க வேண்டும். பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் எதிர்வரும் காலத்தில் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம்.

கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க.பாடசாலையில் பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லா மனிதரிடமும் பலமும், பலவீனமும் இருக்கின்றன. பலத்தை முதலில் உணருங்கள். இருக்கும் பலவீனங்களை அலட்சியப் படுத்துங்கள். பலத்தை செயற்படுத்தும் போது பலவீனம் பலவீனமடைந்துவிடும்.

ஏதாவது தோல்விகளை சந்தித்திருந்தால் அவற்றை வெறும் அனுபவப் பாடமாகக் கருதி, ஏற்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கட்டாயத்தால் எதனையும் சாதித்துவிட முடிவதில்லை. விருப்புடன் முயல்வது தான் வெற்றிக்கு வழிவகுக்கும்.

ஆரம்பப் பாடசாலை மாணவர்களிடத்தில் விதைக்கப்படுபவை தான், எதிர்காலத்தில் சிறந்த அறுவடைகளைத் தரும். அந்த வகையில் சமூகம் ஏற்கும் பண்புகளையும் குறிப்பாக பெரியோரை மதிக்கும் பண்பையும் எந்தப் பிரச்சினைகளையும் சந்திக்கும் ஆற்றலையும், பல பரிமாணத் திறன்களையும், தோல்விகளை ஏற்கும் தன்மையையும், திட்டமிட்டு செயற்படும் பழக்கத்தையும், நேரமுகாமைத்துவத்தை பின்பற்றும் ஒழுக்கத்தையும், ஆன்மிக ஈடுபாட்டையும், தன்னம்பிக்கையையும், விடாமுயற்சியையும் சிறுவயது முதலே பாடசாலையும் பெற்றோரும் இணைந்து ஊட்டி மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

பிள்ளைகள் படிக்கிறார்கள் இல்லை என்று பெற்றோர் மனவேதனையடைகிறார்களே தவிர, கற்றலுக்கு நாம் வழங்கும் ஒத்தாசை எந்த அளவுக்கு போதுமானதாக உள்ளது என்று எண்ணுவதில்லை.

பாடசாலைகள் கற்றலுக்கான கவின்நிலைகளை ஏற்படுத்தினால் மட்டும் போதாது. வீட்டிலும் பெற்றோரால் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

பெற்றோர் இந்த விடயத்தில் அக்கறை கொள்ளாவிடில் ஆரோக்கியமான கற்றல் நிகழமாட்டாது. முதல் கோணல் முற்றும் கோணல் என்று அமையாது சிறுவயது முதலே மாணவர்களது கல்வியில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களையும், ஒழுக்க சீலர்களையும், கலாசார சீரழிவற்ற சமுதாயத்தையும் உருவாக்க முடியும்.

மாணவர்களின் ஆற்றல்களை வளப்படுத்துவதில் பாடசாலைகள் முனைப்பாக செயற்பட வேண்டும். இன்றைய உலகம் நாளைய தலைவிதியை நிர்ணயிக்கும்.

எனவே, மனித வாழ்வுக்கு வேண்டிய அடிப்படையான பல விழுமியங்களையும் பண்புகள் சிந்தனைகளையும் எமது இளவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும் என்பதை பாடசாலைச் சமூகத்தினர் மட்டுமல்ல, பெற்றோரும் உள்வாங்கி செயற்பட வேண்டும்.-என்றார். (ம-253)

# மாணவரின் எதிர்காலத்தை பெற்றோர்கள் தமது சுயநலத்துக்காகப் பாழடிக்கக் கூடாது

## யாழ். அரச அதிபர் புத்திமதி





யாழ்ப்பாணம், ஜன.4

பெற்றோர்கள் தமது சுயநலமான செயற்பாடுகளுக்காக பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தாமல், உணர்வு ரீதியாக அவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உரிய வயதில் கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்தை பாழடிக்கக்கூடாது.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட வர்த்தக சங்கத்தால் பொருளாதார சூழல்களால் பாடசாலை செல்ல முடியாத வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

கல்வி நடவடிக்கைகளில் யாழ்.மாவட்டம் கடந்த காலங்களில் முதல்நிலையில் இருந்தது. இதற்கு மாணவர்களின் பங்கு அளப்பெரியதாக இருந்தமை வரலாறு கூறும் தகவல்களாக அமைந்துள்ளன.

ஆனால் தற்போது யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாடசாலையில் இருந்து இடை விலகல் என்பது மிக அண்மைக் காலமாக பெரிய பிரச்சினையாக உள்ளது.

கடந்த வருடங்களில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகல், படிப்பில் அக்கறை இன்மை என்பன இல்லாத மாவட்டமாக யாழ்.மாவட்டம் இருந்தது. ஆனால் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்துள்ளன. மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளின் அடிப்படையில் இதனைக் கண்டறிய முடிந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறுமை ஒரு காரணமாக இருந்தாலும், பெற்றோர்கள் தமது சுயநலங்களுக்காக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், ஏனைய சிறு பிள்ளைகளைப் பராமரிப்பதற்காகப் மூத்தவர்களை தங்கவைத்தல் பாடசாலைக்கு அனுப்பாது வீடுகளில் தங்கவைத்தல் போன்ற காரணங்களாலேயே பிள்ளைகள் பாடசாலை செல்கின்ற தன்மை குறைவடைகிறது.

இதனை மாற்றியமைக்க வேண்டும். முக்கியமாக பெற்றோர் தமது சுயநலத்துக்காக மாணவர்களின் எதிர்காலத்தை, கல்வியை சூனியமாக்காமல் உணர்வு ரீதியாக அக்கறை செலுத்தி பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் 13 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 490 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் உட்பட பிரதேச செயலர்கள், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குத் தெரியாத மனச்சாட்சி

தமிழில் - வீ.எஸ்.ரி.
மூலம்:- ராவய
காமினி வியன்கொட


ஒரு வழக்கறிஞர் என்ற ரீதியில் நீதிமன்றத்தின் கௌரவம் குறித்தும் நாட்டின் தலைவர் என்ற ரீதியில் சட்டத்தின் ஆதிபத்தியம் குறித்தும் தமது மனச்சாட்சிக்குத் தாம் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்து விசாரணை மேற்கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவை மறுபரிசீலனைக்குட்படுத்த அவர் முடிவு செய்தமை இதனாலேயே ஆகும்.

ஒரு நாட்டின் தலைவரது செயற்பாடுகள் மட்டுமே அவரது கருணையை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டுமேயல்லாது; அவர் வெளிப்படுத்தும் கருத்துக்கள் அல்ல என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. அதேசமயம் ஒரு சாதாரண பொதுமகனது மனதில் உருவாகும் கருணை போன்றல்லாது, ஓர் அரச தலைவரது நெஞ்சத்தில் உருவாகும் கருணை, நாடு மற்றும் நாட்டு மக்கள் குறித்து அவரது மனதில் ஏற்பட வேண்டிய வேதனையாக அமைய வேண்டுமேயன்றி, தமது குடும்பத்தவர் மற்றும் தமக்கு நெருங்கியவர்கள் மீதான ஈர்ப்பாக அது அமையலாகாது என்பதை அவர் மறந்துவிடலாகாது.

இத்தகைய பண்புகள் கொண்ட இரு அரச தலைவர்கள் குறித்த அண்மைக்கால வரலாறுகள் உள்ளன. அவர்களில் ஒருவர் இலங்கை ஊடகங்களால் பெரிதும் பிரபல்யப்படுத்தப்பட்ட உருகுவே நாட்டின் ஜனாதிபதி ஹோ சே முஜிகா ஆவார். அவர் குறித்த தகவல்கள் தற்போதும் எமது ஞாபகத்தில் இருப்பதால், சில காலத்துக்கு முன்னர் ஆபிரிக்காவில் இருந்த மற்றொரு அரச தலைவரான தோமஸ் சங்கார என்பவர் குறித்து மட்டுமே இங்கு குறிப்பிடுதல் போதுமானது. முன்னைய கால கட்டத்தில் வடசோல்டாவ என்று அழைக்கப்பட்டதும், தற்போது பூர்கினா போசோ என்ற பெயரால் அடையாளப்படுத்தப்படும் நாட்டின் ஜனாதிபதியாகச் சேவையாற்றியவரே அவர்.

நெடுஞ்சாலைகள் நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் பொறியியலாளர் ஒருவர் பெறும் சம்பளத் தொகை, அந்தத் தெருக்களைக் கூட்டிச் சுத்தம் செய்யும் ஒரு தொழிலாளிக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் அவர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சமயம், வெறும் பிரசார தந்திரமாக அந்தக் கொள்கை நிலைப்பாட்டை அவர் முன்வைத்தாரில்லை. ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அத்தகைய கருத்தை முன்வைத்ததுடன் அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டினார். தமது ஜனாதிபதிப் பதவிக்காக அவர் பெற்ற வேதனம், அந்த நாட்டின் கனிஷ்ட தர எழுதுவினைஞரொருவர் பெற்ற வேதனத்துக்கு நிகரான சிறு தொகையொன்று மட்டுமே. தமது ஜனாதிபதிப் பதவியின் நான்காவது ஆண்டு சேவையின் நடுவில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. யினால் அவர் படுகொலை செய்யப்பட்டார். அவர் மரணமடைந்த வேளையில் அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் நூறு டொலர்களுக்குக் குறைந்த பணத்தொகையே மீதமாக இருந்தது. அதுதவிர வேறெந்த தனிப்பட்ட சொத்தும் அவரது பெயரில் இருந்ததில்லை.

ஒரு நாட்டின் தலைவரொருவரது சிறப்பியல்பு முன்னுதாரணம் என்ற ரீதியில் அந்தத் தலைவரது நடைமுறைச் செயற்பாடுகளை உயர் தரத்தில் வைத்து நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் எமது நாட்டின் தலைவர்களது நடைமுறைப்போக்குகள் சிறப்பியல்புமிக்க உதாரணமொன்றுக்கு முற்றிலும் மாறுபட்ட விதமாகவே எப்போதும் அமைந்து காணப்படுகிறது.



நாட்டின் தலைவரொருவர் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பாக நெஞ்சை உருக வைக்கும் விதத்தில் கருத்தொன்றை வெளியிட்டபோது, அந்தக் கருத்தை அந்த இடத்தில் வைத்துப் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. அது அவரது நடைமுறைப் போக்குக்கு மாறுபட்டதொன்றாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

வேறெந்தக் காரணத்தாலும் அல்லாது, "மஹிந்த என்ற பெயரை நிலைநிறுத்தும் நோக்குடன் மட்டும் நாட்டின் நிதியை விரயம் செய்யும் மிஹின் லங்கா என்ற விமான சேவை நடத்தப்பட்டது. அதன் தலைவராகச் செயற்பட்டவர் உறவு முறையில் ஜனாதிபதிக்கு மைத்துனர் முறையானவர். குறிப்பிட்ட இந்த மிஹின் லங்கா விமான சேவை 2007/2008 நிதியாண்டில் 3356 மில்லியன் ரூபா நட்டம் ஈட்டியிருந்தது. அத்தகைய நட்டம் 2008/2009 ஆம் நிதியாண்டில் 4657 மில்லியன் ரூபாவாக உயர்ந்திருந்தது. அது 2009/2010 ஆம் நிதியாண்டில் 5722 மில்லியன் ரூபா நட்டத்தைச் சந்திக்க நேர்ந்தது. அதேசமயம் நாட்டின் தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனமான ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவராகவும் ஜனாதிபதியின் அந்த மைத்துனர் முறையான பிரமுகரே செயற்படுகிறார். 2010/2011 ஆம் நிதியாண்டில் அரசுக்கு 176 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்திய அந்த நிறுவனம் 2011/2012 ஆம் நிதியாண்டிலும் மிகப் பெரும் தொகை நட்டத்தை ஈட்ட நேர்ந்துள்ளது. நிலைமை இவ்விதமிருக்க, இவ்விரு நிறுவனங்களில் வகித்த தலைமைப் பதவிக்காக மாதமொன்றுக்கு பத்து லட்சம் ரூபாவை படியாக பொதுமக்களது வரிப் பணத்திலிருந்து அந்தப் பிரமுகருக்குச் செலுத்தப்படுகிறது. நாட்டின் நிதி மற்றும் வளங்களை இவ்விதம் நியாயமற்ற விதத்தில் விரயம் செய்யும் குறைபாடுகளைச் சுட் டிக்காட்டிய கோப் குழுவின் இரு அறிக்கைகள், ஜனாதிபதி யின் அலுமாரியில் கறையான் களுக்கு இரையாகும் விதத்தில் நீண்ட நாள்களாக கிடப்பில் போடப்பட்டுள்ளமை, நாட்டுக் காகவும் நாட்டு மக்களுக்காவும் உருகும் நெஞ்சுக்கு உதாரணம் காட்டப்படத்தக்கதொன்று.

அண்மையில் கொழும்பு மாநகரில் பெரிய எடுப்பில் காரோட்டப் பந்தயமொன்று நடத்தப்பட்டது. குறிப்பிட்ட அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியின் மகன்மாரில் ஒருவரான நாமல் ராஜபக்ஷவின் 'கார்ல்டன் விளையாட்டுக் கழகமே அனுசரணை வழங்கியிருந்தது. ஓர் இறாத்தல் பருப்பைக் கொள்வனவு செய்யும் சிரமம் முதல், நாட்டின் பொதுமக்களது சட்டைப் பைகளை வெறுமையாக்கும் விதத்திலான கடந்த வரவு செலவுத் திட்டத்தில் இத்தகைய மோட்டார் பந்தயக் கார்களை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதித் தீர்வையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. பொதுமக்களுக்குப் பயன்படத்தக்க அந்த இறக்குமதித் தீர்வை மூலம் கிட்டத்தட்ட 200 மில்லியன் ரூபா வரிப்பணத்தை குறிப்பிட்ட 'கார்ல்டன் விளையாட்டுக் கழகத்துக்குப் பயன்படும் வகையில் திசை திருப்பப்பட்டிருக்கவில்லை.

'கோப்' குழுவின் விசாரணை அறிக்கை மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

நாட்டின் பொதுமக்களது நலன்குறித்த ஜனாதிபதியின் அக்கறை மற்றும் வேதனையை விட தமது குடும்ப உறுப்பினர்களது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இணங்கிச் செயற்படும் அவரது போக்கைச் சுட்டிக்காட்ட இவ்விரு சம்பவங்களை உதாரணங்களாகக் கொள்ள முடிகிறது.

ஆபிரிக்காவின் பூர்கினா போசோவின் ஜனாதிபதியாகவிருந்த தோமஸ் சங்காரவின் செயற்பாடுகள் குறித்து மேலும் ஆராய்ந்து பார்ப்போமானால், அவர் அந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த நான்கு ஆண்டுகள் கால இடைவெளியில் அவர் தமது பிறந்த ஊரில் சொந்தக் கிராமத்தில் தொடர்ச்சியாக மரக்கறித் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு வந்திருந்தார் என்ற செய்தியை நாம் மனதில் இருத்தியாகவேண்டியுள்ளது.

அதேவேளை எமது நாட்டிலோ, தமது குடும்பத்தவர்களுக்கு மேலதிகமாக தமக்கு மிக வேண்டப்பட்டவர்கள் மீதும் ஜனாதிபதி மனது உருகிச் செயற்பட்டுள்ளார். இரட்டைக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த அரசின் அமைச்சரொருவரின் மனைவி, குறிப்பிட்ட வழக்கில் குற்றவாளியாக நீதிமன்றத்தால் இனங்காணப்பட்ட போதிலும் ஜனாதிபதியின் தலையீட்டால் அவர் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தது. அதேபோன்று வேறு பல சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜனாதிபதிக்கு நெருக்கமான பலர், நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட போதிலும் தத்தமது குற்றங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்திருக்கிறது.

பிரதம நீதியரசரின் கணவர் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகப் பதவி வகித்த வேளையில், உயர்மட்ட அறிவுறுத்தலுக்கமைய த பினான்ஸ் நிறுவனத்தின் பங்குகளைத் தவறான விதத்தில் கொள்வனவு செய்ய முயற்சித்தார். அவரது அந்த முயற்சி சாதகமாக முடிந்திருக்குமானால் நாட்டுக்கு 390 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்திருக்கும். அந்த முயற்சி கைகூடவில்லை. இது அரச வளத்தை விரயம் செய்யும் விடங்களின் ஒழுங்கு நிரலில் பின்தள்ளப்பட்டிருந்ததோடு, அவருக்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவ்வேளையில் அழுத்தங்கள் உருவாகியிருக்கவில்லை. அந்தச் சம்பவம் ஜனாதிபதிக்கு கோபத்தை ஏற்படுத்தியதான தோற்றமெதுவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் பிரதம நீதியரசருடனான பிணக்கின் பின்னர் தற்போது பிரதம நீதியரசருக்கு வெளிநாட்டுப் பணம் கிடைத்தமை குறித்து லஞ்ச ஊழல் ஆணைக்குழு தனியான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. அதேசமயம் சில மாதங்களுக்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்ட ஜனாதிபதியின் மைத்துனர் உறவு முறையான அந்தப் பிரமுகர் வசம் இருந்ததாக உறுதிப்படுத் தப்பட்ட பல்லாயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பண நோட்டுக்கள் நாட்டுக்குள் எவ்வாறு கொண்டு வரப்பட்டன என்பது குறித்து இந்த லஞ்ச ஊழல் ஆணைக்குழு எத்தகைய சட்டபூர்வ நடவடிக்கைகளையும் முன்னெடுத்ததாக தெரியவில்லை.

அண்மையில் பெற்றோலின் விலையில் மீண்டுமொருமுறை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு இரு வாரங்களுக்கு முன்னர், 60மில்லியன் டொலர் மற்றும் அதற்குரிய வட்டியையும் பிரசித்தமான ஹெஜின் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசு, டொயிஸ் வங்கிக்கு செலுத்த வேண்டுமென வெளிநாட்டு நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியிருந்தது. அதற்கு முன்னரும் இதே விதத்தில் இதே விடயம் தொடர்பாக 'ஸ்ரான்டேர்ட் சார்ட்டெட் வங்கிக்கு 160 மில்லியன் டொலரை இலங்கை அரசு செலுத்த வேண்டுமென மற்றொரு வெளிநாட்டு நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியிருந்தது. இத்தகைய சகல கொடுக்கல் வாங்கல்களையும் கட்டமைத்தவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையாத, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் உயர் பதவியொன்றை வகித்த தொரு பிரமுகராவார். அவர் மீது இந்தத் தவறுகள் குறித்து சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. கிறீஸ் நாடு தற்போது பெரும் பொருளாதார பின்னடைவினால் சிரமமுற்று வருகிறது. இத்தகைய நிலையில் அந்த நாட்டின் பெறுமதி சரிந்து போகும் பிணை முறிகளை கொள்வனவு செய்யும் இலங்கை மத்திய வங்கியின் தன்னிச்சையான செயற்பாடு நாட்டுக்கு 15.5 மில்லியன் டொலர் நட்டத்தை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது. ஆயினும் இது குறித்து சட்ட நடவடிக்கை எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

இப்போது மீண்டும் ஜனாதிபதி தோமஸ் சங்கார மீது கவனத்தைத் திருப்புவோம். ஒரு சந்தர்ப்பத்தில் அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கில் நிலவிய மேலதிகப் பற்றுத் தொகையை, அவர் மீதான மதிப்பு, கௌரவம் என்பவை காரணமாக அந்த வங்கியின் முகாமையாளர் மேலதிக பற்றுக்கான விதிவிலக்கு வழங்கியிருந்தார். ஆனால் அதுபற்றித் தெரிந்து கொண்டதும் ஜனாதிபதி தோமஸ் சங்கார உடனடியாகவே அந்த வங்கி முகாமையாளரைப் பதவியிலிருந்து விலக்கி விட்டிருந்தார்.

அந்த வகையில் எமது நாட்டில் அவ்விதம் நீதி நேர்மையுடன் செயற்பட்ட, செயற்படத்தக்க கனவான்கள் எவரும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. ஆகவே மனச்சாட்சிக்கு மதிப்பளித்துச் செயற்படுவதற்குப் பதிலாக, சட்டம் முறைப்படி நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அதுவே போதுமானதாகும். ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் சமூகத்தில் சமூகக் கலந்துரையாடலின் முக்கியத்துவம்

“ ஒரு சமூகம் சிறப்புற இருக்க வேண்டுமாயின் தம்மிடையே ஏற்படும் சிறுசிறு அபிப்பிராய பேதங்கள், முரண்பாடுகளை இது போன்ற கலந்துரையாடல்கள் மூலம் களைந்து உயர்ந்த இலாபத்தை தொழில் தருநரும், உயர்வருமானத்தை தொழில் பெறுநரும், அதிகூடிய உற்பத்தியை நாடும் பெற்று சிறப்பாக வாழ முடியும்.

■ திருமதி நி.ஜெகதீஸ்வரன்
உதவித் தொழில் ஆணையாளர்
யாழ். மாவட்டம்





சமூகங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி சீரியவழியில் அவர்களை வழிநடத்திச் செல்வதில் இந்தச் சமூகக் கலந்துரையாடல்கள் மிக உன்னதமான பணியினை ஆற்றி வருகின்றன. சமூகக் கலந்துரையாடல் என்று கூறும் போது சமூக அங்கத்தினர் கலந்து உரையாடு தலைக் குறிக்கும். சமூகம் எனும் போது மக்கள் கூட்டத்தினையோ அல்லது மக்கள் தொகுதியினையோ கருதலாம். பொதுவாக துறைசார்ந்தோ அல்லது தேவைகள் சார்ந்தோ அல்லது கிராமம் சார்ந்தோ இந்த சமூகங்கள் உருவாக முடியும். உதாரணமாக கல்வித்துறையை சார்ந்த கற்போர், கற்பிப்போர், வளவாளர், ஆலோசகர் போன்றோரை உள்ளடக்கியதாக கல்விச் சமூகம் அமையும். அதேபோல் தொழில் பெறுநர், தொழில் தருநர், தொழிற்சங்கத்தினர் போன்றோரை உள்ளடக்கியதாக தொழில் சமூகம் அமையும். இவ்வாறு ஒன்றிணைபவர்களுக்கு பல சமூகப் பொறுப்புக்கள் காணப்படுகின்றன. சமூகத்தின் தேவைகள், கடப்பாடுகள், வழக்காறுகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றை இவர்கள் பாதுகாப்பதுடன் ஆலோசனைகளையும் வழங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். அடுத்து கலந்துரையாடல் என்ற சொல்லினை நோக்கின் சமூக அங்கத்தவர்கள் கலந்து பேசி உரையாடுவதன் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல், தொடர்பு கொள்ளுதல், கலந்து ஆய்வு செய்தல் என்பனவற்றைக் குறிக்கும்.

இன்றைய விஞ்ஞானயுகத்தில் தொடர்பாடல் வசதிகள் உலகில் பெருகியுள்ளன. ஒவ்வொரு மனிதனும் வீட்டிலிருந்தவாறே உலகைக் காணக்கூடியவாறும், கலந்துரையாடல்களை நடத்தக் கூடியவாறும் உள்ளது. ஒவ்வொரு தனிமனிதனும் தனது சுதந்திரத்தை பேணும் அதேவேளை ஏனையவர்களை மதித்து உறவாடி பகிர்ந்து வாழும் பழக்கத்தை உடையவராக காணப்படின் முரண்பாடுகளோ அன்றி பிணக்குகளோ ஏற்பட வாய்ப்பில்லை.

பொதுவான நோக்கில் எந்த சமூகமும் மனிதநேயம், மனிதாபிமானம், ஜீவகாருண்யம் போன்றவற்றை மதித்து வாழும் பண்புகளைக் கொண்டுள்ளன. இருப்பினும் பல்வேறுபட்ட தேவைகள், விருப்புவெறுப்புக்களைக் கொண்ட பல தனிநபர்கள் சேர்ந்துள்ள இந்தச் சமூகங்களில் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வுகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற முடியும். இந்த வகையில் தனியார் துறை தொழில் சமூகத்தினரை எடுத்து நோக்குவோமாயின் வெவ்வேறுபட்ட துறைகளை சார்ந்தோர், வெவ்வேறுபட்ட தொழில்களை செய்வோர், வெவ்வேறுபட்ட தொழில்சங்கங்களைச் சேர்ந்தோர் எனப் பலரை உள்ளடக்கியதாக காணப்படும். தனியார்துறை, உற்பத்திக் காரணிகளான நிலம், முதல் என்பனவற்றை உடைமையாக கொண்டு தமது முயற்சிகளை அவற்றுள் புகுத்தி தொழிலை ஆரம்பிக்கின்றனர். அதற்கு அவசியமான உழைப்பினை வெளியே இருந்து பெற்று உற்பத்தியினையோ சேவையினையோ வழங்குவதனூடாக இலாபத்தினை உழைக்கும் இலக்கினைக் கொண்டு தனிவியாபாரம், பங்குடைமை, கம்பனி ஆகியவற்றை ஆரம்பிக்கின்றனர். இங்கும் தொழில் தருநர்களது சமூகம் அதி கூடிய இலாபத்தை நோக்கமாக கொண்டிருக்க தொழில்பெறுநர் சமூகம் தம்வசம் உள்ள உடல் உழைப்பையோ அல்லது உளஉழைப்பையோ வழங்குவதன் மூலம் அதிகூடிய உச்ச வருமானத்தை (உச்சபயனை) பெற முயற்சிக்கின்றனர்.

### கலந்துரையாடல் வெற்றிபெற அவசியமான சில பண்புகள்

இரு முரண்பாடான நோக்கங்களை கொண்ட இரு தரப்பினரையும் ஒன்றிணைத்து அவர்களது சம்பளம் தீர்மானிக்கப்படுகின்றது. உச்ச இலாப நோக்கம் கொண்ட தொழில் தருநரும் உச்ச வருமானத்தைப் பெற முனையும் தொழில் பெறுநரும் இந்தச் சமூக கலந்துரையாடல் மூலமாகவும் பேச்சுவார்த்தை, பேரம் பேசுதல், தீர்மானம் எடுத்தல் போன்ற வழிமுறைகளின் மூலமாகவும் சுமுகமாக முடிவுகளை பெற்றுக் கொள்கின்றனர். இந்தக் கலந்துரையாடல்கள் வெற்றி அளிப்பதற்கு சில பண்புகள் அவசியமாகின்றன.

1.விட்டுக்கொடுத்தல், உரையாடலில் ஈடுபடும் போது சிநேகபூர்வமானமுறையில்விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு காணப்படல்.

2.இருதரப்பினரும் நம்பிக்கை, விசுவாசம் கொண்டவர்களாக புரிந்துணர்வுடன் செயற்படல்.

3. இலக்கை நோக்கிய குறிக்கோளினை உள்ளடக்கியவர்களாக இலக்கை அடைய முயற்சி செய்தல்.

4. ஒன்றிணைந்து கூட்டாக செயற்படும் மனப்பாங்கினை உடையவர்களாக இருத்தல்.

5. தத்தம் கடமைகளை தட்டிக்கழிக்காது அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவர்களாக இருத்தல்.

மேற்குறித்த பண்புகளுடன் நேருக்கு நேர் திறந்த மனதுடன் கலந்துரையாடும் போது மிகச் சிறந்த பெறுபேறுகளை எட்ட முடியும். இந்தக் கலந்துரையாடல்கள் பொதுவாக இயற்கை நீதி, மனிதாபிமானம், ஒப்புரவு என்பனவற்றை அடிப்படையாக கொண்டு இருதரப்பினரதும் நலன்கள் கவனத்துக்கு எடுக்கப்பட்டு முடிவுகள் எட்டப்படும். இருப்பினும் ஆரம்பகாலங்களில் தொழில் பெறுநர்களுக்குச் சம சந்தர்ப்பம் வழங்கப்படாது பணம் படைத்த தொழில்தருநர்கள் தாம் நினைத்தவாறு சுரண்டல்களை மேற்கொண்டனர்.

### சட்டங்களை நடைமுறைப்படுத்தலில் தொழில் திணைக்களம்

இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களது ஆகக்குறைந்த நலன்களைப் பாதுகாப்பதற்காக சர்வதேச ரீதியாக உலகத்தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) மரபொழுங்குகளையும், விதப்புரைகளையும் வெளியிட்டது. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு அங்கத்துவ நாடுகள் தொழிற் சட்டங்களை உருவாக்கின. அந்த வகையில் இலங்கையிலும் தொழிற் சட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டங்களை நடைமுறைப் படுத்தும் [illegible] அரச கருவியான தொழில் திணைக்களம் செயற்படுகின்றது. உருவாக்கப்பட்டுள்ள சட்டங்கள் தொழில்தருநர், தொழில் பெறுநர் ஆகிய இரு தரப்பினரதும் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பினை அரசு தொழில் திணைக்களத்திடம் கையளித்துள்ளது.

தொழில்தருநர், தொழில் பெறுநர் ஆகிய இரு தரப்பினரையும் காலத்துக்கு காலம் சந்தித்து கலந்துரையாட வைப்பதன் மூலம் முரண்பாடுகள், பேதங்களை அகற்றி ஒரு சுமுகமான தொழில் அமைதியினை ஏற்படுத்த முடியும் என்பது முன்னரே உணரப்பட்ட போதும் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டு சகல மட்டங்களிலும் இந்தக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொதுவாக இரு தரப்பினரதும் மனப்பாங்கினை மாற்றுவதன் மூலமும் உளவியல் ரீதியாக உணரச் செய்வதன் மூலமும் சிறந்த பெறுபேற்றினை அடைய முடியும் என்பது உறுதி. சட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் உடனடிப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமாயினும் மனித மனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியாது. ஆனால் கலந்துரையாடல் மூலம் உண்மைப் பிரச்சினைகளை விளங்க வைத்து விழிப்பூட்டுவதன் மூலம் பெறப்படும் தீர்வு மிகப்பயனுறுதி வாய்ந்ததாக, உள்ளத்தில் இருந்து தோன்றியதாக இருப்பதை உணர முடியும். கட்டாயப்படுத்தி செய்வித்தலை விட விளங்க வைத்து செய்வித்தல் திணிக்கப்பட்ட தீர்வாக அமையாது, ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வாக அமைந்து பயனுறுதி பெறும்.

அந்த வகையில் தொழிற் சட்டங்களில் ஒன்றான கைத்தொழில் பிணக்குகள் சட்டம் இந்தச் சமூக கலந்துரையாடலினால் வலுப்பெறுகின்றது. பிணக்குக்குரிய தரப்பினரை அழைத்து கலந்துரையாடுவதன் மூலம் முரண்பாடுகள் அகன்று மீண்டும் புரிந்துணர்வுடன்கூடிய சுமுகநிலை ஏற்படுவதை உணர முடியும். பொதுவாக தொழிற்சட்டங்கள் யாவும் இயற்கை நீதிக்கோட்பாட்டுடன் இணைந்த வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சம்பள சபைகள் கட்டளைச் சட்டம் அன்றைய காலத்திலேயே இந்தச் சமூக கலந்துரையாடல் மூலமாகத்தான் சம்பள நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது. சம்பள சபையில் தொழில்தருநர் பிரதிநிதிகள் 7 பேர் தொழில் பெறுநர் பிரதிநிதிகள் 7 பேர் அங்கம் வகிக்கின்றனர். கலந்துரையாடல் பேரம் பேசலை வலுப்படுத்தி அவதானித்து உரிய முறையில் சம்பளத்தை நிர்ணயிக்க அரச துறையின் சார்பில் தொழிற் திணைக்கள பிரதிநிதிகள் 7 பேரும் மொத்தமாக 21 பேர் அடங்கிய குழு, குறித்த தொழில்களுக்கான ஆகக்குறைந்த சம்பளத்தை காலத்துக்குக் காலம் நிர்ணயம் செய்து வெளியிடும். இந்தச் சம்பள நிர்ணயம் ஆகக்குறைந்த சம்பளமாகும். இதை விட எவ்வளவு தொகையும் கூடுதலாக வழங்க முடியும். ஆனால்குறைவாகவழங்கமுடியாது.

### இயற்கை நீதியில் அமைந்த கலந்துரையாடல் வரவேற்பு

பொதுவான நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைவிட கூடுதலான சம்பளமே வழங்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. நிபுணத்துவம், சிறப்புத்தேர்ச்சி என்பவற்றால் சம்பளம் அதிகமாக வழங்கப்படுவதை அவதானிக்கலாம். இதுபோன்ற ஒவ்வொரு தொழிற் சட்டங்களினுள்ளும் இந்தக் கலந்துரையாடலுக்கான பண்புகள் பொதிந்து காணப்படுகின்றன.

ஆகவே இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப சட்ட அமுலாக்கலை விட இயற்கை நீதியின் அடிப்படையில் அமைந்த இந்தக் கலந்துரையாடல்கள் அதிக அளவில் நடத்தப்பட்டு நல்ல வரவேற்பினை பெற்றுள்ளன. ஸ்தாபன ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் பல கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றுக்கான ஆலோசனை சபைகளும் மாவட்டம் தோறும் அமைக்கப்பட்டு உள்ளன.

இவற்றிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது எந்த விடயத்தையும் கட்டாயப்படுத்தாது விளங்கவைத்தல் மூலம் சாதிக்க முடியும் என்ற ஒப்புரவு கொள்கையே ஆகும்.

கலந்துரையாடல் மூலம் பெறுகின்ற தீர்மானங்கள் சமூகத்தை கட்டுப்படுத்துகின்றன. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மதிக்கப்படுகின்றன. ஆகவே இயற்கை நீதி, மனிதாபிமானத்தால் சாதித்தல் இலகுவானது. இருப்பினும் இவற்றினை ஏற்காது மலினப்படுத்தும் போது சட்ட அமுலாக்கம் தனது கடமையினை ஆரம்பித்தல் அவசியமானதாகும்.

ஒரு சமூகம் சிறப்புற இருக்க வேண்டுமாயின் தம்மிடையே ஏற்படும் சிறுசிறு அபிப்பிராய பேதங்கள், முரண்பாடுகளை இது போன்ற கலந்துரையாடல்கள் மூலம் களைந்து உயர்ந்த இலாபத்தை தொழில் தருநரும், உயர்வருமானத்தை தொழில் பெறுநரும், அதிகூடிய உற்பத்தியை நாடும்பெற்றுசிறப்பாகவாழமுடியும்.

ஒரு தனிநபரின் ஒரு சமூகத்தின் ஒரு நாட்டின் வளர்ச்சி, திருப்தி, தன்னிறைவு என்பன சமூக கலந்துரையாடல்கள் மூலமே ஏற்படுத்த முடியும் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறை பொருள்

ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார். அவருக்குச் சொந்தமாக சிறியளவிலான நிலம் இருந்தது. வேலை செய்வதற்கு ஆள்கள் இருந்தார்கள். ஒரு சமயம் அந்த விவசாயி கத்தரி விதைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே பாத்தி கட்டி விதையைத் தூவினார். அதற்கு வேண்டியதைச் செய்தார்.

சிறிது நாள்கள் கழித்து அங்கு போய்ப் பார்த்தார். அங்குபாகல் முளைத்திருந்தது.

''பாகலுக்கு இப்பொழுது சந்தைவாய்ப்பு இல்லை. அதனால் அதையெல்லாம் அழித்து விடுங்கள். புழுதிபட மண்ணை மறுபடியும் தோண்டுங்கள்; வேறு பயிர் செய்யலாம்! என்று வேலைக்காரர்களிடம் கூறினார் அந்த விவசாயி.

அதுபோல செய்தார்கள். அதன் பின்னர் இவர் அங்கு போய் பார்த்தார்; மறுபடியும் ஓர் அதிசயம்.

அங்கே புழுதிக்குப் பதிலாக பூசணிக்கொடி படர்ந்திருந்தது. அழகாகப் பூத்திருந்தது!

அவருக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. நான் நினைத்தது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கின்றதே என்று நினைத்து ஒரு மாதிரியாக ஆகிவிட்டார். இனிமேல் உழுது பிரயோசனம் இல்லை என்று முடிவு செய்து கொண்டு அந்தப் பக்கமே போகவில்லை. வேலையாள்களும் நாங்கள் இனிமேல் இங்கிருந்து பிரயோசனம் இல்லை என்று புரிந்து கொண்டார்கள். ஒருநாள் இரவு சொல்லாமல் ஓடிப்போய்விட்டார்கள்!

அந்த விவசாயி மறுபடியும் ஒருநாள் தோட்டத்துப் பக்கமாகப் போய்ப் பார்த்தார். அப்போது மறுபடியும் ஓர் அதிசயம்.

தோட்டம் முழுவதும் வாழைமரம். ஒவ்வொரு மரத்திலேயும் வாழைப்பழம் எல்லாம் நன்றாகப் பழுத்திருந்தது! இதைப்பார்த்ததும் அவருக்கு ஆனந்தம். ''எல்லாம் நன்மைக்கே' என்று நினைத்துக் கொண்டார். இது ஒரு கதை. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஒரு விடயம். இதைக் கூறியவர் யார் என்றால்.. திருமூலர்.

திருமந்திரத்தில் வருகின்ற ஒரு பகுதிதான் இது.

**''வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது**
**புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது**
**தொழுது கொண்டு ஓடினர் தோட்டக்குடிகள்**
**முழுதும் பழுத்தது வாழைக் கனியே!''**

இதற்கு என்ன அர்த்தம் என்று விபரம் தெரிந்தவர்களிடம் கேட்டேன். அவர்கள் இதற்கு விளக்கம் கூறினார்கள்.

இங்கு ''கத்தரியின் விதையை விதைத்தல்'' என்பது யோகப் பயிற்சியில் ஈடுபடுவதைக் குறிக்கின்றது!

ஒருவர் யோகப் பயிற்சியிலே ஈடுபடுகிறார். அட்டாங்க யோகம் பயில்வதற்கு முயற்சி செய்யும்போது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம்,பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி-இவ்வாறு எட்டு வகையான ஆன்மிகப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அதைச் சரியாகச் செய்து கொண்டு வந்தால்.. உலக வாழ்க்கையிலே நாங்கள் பெற விரும்பும் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கலாம்.

அவர் கத்தரி விதைத்தார். கத்தரியே விளைந்திருந்தால், அவர் எதிர்பார்த்த இலாபம் கிடைத்திருக்கும்.

யோகம் செய்கிறவர்கள் சாதாரணமாக எதிர்பார்க்கின்ற உலக இன்பங்கள் இவை.

ஆனால்... யோக சாதகனுக்கு. ஆன்ம பேரானந்தத்தை அனுபவிக்கும் போது உலக இன்பங்கள் என்று முதல் அனுபவித்ததெல்லாம் இப்போது கசக்க ஆரம்பிக்கின்றன. அதனால் அவை மேலே வைத்திருந்த பற்றுக்களை விட்டுவிடுகிறான். இந்த நிலமையிலேதான் அவன் உள்ளத்தில் ''பாச வைராக்கியம்'' தோன்றுகின்றது. உலகப் பற்றை முற்றுமுழுதாக விட்டுவிட வேண்டும் என்கின்ற வைராக்கியம்!

சுவையான கத்தரிக்காயை அறுவடை செய்யலாம் என்று நினைத்து கத்தரி விதைத்த விவசாயிக்குக் கசப்பான பாகல் முளைத்தது என்று கூறுவது இந்த மாற்றத்தைதான்!

ஞான ஆராய்ச்சி. இறுதியில் இவையெல்லாம் நான் இல்லை என்ற தெளிவு உண்டாகும். அதனால் உள்ளத்தில் சிவம் தோன்றும்.

இந்த அற்புதமான நிலையைத்தான்,


''புழுதியைத் தோண்டினேன்.. பூசணி முளைத்தது!'' என்கிறார் திருமூலர்.

இப்பொழுது ஆன்மா, தத்துவங்கள் என்ற பெயரில் பற்று வைக்காது புறக்கருவிகள் அறுபது, அகக்கருவிகள் 36 என்று சொல்லப்படுகின்ற 96 தத்துவங்களுக்கும் ஆன்மாவுக்கும் தொடர்பு இருக்காது.

இதைத்தான் ''தொழுது கொண்டு ஓடினார் தோட்டக் குடிகள்..'' என்றார்.

தத்துவங்கள் எல்லாம் ஆன்மாவை விட்டு விலகிய பிறகு ஜீவாத்மாவும் பரமாத்மாவும் அத்வைதமாகக் கலந்திருப்பார்கள். பழமும் அதன் சுவையும் மாதிரி! இதுதான் பரமுக்தி நிலை. அதாவது மீண்டும் பிறவா நிலை.

இந்த சிவானந்தத்தை சீவன் அடைவதைத்தான் அந்த விவசாயி தோட்டத்தில் ''முழுவதும் பழுத்தது வாழைக் கனியே!'' என்கிறார் திருமூலர். இதுதான் மறைபொருள் கூற்று.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# வறிய மக்கள் வாழ்வை மேம்படுத்தும் சிறுப்பிட்டி ஜனசக்தி ச.ச.நிலையம்



(கடந்தவாரத்தொடர்ச்சி.....)

**ஞானி**

சாதாரணமான விவசாயிகளையும், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களையும் பெருமளவில் கொண்ட ஜனசக்திக் கிராமத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உறுதுணையாக நின்று உழைத்து வரும் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் பணிகள் உறுப்பினர்களின் குடும்பங்களின் மேம்பாட்டை மேல்நிலைப்படுத்துவதாக அமைந்துள்ளன. அத்துடன் அவை கிராமத்தின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அமைந்துள்ளன.

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் கோரிக்கைகளையும் தொடர்ச்சியான வலியுறுத்தல்களையும் அடுத்து அச்சுவேலி இலங்கை வங்கிக் கிராமமாக ஜனசக்தி கிராமம் தெரிவு செய்யப்பட்டு; பல்வேறு கடன் உதவித் திட்டங்களுக்கு ஊடாக கிராமத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் இலங்கை வங்கியூடாக மேற்கொள்ளக்கூடிய அனைத்து உதவிகளையும் அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமையாளர் த. புவனேந்திரன் வழங்கி வருவதாக ஜனசக்தி சமூகம் நன்றி கூறுகின்றது.

இலங்கை வங்கி அச்சுவேலி கிளை கிராமத்தின் வளர்ச்சிக்கும் அங்கத்தவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், வழங்கி வரும் உதவிகள் தொடர்பாக கிராமத்தின் முன்னோடிகளில் ஒருவரான மா.வாசன் கருத்துத் தெரிவிக்கையில் எமது கிராமம் விவசாயக் கிராமம். எமது கிராமத்தில் வசிக்கும் 351 குடும்பங்களில் 65 வீதமான குடும்பங்களுக்கு பருவகாலப் பயிர்ச் செய்கைக்கான விவசாயக்கடனை வங்கி வழங்கி வருகின்றது. இந்த வகையில் ஒவ்வொருவரும் ரூபா இரண்டு லட்சம் ரூபா வரை கடனை பெற்று உரிய காலப்பகுதியில் திருப்பிச் செலுத்தி சுழற்சி முறையில் காலபோகம், சிறுபோகம் என்ற வகையில் தொழில் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். காணி இல்லாத குடும்பங்களுக்கு காணிக் கொள்வனவு செய்வதற்கு 20 குடும்பங்களுக்கு அறுபது லட்சம் ரூபா வரையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல உதவிகளை இலங்கை வங்கி வழங்கி வருகின்றது. ஆண்டு தோறும் இலங்கை வங்கியால் ''எழுச்சி கிராம தினம்'' விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

> **காணி இல்லாத குடும்பங்களுக்கு காணிக் கொள்வனவு செய்வதற்கு 20 குடும்பங்களுக்கு அறுபது லட்சம் ரூபா வரையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல உதவிகளை இலங்கை வங்கி வழங்கி வருகின்றது. ஆண்டு தோறும் இலங்கை வங்கியால் ''எழுச்சி கிராமதினம்'' விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.**

செம் மண் நிலமும், நீர்வளமும் கொண்ட ஜனசக்தி கிராம விவசாயிகள் உடல் உழைப்பில், முயற்சியில் மேம்பட்டவர்கள். கிராம மட்டத்தில் தலைமைக்குக் கட்டுப்பட்டவர்கள். கிராமத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைக்கு பொலிஸ் நிலையத்துக்கோ வேறு தலையீட்டுக்கோ இடமளியாது கிராமிய மட்டத்தில் '' பஞ்சாயத்து முறையில்'' நடத்தப்படும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். பஞ்சாயத்தால் வழங்கப்படும் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு கட்டுப்படுவார்கள்.

கிராம மட்டத்தில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்ப்பாயத்தின் தலைவராக சனசமூக நிலையத்தின் தலைவரும் சனசமூக நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்ட கிராமத்தின் மூத்த பிரஜைகளும் அங்கம் வகிக்கின்றனர். அங்கு வழங்கப்படும் தீர்ப்பு பக்கச் சார்பானது என்றோ மேன் முறையீட்டுக் குரியது என்றோ யாரும் கருத்துக் கூறாமல் ஏற்றுக் கொள்வதோடு மேற்கொண்டு பிரச்சினைக்கு இடமளியாமல் குறித்த பிரச்சினைக்கு அன்றே முடிவு காணப்படுகின்றது.

இந்த வகையில் பொலிஸ் நிலையத்துக்குச் செல்வது; நீதிமன்றத்தை நாடுவது என்பது இல்லாமல் உள்ளூரிலே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது. மேலும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய மேலதிக செலவு மற்றும் தொடர் பகைமையை வளர்த்துக் கொள்வதும் இல்லாமல் போய் விடுகின்றது.

சுண்ணாம்புக் கல் நிறைந்த கலட்டியாக இருந்த சிறுப்பிட்டி மேற்குக்குச் செல்வதற்கான சகல ஒழுங்கைகளும் கடந்த காலங்களில் திருத்தி அமைக்கப்படாமல் கல்,முள் நிறைந்த பகுதிகளாக இருந்து வந்தன. கடந்த சில வருடங்களுக்கு முன்பு குறித்த கிராமத்துக்குச் செல்வது என்றால் 'முகம் சுழித்து' முடியாது எனக் கூறப்பட்டது உண்டு. அந்த வகையிலேயே ஜனசக்தி கிராமத்தில் அமைந்துள்ள சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாக பாடசாலைக் கட்டமைப்பில் உள்ளீர்க்கப்பட்டது.

ஜனசக்தி கிராமம் மீள் எழுச்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பதால் இன்று கிராமத்துக்குச் செல்லும் அனைத்துப் பாதைகளும் செப்பனிடப்பட்டு தார் போடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதியை அயல் கிராம மக்களும் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளனர்.

மேற்படி கிராமத்துக்கு இராச வீதியில் இருந்து வரும் விவசாய வீதி மண் போடப்பட்டு தற்காலிகமாக செப்பனிடப்பட்டுள்ளது. தற்பொழுது சனசமூக நிலையத்தின் கோரிக்கையை அடுத்து மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் தார் போடப்பட்டு செப்பனிடப்படவுள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப.நோ.கூ.சங்க முறைகேடுகள்; உடன் அறிக்கை சமர்ப்பிக்கவும்

## கிழக்கு சுகாதார அமைச்சர் பணிப்பு

அக்கரைப்பற்று.ஜன.4

அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்தகாலம் தொட்டு முறைகேடுகள், வெளியாள்களின் தலையீடுகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றி வந்த எம்.ஐ.முஸ்தபா கடந்த 16 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார் என்றும் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் கூறினார்.

எனவே அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் உடனடியாக அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (ச)

# பஸ்களில் தமிழ்மொழி நடைமுறை குறித்து போக்குவரத்து அதிகாரிகள் அசமந்தம்

## பிரதி அமைச்சர் குற்றச்சாட்டுகிறார்

நுவரெலியா,ஜன.4

தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பில் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனினும் சில அதிகாரிகள் தான்தோன்றித் தனமாக நடந்து கொள்வது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் குற்றம் சாட்டி யுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களிலும், தனியார் போக்குவரத்து பஸ்களிலும் முறையாக தமிழ் மொழி நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

அதுதொடர்பாக நான் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இந்தக் குறைகளை நுவரெலியா மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களிலேயே அதிகம் காண்கின்றோம்.

அம்பாறை, பொலனறுவை போன்ற பகுதிகளில் இருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் இரண்டு மொழிகளிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம்.

அப்படியானால் ஏன் ஏனைய போக்குவரத்து சபைகளில் அதனை செய்ய முடியாது. அதனை வேண்டுமென்றே அதிகாரிகள் செய்கின்றனர்.

இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயங்க மாட்டேன்.

எனவே இதனை உடனடியாகநடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் இந்த விடயம் தொடர்பாக மொழி நடைமுறைப் படுத்தல் அமைச்சர் வாசு தேவ நாணயக்காரவின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன். அவர் இது தொடர்பாக உடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறியிருந்தார்.

ஆனால் தற்பொழுது இந்தநிலை மீண்டும் பழைய நிலைக்குச் சென்றுள்ளது. இந்தநிலைதொடருமானால் ஜனாதி பதியின் கவனத்திற்கு கொண்டு வரப்படும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அல் இக்பால் பாடசாலை திங்கள் வரை மூடப்படும்

## மட்டு. மத்தி கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

காத்தான்குடி,ஜன.4

புதிய காத்தான்குடி, றிஸ்வி நகர் அல் இக்பால் வித்தியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்று மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எல். அஹமட்லெவ்வை தெரிவித்தார்.

தமது பாடசாலைக்கான புதிய கட்டடத்தை பாடசாலைக்கு வழங்குமாறு கோரி மாணவர்கள் மற்றும் பெற்றோர் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு மத்தி வலயப் பணிப்பாளர், எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் பாடசாலைக்கான புதிய கட்டடத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனறு மாண வர்களுக்கு உறுதியளித்தார்.

அதனால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை பாடசாலை மூடப்பட்டிருக்கும் என்று அவர் கூறினார்.

இந்தப் புதிய கட்டடம் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதனால் இந்த வித்தியாலயம் பழைய கட்டடத்தில் சிரமத்துக்கு மத்தியில் இயங்கி வருகின்றமை தெரிந்ததே. (ச)



தேசிய ரீதியில் அரச நிறுவனங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட திறன் அபிவிருத்தி போட்டியில் வெற்றி பெற்ற கிழக்கு மாகாண நிறுவனங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கௌரவிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத், மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அபிவிருத்திக் கூட்டங்கள் மரத்தடியில்!

நுவரெலியா,ஜன.4

அம்பகமுவ பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான வட்டவல, மடகெல்வத்த கிராமத்துக்கு நிரந்தரக் கேட்போர் கூடம் இல்லை. அதனால் அபிவிருத்திக் கூட்டங்கள் ஒரு மரத்தடியில் நடக்கின்றன என்று அந்தக் கிராம மக்கள் கூறுகின்றனர்.

இந்தக் கிராமத்துக்கு உடனடியாகக் கேட்போர் கூடமொன்றை அமைத்துக் கொடுக்க அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சட்டவிரோத துப்பாக்கிகளுடன் ஐவர் மாட்டினர்

அம்பாறை,ஜன.4

அம்பாறை, பொத்துவில் பகுதியில் சட்டவிரோத உள்ளூர் தயாரிப்புக் கட்டுத்துப்பாக்கிகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொத்துவில், றொட்டை வயல் பகுதியில் விவசாயக் காவலுக்கு நின்றதாகக் கூறப்படும் 5 விவசாயிகளையே விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர் என்று பொத்து வில் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, றொட்டை வயல் பகுதியில் விவசாயக் காவலுக்காக அமைக்கப்பட்ட வாடிகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது வாடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 சட்டவிரோத உள்ளூர் தயாரிப்புக் கட்டுத் துப்பாக்கிகளை கைப்பற்றியதுடன், 5 விவசாயிகளையும் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

கைப்பற்றப்பட்ட சட்டவிரோத உள்ளூர் தயாரிப்புக் கட்டுத் துப்பாக்கிகளுடன் விவசாயிகளை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

# மீனவரைக் காணவில்லை

கற்பிட்டி கடற்பரப்பில் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் காணாமற்போயுள்ளார்.

கற்பிட்டி கடற்பரப்பலிருந்து பத்தலகுண்டு தீவை நோக்கி பயணித்த வேளையில் இந்தப்படகு நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான படகு உச்சிமுனை தீவுப் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர். எனினும் படகில் பயணித்தவருடைய நிலை இதுவரை தெரியவரவில்லை.

காணாமற்போனவரை கடற்படையினர் தேடி வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# வயலில் வன்புணர்வு முயற்சி; தாக்குதலில் தப்பியோடியது குழு

## திருக்கோவில் வட்டமடு பிரதேசத்தில் பரபரப்பு

அம்பாறை,ஜன.4

திருக்கோவில்,வட்டமடு வயலில் களை பிடுங்கிக் கொண்டிருந்த மூன்று பெண்களை ஒரு குழுவினர் தாக்கி வன்புணர்வுக்கு உட்படுத்த முற்பட்டுள்ளனர்.

**4 பேர் கொண்ட குழுவினர் பெண்களைத் தாக்கி வன்புணர்வுக்கு உட் படுத்த முற்பட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பெண்கள் மூவரும் எழுப்பிய அபயக் குரலையடுத்து, விரைந்து வந்த பிரதேசவாசிகள் வன்புணர்வுக்கு முயற்சித்தோர் மீது மேற்கொண்ட தாக்குதலில் அவர்கள் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர் பாக மேலும் தெரிவிக்கப் படுவதாவது:-

ஆலையடிவேம்பு மகா சக்தி கிராமத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளிகளான மூன்று பெண்கள் வழமை போல சம்பவதினம் வட்டமடு வயலில் புல்பிடுங்கிக் கொண்டிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த 4 பேர் கொண்ட குழுவினர் பெண்களைத் தாக்கி வன்புணர்வுக்கு உட்படுத்த முற்பட்டுள்ளனர்.

அதனையடுத்து பெண்கள் குறித்த குழுவினருடன் போராடி கூச்சலிட்டு கத்தியுள்ளனர். அதனையடுத்து வயலில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் சென்று பெண்களைத் தாக்கிய குழுவினரை மடக்கிப் பிடிக்க முயன்றனர். எனினும் அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

குறித்த குழுவினருடன் போராடியதில் காயமடைந்த பெண்கள் திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்

கல்லடி,ஜன.4

மட்டக்களப்பு, கல்லடியைச் சேர்ந்த இராசமாணிக்கம் நித்தியானந்தம் அகில இலங்கை சமாதான நீதிவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பட்டதாரியாகிய இவர், மட்டு. சிவானந்தா தேசிய பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழில் பயிற்சிகளுக்கான கற்கை 15 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜன.4

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான கற்கை நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளன.

## வாகனேரிப் பகுதி விவசாயிகள்

# சட்டவிரோத மண் அகழ்வை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்



வாழைச்சேனை,ஜன.4

கிரான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வாகனேரி விவசாயத் திட்ட விவசாயிகள் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்கக் கோரி நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாகனேரி திட்ட விவசாய பிரிவில் 8,500 ஏக்கர் விவசாயக் காணிகள் உள்ளன. இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம் பெறுவதால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

அதனால் மண் அகழ்வை தடை செய்யுமாறு கூறி அப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஏ.ஜயவீரவிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மிதுனம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களை தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் கோபம், அலட்சியப் போக்கு மாறும். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

**கன்னி:** செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உறவினர், நண்பர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

### நாளை

மார்கழி -21 சனிக்கிழமை 05.01.2013
திதி: அட்டமி பி.ப 05.03 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப 10.28 வரை
சுபநேரம்: 03.31- 05.01 வரை
ராகுகாலம்: 09.31- 11.01 வரை

**துலாம்:** எடுத்த வேலையை தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாக செயற்படுவீர்கள். உடல் நலம் சீராகும்.தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**தனுசு:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**மகரம்:** அசதி, சோர்வு வந்து நீங்கும். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கும்பம்:** புதிய நட்பு மலரும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். தாய் வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் இலாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எச்சரிக்கையுடன் செயற்படப் பாருங்கள்.

**மீனம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புதிய யுக்தியால் விற்றுத் தீர்ப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | | | | | | | |
| | | | | 4 | 5 | 8 | | 9 |
| | 8 | | 1 | | | 5 | 4 | |
| 7 | | 2 | | | 3 | 9 | | |
| 8 | 1 | | | 5 | | | 7 | 6 |
| | | | 6 | | | 4 | | 2 |
| | 4 | 6 | | | 9 | | 2 | |
| 3 | | 8 | 2 | 7 | | | | |
| | | | | | | | 8 | 3 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 5 | 4 | 1 | 3 | 6 | 8 |
| 6 | 5 | 1 | 8 | 7 | 3 | 4 | 2 | 9 |
| 8 | 3 | 4 | 6 | 2 | 9 | 7 | 5 | 1 |
| 1 | 8 | 2 | 3 | 6 | 7 | 5 | 9 | 4 |
| 4 | 9 | 7 | 2 | 1 | 5 | 8 | 3 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 9 | 8 | 1 | 7 | 2 |
| 3 | 1 | 5 | 9 | 8 | 2 | 6 | 4 | 7 |
| 9 | 4 | 8 | 7 | 5 | 6 | 2 | 1 | 3 |
| 2 | 7 | 6 | 1 | 3 | 4 | 9 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்துதல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது.( உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள் ). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் ( மீண்டும் மீண்டும் ) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாண்டு நினைவலைகள்



தோற்றம்
19.12.1933

மறைவு
17.12.2011

## அமரர் தங்கரத்தினம் குமாரசுவாமி (முத்தம்மா)

**திதி:- ஸப்தமி**

கண்கள் கலங்குதம்மா உங்கள்
பிரிவை நினைத்து விட்டால்
கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கள்
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்று விட்டீர்கள்
ஆண்டொன்று சென்றாலும்
எம் துயரம் ஆறவில்லை அம்மா
தெய்வத்தால் தரப்பட்ட தங்கம்
நீங்கள் என்பதனால்
எங்கள் உள்ளங்களில் சாகாவரம்
பெற்று என்றுமே வாழ்திடுவீர்கள்.

ஓம் சாந்தி!

'நந்த வில்லா'
Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

-குடும்பத்தினர்.

(27490)(2.6.7)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**கடை வாடகைக்குண்டு**

மனோகராத் தியேட்டருக்கும் சிவன் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 9616895
(27650) (6.7.4)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 4 அறைகள், பெரிய வரவேற்பறை, 2 குளியலறைகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் உண்டு.
தொடர்பு: 077 4527671, 021 7903444. (27565) (6.7.4)

**காணி விற்பனைக்கு**

பண்ணை றோட்டின் மினிபஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக வெற்றுக்காணி நிலப் பரப்பு 7 ½ விற்பனைக்குண்டு.
(தரகர்கள் தேவை இல்லை)
தொடர்பு: 077 8702508
(275330) (6.7.4)

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர்) தரப் பயிற்சி நெறி-2013ஜனவரி- ஒக்ரோபர்.

## விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையால் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கீழ்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவுப் பணியாளர் தாராதரப்பத்திர (சாதாரண) தரப்பயிற்சி நெறியில் 1 ஆம், 2 ஆம் பிரிவுகளில் சித்தி பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
2. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர (சாதாரண) தரப்பயிற்சி நெறியில் மூன்றாம் பிரிவில் சித்திபெற்று 2 வருடம் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்த நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
3. க.பொ.த(உயர்) தரப்பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்ற நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
4. வெளிவாரி மாணவர்களைப் பொறுத்தவரை க.பொ.த (உயர்) தர பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று (வர்த்தகம்/கணிதம்) பாடங்களில் சித்தி பெற்றவர்களும் அதற்கு மேலான தகைமையுடையவர்களும் கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண) தர பரீட்சையில் சித்தி பெற்றவர்களும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப் படுவர்.

விண்ணப்பப்படிவங்களை சுயமாகத் தயாரித்து 2013.01.15 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர்,கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை A9 வீதி,- டிப்போ சந்தி அருகில் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச்சபை.

(28139) (6.7.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பாகுபாடின்றி சகலரும் மதிக்கப்படவேண்டும்

## நாமல் எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு,ஜன.4

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பாகுபாடு காட்டாமல் அனைவரும் இலங்கையர் என்ற அடிப்படையில் சமமாக மதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லிணக்கத்தில் இளைஞர்களின் பங்கு எனும் தலைப்பிலான தேசிய மாநாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இந்த சோகமான நிலையை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நான் சென்றபோது அறிய முடிந்தது.

எனவே சிங்கள இளைஞர்கள் தமிழ் கற்க வேண்டும். அதேபோன்று தமிழ் இளைஞர்கள் சிங்களம் கற்க வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் பொதுமொழி ஒன்றின் ஊடாக இரு சமூகத்தினரும் தொடர்புகொள்ள வேண்டும். அதற்காக இரு சமூகத்தினரும் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்க வேண்டும்.

இது இரண்டு சமூகத்தினரையும் இணைப்பதற்கு முன்னிற்கும். இளைய சமூகத்தினர் மொழிகளைக் கற்பது மிக முக்கியமாகும். அதேபோன்று தாய் நாட்டின் தேசிய மொழிகளைக் கற்பதில் இளைய சமூகத்தினர் அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டும்.

அது அவர்களின் தொழில் முன்னேற்றத்துக்கு மாத்திரம் உதவுவதில்லை. இனங்களுக்கிடையில் நல்லெண்ண தூதுவர்களாகச் செயற்படுவதற்கும் உதவும்.

மாணவர்கள் ஏனைய சமூக மாணவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும். நாடு ஒற்றுமைப்படுவதற்கு பாடசாலைகளே சிறந்த இடமாகும்.

இளைஞர்களே நாட்டின் இரத்தங்களாகும். இதனால் நாட்டை வெற்றிப் பாதையில் கொண்டு செல்வதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பவர்களும் இளைஞர்களே. எதிர்காலத்தில் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு ஒரு போதும் இளைஞர்கள் முன்வரமாட்டார்கள். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இளைஞர்கள் உறுயளிக்க வேண்டும்.



இளைஞர்கள் வாழ்க்கை மற்றும் சமூக விடயங்களில் சமமாகக் கருதப்பட வேண்டும். எந்தவொரு இளைஞரும் கல்வி, வாழ்வாதாரம் போன்ற நாளாந்த விடயங்களில் பாகுபாடு காட்டப்படுவதாக நினைக்கக் கூடாது. இளைஞர்கள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தும் விளையாட்டின் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.-என்றார். (ச)

## இன, மத, பால் நிலையில் வேறுபாடு காட்டப்படமாட்டாது– கல்வி அமைச்சர்

கொழும்பு,ஜன.4

இலங்கையில் உள்ள எந்தப் பாடசாலையும் இன, மத, பால்நிலை வேறுபாடு அடிப்படையில் பிரிக்கப்படமாட்டாது.

இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கண்டி, நுகவெல மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் மொத்தமாக 9641 பாடசாலைகள் உள்ளன. அதில் மகளிர் பாடசாலைகள் 130 ஆகும். ஆண்கள் பாடசாலை 209 ஆகும். மீதியானவை 9,302 கலவன் பாடசாலைகளாகும். சில பெற்றோர்கள் கலவன் பாடசாலையெனின் பயப்படுகின்றனர்.

இலங்கையில் பல்கலைக் கழகங்களோ, தொழில்நுட்பக் கல்லூரிகளோ ஆண்கள், பெண்கள் என பிரிக்கப்பட்டவையல்ல. அவை



அனைத் தும் கலவனாகவே உள்ளன. எனவே கலவன் பாடசாலைகள் குறித்து பெற்றோர்கள் பயப்படவேண்டிய தேவையில்லை.

இலவசக் கல்வியை அனைத்து மாணவர் களுக்கும் சமமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி விசேட திட்டமொன்றை ஆரம்பித்தார். அதன் மூலம் இலங்கையில் 1000 பாடசாலைகளை இடை நிலைப் பாடசாலைகளாக அபி விருத்தி செய்கின்றோம். அதற் காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான அனைத்து வளங்களும் வழங்கப்படும்- என்றார். (ச)

# இரட்டைக் குடியுரிமை; இனிமேல் புதிய நடைமுறை

## கோத்தபாய அறிவிப்பு

கொழும்பு,ஜன.4

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க, இந்த ஆண்டில் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இரட்டைக் குடியுரிமையைப் பெறவிரும்புவோர் இதுதொடர்பில் விசாரணை செய்யும் இடத்துக்கு நேரில் வருகை தர வேண்டும்.

அந்த விசாரணையின் போது இரட்டைக் குடியுரிமையைப் பெறவிரும்புவோரின் தனிப்பட்ட விவரங்கள், அவர்களது பின்னணி போன்றன முற்றுமுழுதாக ஆராயப்படும்.

இதற்கு முன்னர் இரட்டைக் குடியுரிமை பெறும் போது அவ்வாறான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை.

கூடுதலான இலங்கையர்கள் 1980 ஆம் ஆண்டுகளில் கனடா, பிரிட்டன் போன்ற பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இலங்கையில் வாழமுடியாது என்று கூறியே இவ்வாறான நாடுகளுக்குச் சென்றனர்.

அவர்களில் பெரும்பாலானவர்களின் அரசியல் தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த நாடுகளின் குடியுரிமையையும் பெற்றுக் கொண்டனர்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடன் தொடர்புடைய,



இரட்டை குடியுரிமையைக் கொண்டுள்ள ஈழ ஆதரவாளர்கள் அனைத்துலக மட்டத்தில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான காரணங்களைக் கருத்தில் கொண்டு இரட்டை குடியுரிமையைப் பெறுவதற்கான பழைய நடைமுறைகள் நீக்கப்பட்டு, புதிய நடைமுறைகள் கொண்டு வரப்படவுள்ளன. இதுதொடர்பில் புதிய சட்டவரைவு ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மொறட்டுவ, ராவத்தாவத்தையிலுள்ள அன்னை தெரேசா சிறுவர் இல்லத்துக்குச் சென்று அங்குள்ள சிறார்களுக்கு புதுவருட பரிசுப் பொருள்களை வழங்கினார். அருகில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை காணப்படுகிறார்.

# மரண தண்டனையை குறைக்க நடவடிக்கை

## நீதி அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.4

சில குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள்கால அல்லது நீண்ட கால தண்டனையாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தெரிவித்தார். சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே தண்டனை குறைக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

கைதிகளின் மரண தண்டனையை அவர்களின் குற்றங்களுக்கு ஏற்ப குறைக்க வேண்டும் என்று சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலர் வழக்கைச் சரியாகக் கொண்டு செல்லாத காரணத்தினால் மரண தண்டனையைப் பெற்றுள்ளனர்.

வழக்கு விசாரணை களின் போது சட்ட உதவி கிடைத்திருந்தால் மரண தண்டனையைத் தவிர்த்திருப்பர்.

மரண தண்டனை நிறைவேற்றப்படுவதில்லை. எனவே புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துடன் இணைக்கக் கூடியவர்களை இனங்காண வேண்டும்.

கடும் குற்றவாளிகள் தொடர்ந்தும் மரண தண்டனைக் கைதிகளாக வைத்திருக்கப்பட வேண்டும். எனவே மரண தண்டனையை முற்றாக ஒழிக்கும் திட்டம் இல்லை.

தற்போது 300 இற்கும் கூடுதலான மரண தண்டனைக் கைதிகள் உள்ளனர். இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்படுகின்ற போதிலும், அவை நிறைவேற்றப்படுவதில்லை. இறுதியாக 1976ஆம் ஆண்டு ஒரு குற்றவாளி தூக்கிலிடப்பட்டார்.-என்றார்.

மரண தண்டனையை ஒழிக்கும் விருப்புக்குரிய சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டு மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் பிரதீபா மகாநாமஹேவா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# தாதியருக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு

## அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு,ஜன.3

மேலதிக வேலைக்கான கொடுப்பனவு, இடர் கொடுப்பனவு என்பவை இந்த மாதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் உட்பட பல உயர் அதிகாரிகளுடனான சந்திப்பை அடுத்து, சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுப்பனவு அதிகரிப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தாதியர் சங்கம் கூறியுள்ளது.

அதன் பிரகாரம் தரம் 2பி தாதியரின் மேலதிக வேலைக் கொடுப்பனவு 65 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகவும், தரம் 2 ஏ தாதியரின் கொடுப்பனவு 75 ரூபாவிலிருந்து 125 ரூபாவாகவும், தரம் 1 தாதியரின் கொடுப்பனவு 80 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.


இடர் கொடுப்பனவு 200 ரூபாவிலிருந்து 750 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது எமக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும். அதனால் 11,000 தாதியர் நன்மையடைவர் என்று சங்கத்தின் அனைத்துலக சங்கச் செயலாளர் அசோக அபேநாயக்க கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## குமாரவேலு எதிர்குலசிங்கம்



(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், இலங்கை மின்சார சபை, யாழ்.மாநகர சபை)

கொழும்புத்துறை 4ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு எதிர்குலசிங்கம் நேற்று (03.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் இலட்சுமி(3ஆம் வருட மாணவி இராமநாதன் நுண்கலைப்பீடம்),பவிதா, பகீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவ ார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2013) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,வேலணை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம், ஜன.4

சுழிபுரம் மேற்கு, கதிர்வேலாயுதத் சுவாமி பெரிய தம்பிணரான் ஆலயத்தில் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிமுதல் திருவாசகம் முற்றும் ஓதுதல் இடம்பெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இது நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் 'இதனைத்' தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் பங்குபற்றுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-28)


NORTH LEAD EDUCATIONAL CENTER

**சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்**

A/L பரீட்சை முடித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து அனுபவமான ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். பரீட்சை முடிவின் பின் சான்றிதழ் வழங்கப்படும்

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

**தேவை**

கணினி முன் அனுபவமுடையவர்கள் தேவை. சனிக்கிழமை (05.01.2013) 8.30 - 5.00 மணிவரை சமூகம் அளிக்கலாம். (இருபாலாரும் விரும்பத்தக்கது)

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல: 021 222 3081


## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திருமதி மனோகரி சொக்கலிங்கம் அவர்களின் பாசமிகு மாமியார்
திருமதி கிருஷ்ணபிள்ளை செல்லாச்சி
அவர்கள் நேற்று (03.01.2013) இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தவிசாளர், செயலாளர் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். ஊழியர் நலன்புரி சங்கம்.
(C/2868) (6.7.2) பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

# மரண அறிவித்தல்

## திருமதி குணமணி அம்மா சுந்தரராஜா



சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட குணமணி அம்மா சுந்தரராஜா அவர்கள் 01.01.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

. அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரராஜாவின் அன்பு மனைவியும், விமலாதேவி (சுந்தரி - நோர்வே), ஸ்ரீகலா (ஆசிரியை, வ/ விபுலானந்தாக் கல்லூரி), சுந்தரகுமார் (கனடா), சுகுமார் (சுவிஸ்), சுவேந்திரகுமார் (பிரான்ஸ்), சுகந்தகுமார் (சுந்தர் கேபிள், சுதுமலை), சுகிந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன் புத் தாயும், மகாலிங்கம் (நோர்வே), சுரேஷ் (எக்ஸ்போ ஸ்ரீஸ் உரிமையாளர், வவுனியா), இளங்கோமதி (கனடா), விஜிதா (சுவிஸ்), கலைவாணி , அனுஷா ஆகியோரின் பாசமிகு மாமியும், குணமலர், குணதேவி, காலஞ்சென்றவர்களான குணவதி, குணலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுமணகுமார், சுதனகுமார், சுஜந்தகுமார், புருஷோத்மன்,சமுதிகா,சஜிதா,சுஜீபா,சுஜன்,சுருதிகா, சுசந்தகுமார், சந்யா, சாத்வீகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.


**திருத்தி வாசிக்கவும்**

கடந்த 01.01.2013 உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலரில் XIX ஆம் பக்கத்தில் வெளியாகிய Nagaratnam & Co இன் தொ.பே.இலக்கத்தை 021 222 7282 எனத் திருத்தி வாசிக்கவும்.

**காணி விற்பனைக்கு**

உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 1133375, 0041 772910427.
(27566) (6.7.4)

**SUBRA 2015 - A/L**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
தரமானதும் தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டல்
05.01.2013 - சனி மாலை 5.00 மணி

**கலைப்பிரிவு**

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
| --- | --- | --- |
| தமிழ் | K. மரீந்தன் BA. (Hons) | அமரசிங்கம் |
| அளவையியல் | E.S.பவன் BA. (Hons) | E.S.பவன் BA. |
| நாடகம் | கணேஷ் BA (Hons) | R.விநோ BA. |
| இந்து நாகரிகம் | க.சிவாகரன் BA. | T. சிறீஸ் BA |
| அரசியல் | K.சுகாஷ் LLB. (Hons) | S. இளங்கோ BA |
| வரலாறு | R.R.ஆனந்தன் BA. | நிரோபன் |
| புவியியல் | S. ஐங்கரன் MA. | நவநீதன் |
| மனைப்பொருளியல் | S. மஜீபன் BA | S. மஜீபன் BA |
| விவசாயம் | சசி | சசி |
| GIT | S. சசிகரன் B.Sc. | S. அம்பி BSc. |

**வர்த்தகப் பிரிவு**

| | | |
| --- | --- | --- |
| வணிகக்கல்வி | N. நந்தீஸ் BBA (Hons).MEd | சிரேசன் BBA |
| கணக்கீடு | A. சுபேஷன் BBA (Hons).M.A | கருணாநாதன் BBA |
| பொருளியல் | S. ஜெயக்குமார் BA. (Hons).MA. Econ | S.S.சிறீ B.Com. |

**கணித/ விஞ்ஞான பிரிவு**

| | | |
| --- | --- | --- |
| இணைந்த கணிதம் | விஜேந்திரன் B.Sc, A. குணசிங்க B.Sc | தவசேகர் B.Sc Med |
| பௌதிகவியல் | R. மதி B.Sc. உமாபிரோவியம் B.Sc | தில்லை B.Sc |
| இரசாயனவியல் | S. வர்மன் B.Sc. | G.கோபோ B.Sc |
| உயிரியல் | S. திவாகரன் B.Sc. | தயாபரன் B.Sc. |

(பி/5197) (15.6.7)

**பொருளியற் கல்லூரி BARATHY**

**A/L 2015**

எமது மூன்று நிறுவனங்களிலும் ஆரம்பம் கலை வர்த்தகப் பிரிவு
06.01.2013 ஞாயிறு

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரியகுழுவினால்

| பாடம் | பொருளியற் கல்லூரி | | BARATHY |
| --- | --- | --- | --- |
| | நாவலர் ரோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். ரோட், இணுவில். | பிரதான வீதி, சித்தன்கேணி |
| * பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் | மகேந்திரன் |
| * கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| * வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| * தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் | பாலா |
| * இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | N.T.தரன் | N.T.தரன் |
| * புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| * நாடகமும் அரங்கியலும் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| * வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| * அரசியல் | கோகுலன் | கோகுலன் | கோகுலன் |
| * அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் | R.P.சர்மா |
| * கிறிஸ்தவ நாகரிகம், கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| * இந்து சமயம் | N.T.தரன் | N.T.தரன் | N.T.தரன் |
| * ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் | ஆனந்தன் |
| * இலகு கணிதம் | செந்தூரன் | செந்தூரன் | செந்தூரன் |
| * சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |
| * சங்கீதம் | குமுதினி | குமுதினி | குமுதினி |
| * மனைப்பொருளியல் | றஜிதா | றஜிதா | றஜிதா |
| * ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| * I.C.T | அம்பி | அம்பி | அம்பி |
| * விவசாயம் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் |

Note: யாழ் நகர் பொருளியற் கல்லூரிக்கு வரும் மாணவர்கள் கவனத்திற்கு, யாழ் நகரில் எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் மாணவர்களை ஈர்க்கும் வகையில் எமக்கு தொடர்பில்லாத நிறுவனம் எங்கள் அருகில் இருக்கின்றது.இங்குள்ள பிரபல ஆசிரியர்கள் அங்கு எவருமே கற்பிப்பதில்லை என்பதை அறியத்தருவதோடு, நீங்கள் வரும் பொழுது நாவலர் றோட்டில் உள்ள பொருளியற் கல்லூரி எது என்பதை அவதானித்து வரவும்.

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

| | யாழ் நகரில் | இணுவிலில் | BARATHY |
| --- | --- | --- | --- |
| கலைப்பிரிவு | 8.00 | 9.00 | 12.00 |
| வர்த்தகப்பிரிவு | 8.00 | 2.00 | 8.00 |

(பி/5222)(5-6-7)

இயக்குநர், ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## ஆலயத்துக்கு சகடை அன்பளிப்பு

வடமராட்சி, ஜன.4

புலோலி புற்றளை சித்தி விநாயகர் கோயிலுக்கு சுவாமி வீதி வலம் வருவதற்குப் பயன்படுத்தப்படும் சகடை ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வசித்து வரும் அந்தப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கணேசமூர்த்தி என்பவரால் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் சகடை நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.(வ-8)

## கைதடி கலைநகர் சனசமூக நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஜன.4

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கைதடி கிழக்கு கலைநகர் சனசமூக நிலைய நிர்மாணப் பணிகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் சனசமூக நிலைய உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அவர் இந்த நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

கலைநகர் சனசமூக நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கென 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டதன் மூலம் சனசமூக நிலையப் பணிகளை மேலும் விஸ்தரிக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவித்துள்ளார்கள்.(3-86)

## கலைஞர்கள் கௌரவிப்பு

2012 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது பெற்ற நவாலியைச் சேர்ந்த இரு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

புதுவருட தினத்தன்று நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் கனகசபைநடேசன், கந்தையா-சரவணபவன் ஆகிய இருவருமே கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவார். (வ-100)



நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 190 ஆவது பிறந்த தினம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கலை நிகழ்வில் பங்குகொண்ட மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் பரிசு வழங்குகிறார்.

## மீன் கூறுவிலை மடங்கள் 19 விரைவில் வர்த்தமானியில்

### வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளில்

வடமராட்சி, ஜன.4

வடமராட்சி வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் உள்ள 19 மீன்கூறு விலை மடங்களை வர்த்தமானியில் பிரசுரித்து அங்கீகரிக்க பருத்தித்துறை பிரதேச சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதியில் கற்கோவளம், சுப்பர்மடம், வியாபாரிமூலை, இன்பர்சிட்டி, சக்கோட்டை, பொலிகண்டி கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள 6 மடங்களும்,

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியில் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, வத்திராயன், உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று வடக்கு, மாமுனை, நாகர்கோவில், குடத்தனை வடக்கு, பொற்பதி, மணற்காடு ஆகிய இடங்களில் உள்ள 13 மடங்களுமே அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (3-8)

## கட்டாக்காலிகளால் தொல்லைகள் சிரமத்தை எதிர்நோக்கும் மக்கள்

வடமராட்சி, ஜன.4

கரணவாய் வடக்கு நாச்சிமார் கோயிலடிக் கிராமத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகள் வெகுவாக அதிகரித்துள்ளன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள கோயில்கள், கடைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுவீதிகளில் இரவு வேளைகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் படுத்துறங்கி கழிவுகளையும் வெளியேற்றி அசிங்கப்படுத்திவருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நடமாடும் பொதுமக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

கட்டாக்காலி ஆடு, மாடுகளினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்கும் முகமாக கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் மயிலு சத்தியநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். (3-8)

## சுரங்கத்துள் தடம்புரண்டது உடரட்ட மெனிக்கே ரயில்

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த 'உடரட்ட மெனிக்கே' ரயில், ஒய்ய பிரதேசத்தில் அமைந்துள்ள ரயில் சுரங்கப் பாதைக்குள் வைத்து தடம்புரண்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அம்பேவல மற்றும் இகல்கஸ்ஸின்ன ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் மேற்படி சுரங்க ரயில் பாதை அமைந்துள்ளது.

இதனூடாக பயணித்துக்கொண்டிருந்த மேற்படி ரயிலின் எஞ்சினுடன் மற்றுமொரு ரயில் பெட்டி மோதியதால் ரயில் தடம்புரண்டுள்ளது. இந்த சம்பவத்தால் மலையகத்துக்கான ரயில் சேவை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## செஞ்சிலுவைக் கருத்தரங்கு நாளை நடைபெறமாட்டாது

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

## அல்வாய் மனோகரா வீதி 33 லட்சம் ரூபா செலவில் திருத்தம்

வடமராட்சி,ஜன.4

பல கிராமங்களை ஒன்றிணைக்கும் அல்வாய் மனோகரா வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் 33 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் சி.இரத்தினேஸ்வரன் இந்த வீதி திருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறி, அதனைத் திருத்தி புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நெல்சிப் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.

சமணந்தறையில் ஆரம்பிக்கும் இந்த வீதி அல்வாய் வடக்கு, தெற்குடன் இணைகின்றது.

அயலில் உள்ள பல கிராமங்களை ஒன்றிணைக்கும் வீதியாக இந்த மனோகரா வீதி இருந்து வருகின்றது. (ம-8)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் - 21.09.1952
விண்ணில் - 05.12.2012



**அமரர் அல்பேட் சாள்ஸ் மத்தியூஸ்**

கலங்கரை விளக்காக எமக்கு நல்வழி காட்டினீர்கள்
கண்ணை இமை காப்பது போல எமைக் காத்தீர்கள்
நீள் பிரிவு எமை வாட்டத் துடிக்கின்றோம் உங்கள் பிரிவால்
வானில் நிற்கும் உங்களைப் பார்த்து மண்ணில்
நின்று இறைவனிடம் வேண்டுகின்றோம்

பண்பொளி வீசி அன்புக்கு அர்த்தமாய் வாழ்ந்தீர்கள்
பாசமழை பொழிந்து விண் எங்கும் ஓங்கி நின்றீர்கள்
பயிர் வான் மழை தேடுவது போல் தந்தையே – நாம்
நீங்கள் பாவித்திடும் அன்பை வேண்டுகின்றோம்

உங்கள் இனிய கனவுகளை நனவாக்கி
இறையருளோடும் உங்கள் ஆசியோடும் இவ் உலகில்
மனம் கலங்காது தளராது பயணிக்கின்றோம்.

3, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**- குடும்பத்தினர்.**

(27532)(2.6.7)

## மரண அறிவித்தல்



### திருமதி மனுவேற்பிள்ளை திரேசம்மா

மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மனுவேற்பிள்ளை திரேசம்மா 30.12.2012 அன்று நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொம்மைமடுத்தீன் - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற மடுத்தீன் மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், ஆரோக்கியநாதர், அருட்சகோதரி பேக்ஸ்மன் (தி.கு. கன்னியர்மடம், பாலையூற்று, திருகோணமலை), சுவக்கீன்பிள்ளை (செல்லத்தம்பி), ஞானம்மா(செல்லக்குமாரத்தி), இராயப்பு, லெற்ரீசியா, அன்ரன் யோகநாதன் (கனடா), எட்மன்(இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், புஸ்பராணி, மேரிறோஸ்(றதி), றோகநாதன் யோசப் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்), மரியகொறற்ரா (மணி, ஆனைக்கோட்டை), சேவியதாசன்(ஆசிரியர்), மரியகரோலின் (இந்திரா), ஸ்ராலினா(மாலதி), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மருசலீனம்மா, அந்தோணிப்பறுனாந்து, சிங்கராயர் மற்றும் பாக்கியநாதர் (ஆசிரியர்-கனடா) மரியகூசை (இளைப்பாறிய ஆசிரியர் S.P.C - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30/3, விதான்ஸ் வீதி,சுண்டுக்குளி என்கிற முகவரியில் வைக்கப்பட்டுள்ளது.

பூதவுடல் 05.01.2013 சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு மண்டைதீவில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பின்னர் ந.பகல் 12.00 மணிக்கு புனித பேருதுருவானவர் ஆலயத்தில் இடம்பெறவிருக்கும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து பூதவுடல் புனித பேருதுவானவர்சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/3, [illegible], சுண்டுக்குளி,
[illegible]382.

(27569)(6.7.11)

தகவல்: **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிக வருமானம் உழைக்க அரியதோர் சந்தர்ப்பம்!!!!

வீட்டில் இருந்தவாறே பொழுது போக்கு நேரத்தில் இலகுவான முறையில் பணம் சம்பாதிக்கலாம். வேலை செய்பவர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்புள்ளது. O/L முடித்த மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம் உண்டு. இது சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளமுடியும். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்புவர்கள் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை எமது தொலைபேசிக்கு உடனடியாக SMS அனுப்பி முற்பதிவு செய்து கொள்ளவும்.

காலம் - 06.01.2013
நேரம் - 9.30 a.m
இடம் - 187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி,
(கொட்டடி வீதி, சத்திரச்சந்தி அருகில்)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு - 077 1336124, 077 3775000.

(27571) (6.7.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
05.06.1958

விண்ணில்
05.12.2012

திதி :
பூரணைக்குப்
பின் வரும் சப்தமி



யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஓலுமடு, மாங்குளத்தை வசிப்பிடமாகவும் பொன்னாவரசங்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி இராசேந்திரம் இராஜேஸ்வரி

கடந்த 05.12.2012 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தியறிந்து ஓடோடி நேரில் வந்து ஆறுதல் கூறித் தேற்றிய உற்றார், உறவினர், உத்தியோகத்தர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் வெளிநாட்டில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் கொடுத்தவர்களுக்கும், மரணச் சடங்கில் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (04.01.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னாவரசங்குளம்,
வவுனியா.
தொ.பே.: 077 966 4138

- குடும்பத்தினர்.
சோ.இராசேந்திரம்

[24396][5.6.7]

## மனமார்ந்த நன்றிகள்

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நெல்லியடி மத்திய சந்தையில் திரு.ப. பரமேஸ்வரன் அவர்களுடைய ஆஷா றேடர்ஸ் என்னும் வர்த்தக நிலையம் மின் ஒழுக்கால் ஏற்பட்ட தீ விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்காக ரூபா 21 லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து தொளாயிரத்தி இருபத்து ஆறு (2132926/=) ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேசன் வழங்கியது. நெல்லியடி வாணிபர் கழகம் நெல்லியடிக் கிளை முகாமையாளர் திரு. ஆறுமுகன் அவர்களுக்கும் பிராந்திய முகாமையாளர், உத்தியோகத்தர்களுக்கும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்பரேசன் நிறுவனத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் எமது ஒத்துழைப்பு என்றும் உங்களுக்குத் தரப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாணிபர் கழகம், நெல்லியடி.

(சி/5230) (6.7.4)

## ஆறாம் ஆண்டில் ஆறாத்துயரில்

உதிப்பு
01
★
02
★
1945

உதிர்வு
10
★
01
★
2007

அமரர்
### பொன்னையா தம்பையா

(திதி: அபரபக்க சப்தமி
04.01.2013)



அன்பும் பண்பும் அரவணைப்பும் நிறைந்த தெய்வமே!
எம்மை அவனியில் சிறப்புற வாழ வைத்த பெருமகனே!
எந்தையே ! எம் தெய்வமே ! ஆறாது உங்கள் நினைவு
உங்கள் முகம் எங்கள் மனதில் இன்னும் நிழலாடுது
தாங்கள் பிரிந்து ஆண்டுகள் ஆறாகி
விட்டதை நம்ப முடியவில்லை
உங்கள் ஆத்மசாந்திக்காய் வேண்டுகின்றோம்
என்றும் தெருவாரப் பிள்ளையாரை நாம்

டச்சு வீதி, மந்துவில்கிழக்கு.
கொடிகாமம்.

ஆறாம் ஆண்டு நினைவில்
குடும்பத்தினர்.

[c/2866][6.7.

## காட்சிப் பொருளை வீதியோரம் வைத்தால் சட்ட நடவடிக்கை

### வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கு முன்காக வீதியோரமாகக் காட்சிப் பொருள்களையோ, விளம்பர பலகைகளையோ யாராவது வைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் அறிவித்துள்ளார் என்று யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.வர்த்தக சங்கத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அநேகமான வியாபாரிகள் தமது வியாபார நிலையங்களின் முன்பாக வீதியில் அல்லது வீதியை அண்மித்து தமது கடை எல்லையைத் தாண்டி தமது காட்சிப் பொருள்களையோ விளம்பரப் பலகைகளையோ வைத்திருப்பதைக் காண முடிகிறது.

அவ்வாறு வைத்திருக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முதலாம் திகதி தொடக்கம் அந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதனைமீறி யாராவது செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

## சாவகச்சேரியில் அபிவிருத்தி

தென்மராட்சி, ஜன.4

சாவகச்சேரி பிரதேச சபையினர் இந்த வருடம் சபை நிதியிலிருந்து பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை உறுப்பினர்கள் ஊடாக மேற்கொள்ளவுள்ளதாக பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமூகமளிக் கப்பட்டது.

ஒவ்வொரு உறுப்பினர்களாலும் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களுக்கெனத் தலா ஐந்து லட்சம் ரூபாவரை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் நேற்றைய கூட்டத்தில் உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு குறித்த காலப் பகுதிக்குள் செய்து முடிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-19)

## யா/நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்று கூடல்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 06.01.2013 காலை 9.30 மணியளவில் கல்லூரியில் ஒன்று கூட இருப்பதனால் இந்த ஒன்று கூடலில் கல்லூரியில் இதுவரை படித்த பழைய மாணவர்கள் கல்லூரியின் அபிவிருத்திப் பணியை முன்னெடுப்பதற்கு ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு- வருகைதரும் போது எங்கள் கல்லூரி சம்பந்தமான 1990 இற்கு முற்பட்ட ஆவணங்கள் ஏதும் இருப்பின் அதனையும் கொண்டு வரவும்.

அதிபர்.

(27570) (6.7.4)

## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு - 20.02.1948

இறப்பு - 19.12.1989

திதி : 04.01.2013

### அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்)

(முன்னாள் உரிமையாளர் - குகன் ஸ்ரோர்ஸ். தலவாக்கலை)

அன்பின் ஆருயிர் அப்பாவே ஆண்டுகள் இருபத்து மூன்று
சென்றாலும் தங்கள் பசுமை நிறைந்த நினைவுகள்
எம்மைவிட்டு நீங்காது எம் வாழ்வில் நின்று எமக்கு
வழிகாட்டியாக இருந்து அருள்புரிவீராக
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழும்
- குடும்பத்தினர்.


## Banking

Classes for **CBF & DBF** for Bankers & Non Bankers

| Level | From | To | Subject |
|---|---|---|---|
| CBF LEVEL | 8.00 am | 10.00 am | The Finance Service Environment |
| | 10.15 am | 12.15 am | Economics |
| | 12.45 pm | 14.45 pm | Structure of Accounts. |
| | 15.00 pm | 17.00 pm | Customer Relationship Management |
| | 8.00 am | 10.00 am | Marketing, Sales and Customer Service |
| | 10.15 am | 12.15 am | Risk Awareness and Corporate Governance. |
| | 12.45 pm | 14.45 pm | Managing People in Organizations. |
| DBF LEVEL | 8.00 am | 10.00 am | Advance Management and Organizations |
| | 10.15 am | 12.15 am | Accounting Analysis and Planning |
| | 12.45 pm | 14.45 pm | Marketing Management |
| | 15.00 pm | 17.00 pm | Monetary & Financial Systems |
| | 8.00 am | 10.00 am | Law Relating to Financial Services. |
| | 10.15 am | 12.15 am | Business Lending |
| | 12.45 pm | 14.45 pm | International Trade Finance. |
| | 15.00 pm | 17.00 pm | Risk Financing and Management |

OUR LECTURE PANEL

1. Mr.A.R.Kulendiran (AIB) Double Gold Medalist (awarded by IBSL), Former Manager- Training at Commercial Bank. 31years of Banking experience and was a Leading Lecturer in the Lecture panel of Sri Lanka Institute of Bankers and Oxonia Institute for 5 years, having coached more than 2000 candidates in Colombo. Senior Manager -Northern Region, Commercial Bank
2. Mr.Sriskanthakumar (BBA, CIA, FCBA) - A leading Experienced Lecturer in the Accounting, Management and Banking Field and a member of the IAS lecturer panel.
3. Mr.E.J.Thampoe (MBA Col, BBA Hons, MAAT, Expert in Micro Finance, Leading lecturer in ACCA (Produced students who won Sri Lankan prices), CIMA, CA & Banking field.
4. Two reputed experienced Lecturers in the Academic Field.
5. Two reputed experienced bankers who got distinctions

2 Business Solutions

Old Post Office, Thirunelveli (Adjoning Peoples Bank Ext. Branch)

For Registration and Further Detail Call on
0777-306162

Head Offiec:
# 23, Alexandra Road, Colombo- 06
email: atwozbusinesssolutions@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு வந்த பஸ் தள்ளினாலே இயங்கும்?

யாழ்ப்பாணம், ஜன.4

அண்மையில் நயினாதீவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட பஸ்ஸைத் தள்ளியே இயக்கவைக்கவேண்டியுள்ளது என்றும் புதிய பஸ் எனக்கூறி பழைய பஸ் ஒன்றே அங்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இங்கு சேவைக்கென விடப்பட்ட மூன்று பஸ்களும் பழையனவே எனவும் கூறப்பட்டது. சேவையில் அக்கறை இருந்திருந்திருப்பின் புதிய பஸ்ஸை அனுப்பியிருப்பார்கள் என்றும் கவலை தெரிவிக்கின்றனர். (ம-7)



தனா பியூட்டி பஷன்
இலவச பயிற்சி 07.01.2013 ஆரம்பம்
திருமண அலங்காரம் 20,000
எழுத்து அலங்காரம் 10,000
பூப்புனித நீராட்டு 15,000
கேக் 1500-6500வரை
நாகசடை, பொக்கே, மாலை, மணவறை (இயற்கை, செயற்கை)
0775098103
0777316453


## மரண அறிவித்தல்

### இராசரட்ணம் பூலோகசிங்கம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் பூலோகசிங்கம் நேற்று (03.01.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

(18004) (6.7.4)

## 'தேசிய சுகாதாரத் திட்டம்' ஜனவரி முதல் நடைமுறைக்கு

சுகாதாரத் துறையில் நிலவும் சவால்களை வெற்றி கொள்வது தொடர்பான ஐந்தாண்டு கால தேசிய சுகாதாரத் திட்டம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அந்தந்த ஆண்டுகளில் செயற்படுத்தவேண்டிய செயற்பாடுகள் மற்றும் இலக்குகள் இத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

இதன்படி 2013ஆம் ஆண்டு தொற்றாத நோய்களைத் தடுக்கும் ஆண்டாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் தொற்றாத நோய்களைத் தடுத்துக் கொள்வது சம்பந்தமான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், சுகாதார இலக்குகள் வென்றெடுக்கப்படுவது தொடர்பாகவும், எதிர்பார்க்கப்படும் இலக்குகள் தொடர்பாகவும் தேசிய சுகாதாரத் திட்டமொன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது இதுவே முதற்தடவை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (3-22)

## கண்ணீர் அஞ்சலி

எமது மருத்துவர் க.சிவராசா அவர்களின் தாயார்

திருமதி
**கணபதிப்பிள்ளை பூரணம்**

அவர்கள் 02.01.2013 அன்று சிவபதமடைந்துள்ளமையையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை அரச சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்.

(27580)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி மேற்தரக்கிளை முகாமையாளர் பொன் பாலக்குமார் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
**பொன்னுத்துரை பாலாம்பிகை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

P.C. Power Unit
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும் சக ஊழியர்களும்.

(C/5248)(6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

### வருடாந்த பொதுக்கூட்டம்-19.01.2013

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 11ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 19.01.2013ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அலுவலக கட்டடத்தில் நடைபெறவுள்ளது என்பதைச் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருவதுடன் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிரேரணைகள் இருப்பின் 10.01.2013ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், சாதாரண அங்கத்தவர்கள் 2013ஆம் ஆண்டு வரையிலான அங்கத்துவப் பணத்தை 15.01.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உறுப்புரிமை யினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், கேட்டுக்கொள்கின் றோம்.

திரு.கே.கோபாலகிருஸ்ணன்
கௌரவ செயலாளர்-AROD

## பெண் லிகிதர்(clerk) தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு ஒரு பெண் லிகிதர் (clerk) தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி
இல:0212227893,0770259877

(27583)

## தவறிவிட்டது

இக்னேசியஸ் ரொகான் என்பவருடைய தே. அ. அட்டை (893580077V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேஸ்சுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 075 2739062

(27584)(6.7.11)


**NORTH LANKA IIT**
No. 113, Luxan Plaza, Navalar Road, Jaffna. 0215677774 | 0777470669

HNDIT தகமையுடையவர்களுக்கான
HNDA விசேட சலுகைக்
HNDM கட்டணத்திலான பிரிவு
Duration: 06 - 09 Months

Courses:
B.Sc. in Computer Science
B.Com. with Computer Application
PG Diploma in Computer Application
M. Sc. in Computer Application
MBA -- DBA

பட்டதாரியாகும் உங்கள் எண்ணத்தினை நிறைவேற்ற அரிய சந்தர்ப்பம்!

UGC Approved Certificates

05/01/2013 ஆரம்பம்!!


## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

### 23ஆவது ஆண்டு நிறைவு விழா-04.02.2013

### திறன் வெளிப்பாட்டுப் போட்டி-2013

மாற்று வலுவுடையோர்களிடமிருந்து போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு மாற்று வலுவுடையோர்க்கான திறன் வெளிப்பாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்று வலுவுடையோர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுதிகதி 15.01.2013

ஒருவர் ஆக்கூடியது 3 போட்டிகளில் மட்டும் பங்குபற்ற முடியும்

போட்டிகள்: 1-தையல் அடிப்படை, 2-தையல் உயர்நிலை, 3-என்வலப் ஒட்டுதல், 4-கேக் ஐசிங் தயாரித்தல், 5-மாலை கட்டுதல், 6-கோலம் போடுதல், 7-கணினி அடிப்படை, 8-Desktop Publishing, 9-சித்திரம் வரைதல், 10-தலை அலங்காரம், 11-கைப்பணி வேலை, 12-கதிரை பின்னுதல், 13-விளக்குமாறு அடித்தல், 14-சங்கீதம், 15-நடனம், 16-வினோத உடைப்போட்டி, 17-கட்டுரை எழுதுதல், 18-கவிதை வாசித்தல், 19-பேச்சுப்போட்டி, 20-திருக்குறள் மனனம், 21-சிறுவர் விளையாட்டு, 22-செஸ்/கரம்போட், பொதுப்போட்டிகள்: துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, குழு நாடகம்.

(C/5247)(6-7)

கே.கோபாலகிருஸ்ணன்
கௌரவ செயலாளர்-AROD


**After O/Level's..?**

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-Shirt ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
(கையிருப்பு உள்ளவரை மட்டுமே)

New batches
5th Jan 2013
7th Jan 2013
@ 9.00 am

DiTEC - Diploma in Information Technology - 4 Months
DiCA - Diploma in Computerized Accounting - 4 Months
DiBM - Diploma in Business management - 4 Months
DiSE - Diploma in Software Engineering - 6 Months
DiWE - Diploma in Web Engineering - 6 Months
DiE - Diploma in English - 4 Months

HOTLINE 077 309 9 308



ESOFT The Leader in Professional ICT Education
Trusted IT Partner

ESOFT Metro Campus - Jaffna
No. 137, K.K.S Road, Jaffna
Tel :021 2224142 , Web :www.esoft.lk

Register Today.... !!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## CHUNNAKAM

# பொது அறிவித்தல் – 2013

### 1. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2013

2013ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### 2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் 2013ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினை •2013ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2013ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றேன். 31.03.2013ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்க்ள மீது சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### 3. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 பிரகாரமான அறிவித்தல்

3.1 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

எனவே வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாமலும் முன்னறிவித்தல் வழங்கப்படாமலும் சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

### 4. துவிச்சக்கரவண்டி மிருகங்களின் உரிமம் பெறல்

2013ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 5. சுன்னாகம்/உடுவில் /ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல்

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2013ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2013ஆம் திதகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2013ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 6. சூழல் பாதுகாப்பு உரிமம்

மத்திய சுற்றாடல் அதிகார சபைத்தலைவரின் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்ததாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில்

எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2013ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்களை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

### 7. வீதி ஒழுங்கைப் பேணுதல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நகர மையப்பகுதியில் அதிகரித்த வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

### 8. விளம்பரங்களை அமைத்தல் /காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப்பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2013ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2012ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன;.

### 9 பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தி.பிரகர், தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உடுவில்.**

(சி/6244)(6.2.7)

## வேலணையில் 'புற நெகும' அபிவிருத்தி குறித்து ஆராய்வு

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட 'புற நெகும' அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் பின்னடைவு குறித்த கலந்துரையாடல் பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவர் சி.சிவராசா கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது பிரதேசம் நீண்ட காலத்தின் பின்னர் தற்போது மீள் எழுந்து செல்கிறது.

எனினும் 'புற நெகும' அபிவிருத்தியில் முன்னேற்றம் இருக்கின்ற அதே வேளை சில திட்டங்களில் பின்னடைவும் அவதானிக்கப்படுகிறது.

எனவே, எமது சபையின் மக்கள் தெரிவு திட்டத்துக்கும் அரச நிதிப் பயன்பாட்டுக்கும் இணைந்து அனைத்து அலுவலர்களுக்கும், எமது மாவட்ட பொறியியலாளரும் எம்முடன் இணைந்து பணியாற்ற உதவ வேண்டும்.- என்று கேட்டுக்கொண்டார்.

இதில் சிறப்பு பிரதிநிதியாக கலந்து கொண்ட யாழ். உள்ளூராட்சி திணைக்கள 'புறநெகும' மாவட்ட பொறியியலாளர் எந்திரி-எஸ். ஸ்றெயிலதரன் கூறுகையில்;

புறநெகும அபிவிருத்தி திட்டத்தின் வேலைகள் உரிய காலத்தில் முடிவடைய வேண்டும்.

ஏனைய சபைகளில் துரிதமாக இடம்பெறுகின்றது. இங்கும் துரிதமாக இடம்பெற அனைவரது ஒத்துழைப்பும் தேவை.

அத்துடன் உயர் தரத்தை பேணி மக்களுக்கான சேவையைத் தரமாக வழங்க வேண்டும்.

இதில் பொறியியலாளர் என்ற வகையில் செயற்பட்டு அபிவிருத்திக்கு உதவுவேன்.-என்றார்.

வங்களாவடிச் சந்தியில் அமையவுள்ள இருமாடிக்கான கட்டட புனரமைப்புக்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பித்து குறித்த காலத்தில் திட்டம் முடிவடைய நடவடிக்கை எடுப்பேன் எனவும் எந்திரி மேலும் தெரிவித்தார். (ம-50)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
021 567 1111

**Softview**
கணினி வகுப்புக்கள் மற்றும் ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
05.01.2013
102, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.
0779053545
(திருமறைக் கலாமன்றம் அருகில்)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வீரகத்தி ராஜா (ராசா)

அன்னை மடியில் 05-10-1940
ஆண்டவன் அடியில் 30-12-2007
திதி - தை அபரபக்க சப்தமி

அன்பாய் அறிவூட்டிய சித்தப்பா
பண்புடனே எம்மை வளர்த்த சித்தப்பா
பதறி இங்கு நிற்கின்றோம் நாம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறமுடியாது சித்தப்பா
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களில்
நின்று என்றும் எம்மோடு நிழலாகும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்
*பிரிவாலும் துயரத்தாலும் [illegible]*

பன்னாலை, தெல்லிப்பழை.

சரஸ்வதி (மனைவி), முருகையா (அண்ணா),
பெறாமக்கள், ஜெயராணி (மகள்)
(பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி.)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி
சோமசுந்தரம் பவளராணி

தோற்றம் 06.11.1943
மறைவு 04.12.2012



கடந்த 04.12.2012 செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.01.2013 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (04.01.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.
அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரது மரணச்செய்தி அறிந்து நேரில் ஆறுதல் தந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், வேறு பல வழிகளில் உதவி புரிந்த அன்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

16/4,விதானையார் வீதி, சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(2/452)(6.7.11)

## மரண அறிவித்தல்

### சிவஞானம் மகேந்திரநாத்
*(ரதி லோச் -யாழ்ப்பாணம்)*



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் மகேந்திரநாத் நேற்று (03.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் -மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களாதேவியின் அன்புக் கணவரும் நவகீதா, சசிதரா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேந்திரனின் அன்பு மாமனாரும் றித்திக்கா, நிதர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் பூபாலேந்திரா (மருந்தாளர்- வவுனியா) காலஞ்சென்றவர்களான தனபாலேந்திரா, குணபாலேந்திரா மற்றும் சுப்பிரமணியம்(ஜேர்மனி),பாலேந்திரன் (ஜேர்மனி),பாலநாத் (லண்டன்),காலஞ்சென்ற ஜெயபாலேந்திரா, காலஞ்சென்ற பாலசகுந்தலா, பாலசறோஜினி(கொக்குவில்), இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இலக்குமிதேவி (கனடா), கதிர்காமநாதன் (யாழ்ப்பாணம்), பூரணாம்பிகை (ஆஸ்திரேலியா), வைத்தியநாதன் (கனடா), காலஞ்சென்ற நாகேஸ்வரி, கிருபநாதன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூரணவாசா
அராலிவடக்கு, வட்டுக்கோட்டை. (2757/6)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.
021 492 1820

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் கேட்டார் லஞ்சம்; வர்த்தகரோ தீர்த்தார் வஞ்சம்

இலங்கைசுங்கத்தடுப்புப்பிரிவின்பணிப்பாளர்கே.ரஞ்சன் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று அவரது அலுவலகத்தில் வைத்தே கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவரிடமிருந்து லஞ்சத்தைப் பெற மேற்படி பணிப்பாளர் முயல்வதாகக் கிடைக்கப்ப பெற்ற முறைப்பாட்டின் பிரகாரமே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

வாகன உதிரிப்பாகங்களை ஏற்றிவந்த கொள்கலன் ஒன்றை விடுவிக்கும் சான்றிதழை வழங்க 50 இலட்சம் ரூபா லஞ்சமாகக் கேட்கப்பட்டதாகவும், பின்னர் அது 20 இலட்சமாகக் குறைக்கப்பட்டதாகவும் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 20 இலட்ச ரூபாவில் முதல் 10 இலட்ச ரூபாவைப் பெறும்போதே மேற்படி பணிப்பாளரை ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.


## மணிவிழா வாழ்த்து



**திரு. ந. தங்கவேல்**

பகுதித்தலைவர்,
யாழ்.இந்துக் கல்லூரி.

பார்வைக்கு எளியவர்
பழகுவதற்கு இனியவர்
நல்லவர், வல்லவர்
நாத்திறம் மிக்கவர்
அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
திகழும் பண்பாளனே
தங்கள் ஓய்வுக் காலம் சிறக்க
உளமார வாழ்த்துகின்றோம்.

- ஆசிரிய நண்பர்கள்.

(27006)(2.6)


## ஈழத்தமிழர்கள் 5 பேர் திறந்தவெளி முகாமுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.4

தொடர் உண்ணாவிரத போராட்டத்தின் எதிரொலியாக, செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து 5 ஈழத்தமிழ் அகதிகள் திறந்த வெளி முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

பல்வேறு வழக்குகள் தொடர்பாக ஈழத்தமிழ் அகதிகள் உட்பட 41 பேர், கியூ பிரிவு பொலிஸாரால் செங்கல் பட்டு சிறப்பு முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் தங்களை விடுவித்து திறந்த வெளி முகா முக்கு மாற்றம் செய்யக்கோரி 22 பேர் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர். அதில் 12 பேர் மயக்கமடைந்து சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளை அரசியல் கட்சி பிரமுகர்கள் சந்தித்து நலம் விசாரித்தனர். இந்நிலையில் ஈழத்தமிழ் அகதிகள் 11 ஆம் நாளான நேற்று முன்தினம் புதன்கிழமை உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

இதற்கிடையில் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த ரைசுதீன், அருள்குல சிங்கம், செல்வராசா, செல்வம், ஜெயபாலன் ஆகிய 5 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்தவெளி முகாமுக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் ரைசுதீன் உண்ணாவிரதம் மேற்கொண்டு சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் நேற்று வியாழக்கிழமை திறந்த வெளி முகாமுக்கு சென்றார். ஏனைய நால்வரும் உண்ணா விரதத்தில் ஈடுபடாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் (French) பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள். தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(கச்சேரி வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)



## வீட்டுப் பணிப்பெண் தேவை

வவுனியாவில் ஆசிரியை ஒருவருடைய வீட்டில் இரு சிறு பிள்ளைகளை பராமரிப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் ஒருவர்தேவை.
சம்பளம் 10,000- 12,000/=
சாப்பாடு ,தங்குமிடம் தரப்படும்.
தொடர்பு :0777 722754

(c/2764)(6.7.11)


## முதலாம் ஆண்டு நிறைவிலே நினைவு கூருகின்றோம்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 | | 04 |
| 08 | | 01 |
| 1937 | | 2012 |



**திருமதி சலாக்கினி அரியரட்ணம்**

ஓராண்டு ஓடி மறைந்ததம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இன்னும் எம் விழிகளின் ஈரம் காயவில்லை
எம் மனதின் காயமும் ஆறவில்லை
கனவிலும் உம் முகம், நினைவிலும் உம் உருவம்
காண்கின்றோம் தினமும்
ஏங்குகின்றோம் நீங்களின்றி
எல்லாம் வல்ல ஆண்டவனின் பாதங்களில் உம் ஆன்மா
அமைதியுற வேண்டுகின்றோம்.

40/1 சந்தணமாதா வீதி, பிள்ளைகள்,
பாண்டியன் தாழ்வு, மருமக்கள்,
யாழ்ப்பாணம். (27910)(3) பேரப்பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் பொருளாளர் வைத்தியகலாநிதி கணபதிப்பிள்ளை சிவராசா அவர்களின் தாயார்

**திருமதி கணபதிப்பிள்ளை பூரணம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைவேண்டிக் கொள்கிறோம்.

மக்கள் முன்னேற்றக் கழகமும்
சனசமூகநிலையமும்
கோண்டாவில் மேற்கு.

(c5251)(6)


## வேலைக்கு ஆள்கள் தேவை

லைடன் புடவை நிலையம் 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள புடவைக் கடைக்கு இரு பெண்பிள்ளைகளும் (பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது) நேரில் சமூகமளிக்கவும்.

## வீடு, காணி விற்பனைக்கு

இல.807, K.K.S Road, யாழ்ப்பாணத்தில் மூன்று பரப்புக்காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்க்கலாம்
தொடர்பு :0773893953, 0775095202

(c/2765)(6.7.11)



**யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்**
**கட்டடம் வாடகைக்கு தேவை**

யாழ்மாவட்ட சுகாதார திணைக்களத்தால் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப சுகாதார மற்றும் உடற்பயிற்சி நிலையம் ஒன்றினை மாநகர சபை எல்லைக்குள் நடாத்துவதற்கு கட்டடம் ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது. ஆகக் குறைந்தது ஐந்து அறைகள் கொண்டிருப்பதோடு ஆகக் குறைந்தது 900 சதுர அடி விஸ்தீரணம் உள்ளதாக இருத்தல் வேண்டும். குறைந்தது இரண்டு வாகனங்களுக்கான தரிப்பிட வசதி இருத்தல் வேண்டும். நாட்டமுள்ள விலைமனுதாரர் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளவும் தொடர்பு இலக்கம் -

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் 077-1125330
பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

திருமதி **தவலஷ்மி செல்வரத்தினம்**



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவலஷ்மி செல்வரத்தினம் 30.12.2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுகாதார இலாகா கணக்காளர் ஆறுமுகம் செல்வரத்தினம் அவர்களது அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான உரும்பிராய் தம்பிமுத்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், சந்திரமோகன், சந்திரவதனி (லண்டன்), சந்திரகலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயும், இராசமகேஸ்வரன், பவானி (லண்டன்), காலஞ்சென்ற வேந்தனார் மற்றும் இளங்கோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மதிப்புமிக்க மாமியாரும், நிரேஷ், உமா, மயுரேஷ், தீக்கா, ஆரணன், ஆரண்யா, ஆரபி, அரன் ஆகியோரின் பாசமிக்க பாட்டியும், அர்ஜுனின் ஆசைக்கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஹென்டன் மயான மண்டபத்தில் சைவ முறைப்படி நடத்தப்பட்டு ஹென்டன் தகன்பீடத்தில் தகனம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லண்டன். (சி/5250)(5-6-7) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



கடந்த 05.12.2012 புதன்கிழமை அன்று கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தில் இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் இராசையா சிவசுப்பிரமணியம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04/01/2013) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கொல்லங்கலட்டி மாவிட்டபுரம் தெற்கு தெல்லிப்பழை. நன்றி (27914)(3) இங்ஙனம். குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரித்து ஒட்டக்கூடிய சூரியக் கலங்கள்

## ஆய்வாளர்கள் சாதனை

மின்சக்தி தேவைப்படும் சாதனங்களால் ஒட்டிக்கொள்வதன்மூலம் அவற்றிற்கு அவசியமான மின்னை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய சூரியக் கலங்களை ஸ்டன்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன் தேவை ஏற்படாதவிடத்து அவற்றை அகற்றிவிட முடியும். அதாவது Sticker போன்று தொழிற்படும் ஆற்றல் பொருந்தியதாகக் காணப்படுகின்றது.

மிகவும் மெல்லியதாக வடிவமைக்கப்பட்டுள்ள அவை வளையும் தன்மையைக் கொண்டுள்ளதுடன் உடைவை தவிர்ப்பதற்காக கடினத்தன்மை வாய்ந்த கண்ணாடிப் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விரைவில் அறிமுகமாகின்றது

## Samsung GALAXY S IV

கைபேசி உலகில் புரட்சியை ஏற்படுத்திவரும் Samsung நிறுவனமானது தனது புதிய தயாரிப்பான Galaxy S4 கைபேசிகளை அடுத்தவருடம் ஏப்ரல் மாதமளவில் அறிமுகப்படுத்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை 5 அங்குலமுடையதும் 1080 Pixel உடையதுமான AMOLED தொடுதிரையினை கொண்டமைந்தவையாகக் காணப்படுவதுடன் quad&core Exynos 5410 தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட Chip மற்றும் 13 மெகாபிக்சல்கள் உடைய Rear Auto&Focus கமரா ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன. அவற்றுடன் தொடுதிரையை இயக்குவதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட S Pen ஆகியனவும் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




# அப்பிளின் புதிய ஐ கடிகாரம்

உலகம் முழுவதும் சிறியவர்கள் முதல் இளைஞர்கள், பெரியவர்கள் வரை அனைவரும் அப்பிளின் ரசிகர்களாக மாறிவருகின்றனர்.

அப்பிள் அறிமுகப்படுத்திய ஐ போன், ஐ பேட் அனைத்தும் வாடிக்கையாளர்களிடத்தில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் ஐ கைக்கடிகாரமொன்றை அப்பிள் இரகசியமாகத் தயாரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக்கடிகாரம் 1.5 அங்குலத்தில் தொடு திரை வசதியுடன் புளூடூத் மூலம் ஐ போன் போன்ற சாதனங்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் தயாரிக்கப்படுகிறது. கடிகாரத்தின் திரையானது இண்டியம் டின் ஒக்சைட் (Indium tin oxid) பூச்சைக் கொண்ட மேற்பரப்புடன் கூடிய O.L.E.T வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


மேலும் I.O.S மூலம் அந்தக்கடிகாரம் இயங்குமெனவும் இதனூடாக அப்ளிகேசன்களைத் தரவிறக்கம் செய்துகொள்ளமுடியும் என நம்பப்படுகின்றது.

இதேவேளை இதேபோன்ற தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள பெபெல் என்ற கடிகாரம் கூடிய விரைவில் விற்பனைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# ஓவியத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கு உதவும் பயனுள்ள இணையம்

இணையத்தளம் மூலம் ஓவியங்கள் மற்றும் ஏனைய வரைபடங்களை உருவாக்கிக்கொள்வதற்கு பல்வேறு இணையத்தளங்கள் காணப்படுகின்றன. எனினும் அவற்றை ஒரே நேரத்தில் ஒரு பயனரால் மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் Web Whiteboard எனும் தளமானது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பயனர்கள் இணைந்து ஆக்கத்திறன்கூடிய ஓவியங்களை உருவாக்கிக் கொள்ளும் வசதியைத் தருகின்றது. இதற்காக இத்தளத்தில் Invite எனும் அம்சம் தரப்பட்டுள்ளது.

அத்துடன் Drawing Pencil, Brush Size, Text, Eraser, Color Selector போன்றவற்றுடன் சேமிப்பதற்கான வசதியும் காணப்படுகின்றன. Tablets மற்றும் Smartphone போன்றவற்றிலும் தொழிற்படக்கூடியதாகக் காணப்படும் இந்தத்தளத்தில் உருவாக்கப்பட்டபடங்களை சமூக இணையத்தளங்களில் பகிர்ந்துகொள்ளவும் முடியும். இணையத்தள முகவரி http://awwapp.com/draw.html



# ZTE அறிமுகப்படுத்தும் மிகவும் மெல்லிய தோற்றமுடைய கைபேசிகள்




கைபேசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுள் ஒன்றான சீனாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ZTE நிறுவனமானது மிகவும் மெல்லிய தோற்றம் கொண்ட Grand S எனும் கைபேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

அதாவது அவற்றின் தடிப்பானது 6.9 மில்லிமீற்றர் உடையதாகக் காணப்படுவதுடன் 13 மெகாபிக்சல்கள் உடையதும் அதி உயர் வினைத்திறனுடையதுமான கமராவைக் கொண்டுள்ளது.

மேலும் கூகுளின் Android 4.1 இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ள அவற்றில் 1.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடியதும் Qualcomm Snapdragon S4 Pro APQ8064 தொழில்நுட்பத்தினைக் கொண்டதுமான Processor இணைக்கப்பட்டுள்ளதுடன் பிரதான நினைவகமாக 2GB RAM காணப்படுகின்றது. இவற்றின் பெறுமதியானது 449 அமெரிக்க டொலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புதிய வகை Solar Sunflower சார்ஜர்கள் அறிமுகம்

XD Modo நிறுவனமானது சாடியில் அமைந்த Sunflower தாவரத்தின் வடிவத்தைக் கொண்டதும் சூரியப் படல தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதுமான சார்ஜர்களை உருவாக்கியுள்ளது.

2500 mAh மின்கொள்ளளவுடைய லிதியம் மின்கலங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும் இந்த Solar Sunflower சார்ஜர்கள் 8 சென்ரி மீற்றர் உடைய இரண்டு இலை வடிவங்களையும் 8.5 சென்ரி மீற்றர் விட்டத்தைக் கொண்ட பூ வடிவிலான தலைப்பகுதியையும் கொண்டுள்ளன.

அதன் தலைப்பகுதியிலேயே சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றும் திறன்கொண்ட சூரியப்படலம் காணப்படுகின்றது. மேலும் இந்தப்பகுதியானது அதிகளவு சூரிய ஒளியை உள்வாங்கக் கூடிய நிலையில் 35 டிகிரி சாய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அவற்றிலிருந்து USB இணைப்பான்கள் மூலம் கைப்பேசி போன்ற இலத்திரனியல் சாதனங்களை சார்ஜ் செய்வதற்கான மின்சக்தியை பெற்றுக்கொள்ள முடியும். இவற்றின் பெறுமதியானது 79 அமெரிக்க டொலர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றமே...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமைச்சில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று அமைச்சில் இடம்பெற்றது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை தொடர்பாக விசாரணைகளை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை நிராகரித்து ரத்து செய்யும்படி கோரிப் பிரதம நீதியரசரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பாகவே அமைச்சரிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பிடிகொடுக்காமல் மழுப்பலான பதில்களையே அளித்தார்.

'இலங்கையின் அரசியல் அமைப்புக்கும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளுக்கும் அமையவே பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு நடத்திய விசாரணையின்படி பிரதம நீதியரசர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்' என அடிக்கடி நீங்கள் கூறினீர்கள்.

ஆனால் இந்தவிடயம் தொடர்பாக பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசமைப்புச் சாசனத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவுக்கு எந்தவிதமான சட்ட வலுவும் கிடையாது. இந்தக்குழுவுக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரம் கிடையாது. இந்தக் குழுவின் அறிக்கையும் சட்டவலுவற்றது என்று தீர்ப்பு வழங்கி உள்ளது. இப்போது உங்களுடைய நிலைப்பாடு என்ன? என்று அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர்-

மேன்முறையீட்டு நீதின்றின் தீர்ப்பு நகல் இப்பொழுதுதான் என் கைக்குக் கிட்டியது. அதனை நான் படித்துப் பார்க்கவும் இல்லை.

என்றாலும் கூட இந்தவிடயம் தொடர்பாகக் கருத்துக்கூறும் தத்துவமும், தகுதியும் எனக்கு இல்லை. சபாநாயகர்தான் கூறவேண்டும். எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது சபாநாயகர் அதனைச் சபையில் சமர்ப்பிப்பார் என்றார் .

அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில் வருமாறு:-

-அரசமைப்பில் அவசியமான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்படுமா?

★நினைத்த உடனே அரசமைப்பை ஒரே இரவில் திருத்திவிட முடியாது. அது பல மட்டங்களில் பரிசீலனை செய்யப்பட்டு சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளும் பெறப்பட வேண்டும்.

அப்படியானால் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படும் என்கிறீர்களா?

★அதனை சபாநாயகர்தான் தீர்மானிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் நீதிமன்றம் செல்ல முடியாது. அப்படிச் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதிச் சபாநாயகர் கூறி உள்ளார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இன்று நீதிமன்றத்தில் முன்நிலையில் இருந்தனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

★நாடாளுமன்றம்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே அர்த்தமற்றது என நீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால் உங்களுடைய அமைச்சர் கோல்டன் பெர்னாண்டோ பிரதம நீதியரசர் தானாகப் பதவி விலகவேண்டும். இல்லாவிட்டால் நாம் அவரை வீட்டுக்கு அனுப்புவோம் என்று கூறி உள்ளாரே?

★அப்படியா? இது எனக்குத் தெரியாது.

- ஏன் நீங்கள் செய்தி பார்ப்பதில்லையா?

★எல்லா அலைவரிசைகளிலும் ஒரேநேரத்தில் செய்தி ஒளிபரப்பப்படுவதால் எல்லாவற்றையும் பார்க்க முடிவதில்லை.

மற்றும் ஓர் அமைச்சர் பிரதம நீதியரசர் அவரது பதவியை அவமானப்படுத்தும் வகையில் செயல்படுகின்றார் என்று கூறுகின்றார்?

★ உண்மைதான் நீதிமன்றம் எல்லோராலும் மதிக்கப்படுவது கௌரவம் உள்ளது. ஆனால் இவர் தேங்காய் உடைக்கின்றார். பிரித் ஓதுகின்றார் கூட்டம் போடுகின்றார். அந்தப் பதவியையே அசிங்கப்படுத்துகின்றார். ஒரு அரசியல் வாதியைப்போன்று செயல்படுகின்றார்.

பிரதம நீதியரசர் அரசியலில் ஈடுபட முடியாதா?

★ தாராளமாக ஈடுபடலாம். தனது கோட்டைக் கழற்றியபின். கோட்டைப் போட்டுக்கொண்டு அரசியல் நடத்த முடியாது.

- ஒட்டுமொத்தமாக சட்டத்தரணிகளும், நாட்டு மக்களும் பிரதம நீதியரசருக்கு ஆதரவாகத்தானே இருக்கின்றனர்.

★ இது நமது கொழும்புக்கு வெளியே இருப்பவர்களுக்கு எதுவுமே தெரியாது.

(த-2)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24
01
1949

இறப்பு
03
01
2012

அமரர் இராசேஸ்வரி இருதயராசா

ஓராண்டு உருண்டோடினாலும் உன் நினைவு
எம்மை ஒவ்வொருநாளும் வாட்டுதம்மா

பள்ளம்பாதி தும்பளைவீதி,
பருத்துறை

உம்பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(C5259)(6)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லாச்சி கிருஷ்ணபிள்ளை



வேம்பொடுகேணி, பளையைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, வேம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி கிருஷ்ண பிள்ளை நேற்று (03.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ண பிள்ளையின் அன்பு மனைவியும், திரு. திருமதி பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும், திரு.திருமதி பொன்னுத்துரை தம்பதியரின் மருமகளும், சரஸ்வதி (ஆசிரியை, யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), சொர்க்கலிங்கம் (இலிதர், தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கம், கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு தாயும், மனோகரியின் (முகா. உதவியாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை) மாமியும், சுலக்சிகாவின் (மாணவி, யாழ்/ வீரசிங்கம் மத்திய கல்லூரி) அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

தகவல்:
மகள், மகன்.

(18006)(3)

### பண்டாரி வேலாயுதம்

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரி வேலாயுதம் நேற்று (03.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், அற்புததேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, அப்பாச்சி, லச்சுமியார், கிருஸ்ணபிள்ளை மற்றும் அருணாசலம், காலஞ்சென்றவர்களான தெய்வானை, உமாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும், ஸ்ரீ றஞ்சன், காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீமோகனதாஸ், மகாலட்சுமி, அன்னலட்சுமி, ஸ்ரீமுரளீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி, ஜெயசுதா, ஸ்ரீராம், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும், ஐங்கரன், கோபிகை, திவ்வியா, வேலவன், வசிகன், வார்ஜினி, மகிழினி, லக்சாயினி, மோகனராம், ஜேயராம், நாராஜினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, தங்கரத்தினம் மற்றும் குணராசா, காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0771015349, 0213735324

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

NEC 2015
தமிழ்/ஆங்கில
மொழிமூலம பொது
இரசாயனம்
N.JANAA
NEC
(27907)(6)

வேலை ஆள் தேவை
எமது ஸ்தாபனத்திற்கு
ஆண் விற்பனையாளர்
(SALES MAN)
உடன்தேவை
T.P-0778208085
(27907)(6)

விற்பனைக்கு
NPPT-9XXXதொடரிலக்க வெள்ளை நிற நியூ மொடல் மகேந்திரா A/C, POWER STREEING லீசிங்குடன் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு
0716182182,0777730303
(C/5254)(6)

தவறிவிட்டது
அ.பிரசாத் என்னும் பெயருடைய
லைசென்ஸ் அ.பகீரதனின் ரக்ஸ்,
இன்சூரன்ஸ் ஆகிய ஆவணங்கள்
அடங்கிய பை புத்தூர் சந்திக்கும்
யாழ்ப்பாணத்திற்குமிடையில்
[illegible]
தந்துதவவும்
T.P 0770858366,0778445217
(27912)(6)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் சண்முகராசா



யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சண்முகராசா நேற்று (03.01.2013) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நாகரத்தினம் தம்பதி யரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, யோகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின்(தேவி) பாசமிகு கணவரும், டயசிநி, றகுலேஸ்வரி, சாந்திமதி, சயந்தன், சந்திரப்பிரியா, சியாமளா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல564, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லிக்கல்லூரி முன்பாக)

தகவல்:
குடும்பத்தினர்.
(27905) 0214925415

### தோமஸ் போல் இராசநாயகம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பொனை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தோமஸ் போல் இராசநாயகம் கடந்த (26.12.2012) புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாரந்தனையைச் சேர்ந்த தோமஸ்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கரம்பொனைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், அமிர்தநாயகம் (லண்டன்), தர்மா (கனடா), சோமா (லண்டன்), அருட்பணி சகாயநாயகம் (பங்குத்தந்தை, தூய மரியன்னை பேராலயம் - யாழ்ப்பாணம்), மார்த்தா (அமெரிக்கா), காலஞ்சென்ற றூபா மற்றும் தனம் (கனடா), லக்ஸ்கன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரெலா போல்பிள்ளை (லண்டன்), காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகம், அரியநாயகம் அருட்பணி மதுரநாயகம் (முன்னாள் அதிபர், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி), யோசப்பின் போல், அலோய்வேதநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்மா மற்றும் அலெக்சாண்டர், செல்வா, மகேன், சிந்தியா, றஜனி ஆகியோரின் அன்பு மாமனும், ரிஷா, ஜயந்தன், சூட்டி, போல், டேமியன், யசன், நிஷான், நற்ரஷா, அன்றூ, ஜோயல், பிறன்டன், அனிற்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல்திருப்பலி நாளை (05.01.2013) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கனடாவில் உள்ள மாசில்லாமல் உற்பவித்த அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் திருச்சிலுவை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்பணி. R.H. சகாயநாயகம்
பங்குத்தந்தை,
தூய மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் நடத்திய 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சம்பியனான கண்ணகை அம்மன் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிக் கிண்ணத்துடன். (ங-9)

# சாந்தன்,யூட்கசன் ஞாபகார்த்த உதைபந்தில் யுனிபைட்டை வென்றது கோல்டன் பிறதர்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.4
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன் , யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் குறித்த சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கோல்டன்பிறதர்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் கோல்டன்பிறதர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

**முதல் பாதி ஆட்டம் ஆரம்பமனவுடனேயே இரு அணியினரும் எப்படியாவது தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு விளையாடினர். இவ்வாறு இரு அணியினரும் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தி ஆடியதால் முதல்பாதி ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.**

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமானவுடனேயே இரு அணியினரும் எப்படியாவது தமது அணிக்கான கோல்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு விளையாடினர். இவ்வாறு இரு அணியினரும் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தி ஆடியதால் முதல்பாதி ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. இரு அணியினரும் எதிர் அணியினுடைய கோல் பரப்பினை ஆக்கிரமித்த போதும் எந்த அணியினாலும் கோலடிக்க முடியவில்லை.

இதனால் முதல்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலாவது கோல் அடித்து வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற ஆக்ரோஷம் கோல்டன் பிறதர்ஸ், யுனிபைட் அணி வீரர்களிடம் தென்பட்டது. இதனால் தமது ஆட்ட வேகத்தை அதிகரித்துக்கொண்ட வீரர்கள் முன்னேறித் தாக்கும் உத்தியில் இறங்கினர். எனினும் எதிர் அணியின் பின்கள வீரர்களின் தடுப்பாட்டத்தினால் இரு அணிகளாலும் கோல்கள் பெறமுடியவில்லை. ஆயினும் எதிரணி அலட்சியமாக இருந்த தருணத்தில் கோல்டன்பிறதர்ஸ் அணியினர் தமது அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தி, யுனிபைட் வீரர்களின் வியூகங்களை உடைத்தெறிந்து கொண்டு தமது அணிக்கான முதலாவது கோலை அடித்தனர். இதற்கு பதிலடி கொடுக்க யுனிபைட் அணி எடுத்த முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை.

ஆட்டநேர முடிவில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழக அணி 1.0 என்ற கோல் கணக்கில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டது. (ங-23)

# இன்றைய ஆட்டம்

வவுனியா,ஜன.4
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

அல்-ஸஹிரா விளையாட்டுக் கழகம் எதிர் மருதநிலா விளையாட்டுக்கழகம் (ங-23)


# உதைபந்தில் சாதித்தோருக்கு ஞாயிறன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம் , ஜன 4
, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக் கூட்டமும் உதைபந்தாட்டத் துறைக்கு சேவை புரிந்தோரை கௌரவிக்கும் நிகழ்வும் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம் வேதாபரணம் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் எம்.எஸ் கமலநாதன் , என். சுந்தரலிங்கம் , எ. மெய்யழகன் , ஆர். இரசநாதன் , எஸ். செல்வராஜன் , எஸ். அருமைத்துரை , எம். வரதராஜன் , எம். வடிவேஸ்வரன் , கே. பாக்கியராஜா , எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் உதைபந்தாட்டத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ங-23)

# வடமாகாணப் பூப்பந்து சென்.ஜோன்ஸில் நாளை



யாழ்ப்பாணம், ஜன.4
வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மாகாண ரீதியிலான ஆண் , பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டுத்திடலில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இறுதியாட்டமும் அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இடம் பெற்ற பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண் பெண் இருபாலாருக்குமான போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்றவர்கள் மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளனர் என வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார். (ங-23)

# உதைபந்தில் புதிய விதிமுறைகள் இன்று கரவெட்டியில் செயலமர்வு

**எஸ்.அன்ரனிப்பிள்ளை கலந்துகொண்டு, உதைபந்தாட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் தொடர்பாக விளக்கவுள்ளார்.**

யாழ்ப்பாணம் , ஜன .4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் செயலமர்வொன்று கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி.எம் வேதாபரணம் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

உதைபந்தாட்ட புதிய விதிமுறைகள் தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி செயலமர்வில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் தலைவர் , செயலாளர் , அணித்தலைவர்கள் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் ஆகியோர் இந்தச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

இதில் வளவாளராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை கலந்துகொண்டு, உதைபந்தாட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் தொடர்பாக விளக்கவுள்ளார்.என்று பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் வரதராஜன் தெரிவித்துள்ளார். (ங-23)




[illegible] கராத்தே அக்கடமி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா கழகத்தின் வருடாந்த காரத்தே பயிற்சிப்பட்டறை [illegible] இடம்பெற்றது. இந்தக் காரத்தே பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய யாழ். மாவட்ட வீரர்கள், காரத்தே பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பிரதம கராத்தே ஆசிரியர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தாடியது பாகிஸ்தான்; பணிந்தது இந்தியா

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஆட்டத்தில் பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட போதும், துடுப்பாட்டத்தில் கோட்டைவிட்டதால் தொடரை இழந்தது இந்திய அணி.

3 ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் ஏற்கனவே முதலாவது ஆட்டத்தை இழந்திருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் வென்றாகவேண்டிய கட்டாயத்தில் இந்திய அணி தள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த மைதானத்தில் இதுவரை நடைபெற்ற இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளிலும் பாகிஸ்தானே வெற்றிபெற்றிருந்தது.




நேற்றைய போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பல் ஈடுபடத் தீர்மானித்தது. ஆயினும் இந்தியப் பந்துவீச்சாளர்களை பாகிஸ்தானின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் ஒருகை பார்த்தனர். ஓட்டங்களை அவர்கள் மெதுவாகப் பெற்றபோதும் இலக்குகளை இழக்காமல் கவனமாக ஆடினர். முதல் இலக்குக்காக இணைந்து கொண்ட ஹபீஸும், ஜம்ஷெட்டும் 141 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர். ஆயினும் அரைச்சதம் கடந்திருந்த ஹபீஸ்,ஜடேஜாவின் சுழலில் வீழ்ந்தார். மிகப்பெரிய இலக்கை பாகிஸ்தான் அணி எட்டும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், ஹபீஸின் ஆட்டமிழப்புக்கு பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் வீரர்கள் பொறுப்புடன் ஆடத் தவறினர். அஸார் அலி(2), யுனிஸ்கான்(10), மிஸ்பா-உல்ஹக்(2), சொயிப் மலிக்(24), கம்ரன் அக்மல்(0), உமர்குல்(1),சயீட் அஜ்மல்(5), இர்பான்(0) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் மைதானத்தை விட்டகன்றனர்.

ஆயினும் ஒருமுனையில் தனித்துப் போராடிய ஜம்ஷெட்(106) சதம் அடித்து அசத்தினார் இந்ததொடரில் அவர் அடித்த இரண்டாவது சதம் இதுவாகும். இறுதியில் 48.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த பாகிஸ்தான் அணி, 250 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணிசார்பில் இஷாந்த் சர்மா, ஜடேஜா ஆகியோர் தலா 3 இலக்குகளையும், புவனேஸ்வர்குமார், அஸ்வின் , ரெய்னா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

251 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு முன்னேறத்தொடங்கியது இந்திய அணி. இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான கம்பீர், சேவாக்கும் வழமையான அதிரடியைக் கைவிட்டு மிகநிதானமாக ஆடத் தொடங்கினர். எனினும் மீண்டும் இந்திய அணிக்கு வில்லனானார் ஜூனைத் கான். அவரின் பந்தில் கம்பீர் (11) 'போல்ட்' டாகினார். பின்னர் வந்த ஹோக்லியும்(6) நிலைக்கவில்லை. நம்பிக்கை தரும் வகையில் ஆடிக்கொண்டிருந்த சேவாக் 31 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் உமர்குல்லின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். யுவராஜ் சிங்கும்(9) ஏமாற்றினார். அதன்பன்னர் இணைந்து கொண்ட அணித்தலைவர் டோனியும், ரெய்னாவும் இந்திய அணியைச் சரிவில் இருந்து மீட்க முயற்சித்தனர்.



ஆயினும் தேவையில்லாமல் அடித்தாட முற்பட்டு 'ஸ்ரெம்' செய்யப்பட்டு ரெய்னா (18) வெளியேறினார்.அதன் பின் வந்தவர்களும் நிலைத்து நின்றாடத்தவறினர். அஸ்வின் (3), ஜடேஜா(13), புவனேஸ்வர்குமார்(0), டிண்டா(0), இஷாந்த் சர்மா(2) ஆகியோரும் விரைவாக ஆட்டமிழக்க இந்தியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.பாகிஸ்தான் அணி 85 ஓட்டங்களால் இந்திய அணியை இரண்டாவது ஆட்டத்திலும் பந்தாடி, தொடரையும் 2-0 என்ற ரீதியில் வென்றது.இந்திய அணி சார்பில் டோனி மட்டும் அரைச்சதம் கடந்து 56 ஓட்டங்களுடன் களத்தில் கடைசிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பாகிஸ்தான் சார்பில் சயீட் அஜ்மல், ஜுனைத் கான் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், உமர் குல் 2 இலக்குகளையும், மலிக், ஹபீஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக சதமடித்த ஜம்ஷெட் தெரிவானார்.

(ந)

# இலங்கை கௌரவம்

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றைய முதல் நாளில் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 294 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.



சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெற்றுவரும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும் மத்திய வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடாததால் 294 ஓட்டங்களுக்கே சகல இலக்குகளையும் இழந்தது. முதலாவது இலக்கை 26 ஓட்டங்களுக்கே இழந்த போதிலும், டில்ஷான், மஹேல இருவரும் சிறப்பாக ஆடினர். அதன் பின்னர் சிறிய சிறிய இணைப்பாட்டங்கள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் இலங்கை அணி மிகப்பெரிய இணைப்பாட்டத்தைப் பெறாததால் போதுமான ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.



துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக லஹிரு திரிமன்ன 91 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்தன 72 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 34 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜக்ஸன் பேர்ட் 4 இலக்குகளையும், மிற்சல் ஸ்ரார்க் 3 இலக்குகளையும், பீற்றர் சிடில் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (5)

# ஆபிரிக்கா அசத்தல்

தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நியூசிலாந்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

நேற்றுமுன்தினம் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி வெறுமனே 19.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதலாவது இலக்கை 7 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது.



துடுப்பாட்டத்தில் கேன் வில்லியம்ஸன் பெற்றுக்கொண்ட 13 ஓட்டங்கள் மாத்திரமே இரட்டைப்படை ஓட்டங்களாக அமைந்தன.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் வேர்ணன் பிலாந்தர் 6 பந்துப் பரிமாற்றங்களில் 7 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும் மோர்னி மோர்க்கல் 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் டேல் ஸ்ரெய்ன் 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தில் தனது முதலாவது இலக்கைக் கைப்பற்றியபோது ஸ்ரெய்ன் தனது 300ஆவது டெஸ்ட் இலக்கைக் கைப்பற்றியிருந்தார்.

அதன் பின்னர் பதிலளித்தாடிய தென்னாபிரிக்க அணி முதல்நாள் ஆட்ட முடிவில் 3 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்கை 2 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே இழந்த அவ்வணி, அதன் பின்னர் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும் ஹசிம் அம்லா 66 ஓட்டங்களையும் ஜக்ஸ் கலிஸ் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி வெற்றிபெற போராடும் மஹேல

ஆஸ்திரேலிய அணிக்கெதிராக நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற முயற்சிக்கும் எனவும், அதற்கான நம்பிக்கை காணப்படுவதாகவும் இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஓர் இன்னிங்ஸ் 201 ஓட்டங்களால் படுதோல்வியடைந்திருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வியை மறக்கும் முகமாக நடவடிக்கைளில் ஈடுபட்டதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, எவ்வாறு அது இடம்பெற்றது எனவும், எவ்வாறு அதை எதிர்காலத்தில் தடுப்பது என்பது தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்தியதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டும் தென்னாபிரிக்காவில் வைத்து செஞ்சூரியன் மைதானத்தில் இரண்டரை நாட்களில் தோல்வியைச் சந்தித்த பின்னர் இலங்கை மீண்டு வந்த டேர்பன் மைதானத்தில் வைத்து வெற்றியைப் பெற்றுக்கொண்டதை ஞாபகப்படுத்திய மஹேல ஜெயவர்தன, இலங்கை அணியால் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்த ஆஸ்திரேலிய அணி பலமான அணி எனத் தெரிவித்த அவர், ஆனால் இலங்கை அணி தனது பலத்திற்கேற்றவாறு போட்டிகளில் பங்குபற்றுமாயின் நிச்சயமாக ஆஸ்திரேலியாவின் சவாலை எதிர்த்து வெற்றிபெற முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.


DCM
A/L - 2015 கலை வர்த்தகம்
ஆரம்பம் - 05.01.2013
நாளை காலை 9.00
யாழ். நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்

IIS வழங்கும்
கணனிக் கற்கை நெறிகளுக்கான விஷேட சலுகைகள்
மாணவர்களே!! முந்துங்கள்.... வெல்லுங்கள்......
2012 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!
உங்களுக்காகவே January மாதத்தில் கணனிக்கற்கை நெறிகளுக்கான விஷேட பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது.
இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.
இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.
ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளுங்கள்....
மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741
FREE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
07.01.2013
12.01.2013
காலை 10.00 மணி

| Certificate Courses | Diploma Courses |
|---|---|
| Certificate in Office Solution Development | Diploma in Multimedia |
| Certificate in Multimedia | Diploma in Web Development |
| Certificate in Web Designing | Diploma in Computer Programming |
| Certificate in DeskTop Publishing | Diploma in Computerized Accounting |
| Certificate in Hardware Technology | Diploma in Eng. Drawing & AutoCAD |
| Certificate in Java Programming | Diploma in Software Development |
| Certificate in Visual Programming | Diploma in Business Information System |
| Certificate in Networking | Diploma in Computer Hardware & Networking |
| Certificate in Database Management | |

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 CLOCK TOWER ROAD,JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
A/L 2015
கலை வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்:- 6.1.2013 - 9 மணி

| | | |
|---|---|---|
| ECO. சுதாகர்<br>TAM. குழந்தை<br>GEO. டினேஸ்<br>CHRI. சுஜந்தன் | B.Stu. யாழ். பிரபல ஆசிரியர்<br>H/C. பத்மராஜா<br>HIS. தாஸ்<br>DRAMA. கஜீதரன் | Acc.Mr லோஜிதன்<br>Log. வாகீசன்<br>P/Sci. ஸ்ரீரங்கநாத் |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் இலவசம்.

A/L தமிழ்
தமிழிந்திரன்
2015/14
புதிய2013Paper
Aசித்தி
உத்தரவாதம்
650/= Book Free
BEACON-யாழ்.
ச-ஞா-8.00
Tamil centre
ஊரெழு
தி-5.00
(27577)(6)

A/L 2015
TAMIL & ENGLISH MEDIUM
NEC
கணித, உயிரியல் பிரிவுகள்
CHEMISTRY S.வாசு
PHYSICS N.எடிசன்
C.MATHS P.விமலநாதன்
BIOLOGY V.A.ஞானனேந்திரன் S.சுதா
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் : 05.01.2013 சனி காலை 8.00

A/L 2015
வர்த்தகப்பிரிவு
கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.யசோதரன்
S.K.பாலசபேஸ்
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் : 05.01.2013
சனி காலை 8.00
கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : S.R.பாலா | நாடகஅரங்கியல் | : S.R. ரமேஸ் |
| விவசாயம் | : S.M.V.தேவா | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : R.R.ராஜ் |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

யூனிவேர்சல்
கந்தர்மடம்
A/L 2015 கலை, வர்த்தகம்
ஆரம்பம்
தை 5
சனி காலை 8.30
தரமான கல்விக்காக நீங்கள் எம்முடன்

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
ஜனவரி 12 ஆம் திகதி நடைபெறவுள்ள
இலங்கை திறந்த பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா
ஜனவரி 20 ஆம் திகதி நடைபெறவுள்ள
பதிவாளர் சேவை பரீட்சைக்குமான
விசேட வழிகாட்டல் வகுப்பு
06.01.2013 ஞாயிறு காலை9.00 - 5.00
By:- P. உமாசங்கர் கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P:0774696695

SUBRA - சித்தன் கேணி
கிளை வட்டுக் கோட்டை
அநேக பெற்றோரின் வேண்டுகோளிற்கிணங்க தரம் - 03 முதல் O/L வரை தமிழ், ஆங்கிலம் மொழிமூலம் புதிய பிரிவுகள் -
அனுமதிகள் 01.01.2013 முதல் 05.01.2013 வரை வழங்கப்படுகின்றன.
- எமது நிறுவனத்தில் கற்பிற்கும் ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு நிறுவனத்தில் கற்பிக்க மாட்டார்கள்.
- மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள் நடத்தி பெற்றோருக்கு புள்ளிகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதுவே எமது நிறுவனத்தின் வெளிப்பாடு.
- இன்று நேற்று அல்ல என்றென்றும் கல்விக்கு தனித்துவமான ஒரே நிறுவனம் SUBRA
- தரம் 1, 2 மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் மாலை 6-7 மணிவரை பயிற்றப்பட்ட விசேட ஆசிரியர் குழுவால் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே. பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலதிக விபரங்கள் பக்கம் 18 பார்க்கவும்.
(சி/6195)(3)

THE SCIENCE POINT
கன்னாதிட்டி வீதி, யாழ். நகர்
PHYSICAL
பிரிவுII Wed 5- 6.00, Sun 3.30- 4.30
ஆரம்பம் - 02.01.2013 Wed 5.00
பிரிவுI Sat, Sun 11.00- 12.15
INORGANIC
Sat, Sun - 12.30 - 1.30
ஆரம்பம் 05.01.2013 சனி 12.30
BY- அன்பு

A/L வரலாறு - 2015
தேசியமட்டத்திலும், மாவட்டமட்டத்திலும் வரலாறு பாடத்தில் மாணவர்கள் சாதனைமிக்க பெறுபேற்றைப்பெற வழிகாட்டிய உங்கள் ஆசான்
M.பத்மன்B.A(Hons)History M.A History)
அவர்களின் வகுப்புக்கள் 05.01.2013 (சனிக் கிழமை) ஆரம்பம்
D.M.I யாழ். நகர்
உயர்கலைக்கல்லூரி, குளப்பிட்டிச்சந்தி
(27358)(7)

DCM யாழ்.நகர்
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
A/L - 2015 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 9.00
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு P.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி

COLLEGE OF CHEMISTRY
பழம் றோட் கந்தர்மடம்

| PHYSICS | |
|---|---|
| A/L 2015<br>வகுப்புக்கள் நடைபெறுகின்றன<br>Fri Sat Sun 4.30-6.00 | A/L 2014<br>05.01.2013 ஆரம்பம்<br>அதிர்வுகளும் அலைவுகளும்<br>Sat Sun Wed 6.30-8.00 |

N.Kapilan B.Sc

THE SCIENCE CORNER
CLOCK TOWERLANE-JAFFNA
BIOLOGY 2015
பிரிவு II ஆரம்பம்
05.01.2013 சனி , ஞாயிறு
3.00-4.30pm
(C/5213)(7)
சு. பொன்திவாகரன்

தொழிற் பயிற்சிகள்
Mobile Phone Repairing
சகல Mobile Phoneகளின் Hardware, Software திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.
Batch I சனி, ஞாயிறு (காலம்: 6 மாதம்)
Batch II கிழமை நாட்கள் (காலம் 3 மாதம்)
Electronics
சகல இலத்திரனியல் உபகரணங்கள் (T.V, Phone, DVD.Receiver) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்.
Ari - Conditioning
சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறை திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்.
குறிப்பு: பயிற்சிகள் யாவும் முழுநேர செயன்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். நிறுவனங்களில் தொழில் வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்படும்.
சிங்கள வகுப்புகள்
சிங்கள மொழியில் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு படிப்பிக்கப்படும்.
Batch I சனி, ஞாயிறு 4.00pm - 5.30pm (காலம்: 6 மாதம்)
Batch II கிழமை நாட்கள் 9.00am - 11.00am (காலம் 3 மாதம்)
ஆசிரியர் K.R. குமார்
வகுப்புகள் ஆரம்பம்: 06.01.2013 (சனி, ஞாயிறு), 09.01.2013 (கிழமை நாள்கள்)
JAFFNA TECHNICAL INSTITUTE
மேலதிக விவரங்கள் நேரில்
இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0718561654
கிளை:NEW ASIAN CENTER
இல.56/15எ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0778249940


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.